# கலை அமுதம்




## பரிசளிப்பு விழா
## சிறப்பு மலர்
## 2016

### தி/கலைமகள் மகா வித்தியாலயம்
### திருக்கோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையமுதம்

# பரிசளிப்பு விழா மலர்

# 2016

திி/கலைமகள் மகா வித்தியாலயம்

அன்புவழிபுரம்

திருக்கோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்கவே

திருமலை நகரில் வளர் அன்புவழிபுரமதில்
கலைமகள் வித்தியாலயம் என்றும் வாழ்கவே
(வாழ்க)

ஆதியந்தம் இல்லாத ஆண்டவன் தெய்வம்
அன்னையும் பிதாவும் எங்கள் முன்னறி தெய்வம்
அன்போடு கலைகள் தரும் ஆசிரியர் தெய்வம்
அனுதினமும் அடிபணிந்து இனிது வாழுவோம்
(வாழ்க)

செங்கதிரும் தண்மதியும் இளந்தென்றலும்
எங்கள் கலைக்கோயில் வளர் இல்ல விளக்கை
மங்கையரும் மைந்தர்களும் மாண்பு பெறவே
பொங்கும் புகழ் பொலிகவென்று போற்றி வளர்ப்போம்
(வாழ்க)

கடமையோடு கண்ணியமும் கட்டுப்பாடும்
உடலுறுதி கலைகளோடு உயர் கலைகளும்
திடமுடனே தீந்தமிழும் சேர்ந்து தெளிந்தே
மடமையிருளைப் போக்கி ஞான மதியை வளர்ப்போம்.
(வாழ்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகுட வாசகம் - MOTTO

கல்வி, ஒழுக்கம், உயர்வு
**Education Discipline Upliftment**

# தூரநோக்கு - Vision

அறிவு மிகுந்த விஞ்ஞான உலகிற்கு ஈடு
கொடுக்கத்தக்க பிரஜைகள்
**Create enable citizens to face the challenges of the knowledgeful scientific world**

# பணிக்கூற்று - Mission

வருங்காலத்தின் சவால்களை ஆராய்ந்தறிந்து பொருத்தமான கற்றற் சந்தர்ப்பங்களை வழங்குவதன் மூலம் அறிவும் திறனும் ஒழுக்கமுமுள்ள மாணவர்களை உருவாக்கிக் கொடுத்தல்

**By providing suitable learning opportunities on determination of future challenges making an availability of disciplined pupils to the society**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DETAILS OF SCHOOL

| | | |
|---|---|---|
| ♦ Name | : | T/KalaimagalMahaVidyalayam. |
| ♦ Postal Address | : | Anpuvalipuram, Trincomalee. |
| ♦ Phone / Fax | : | 0262226468. |
| ♦ Education Zone | : | Trincomalee. |
| ♦ DS Division | : | Trincomalee Town &Gravets. |
| ♦ GN Division | : | Anpuvalipuram. - 243C |
| ♦ Email | : | kalaimagalmv@gmail.com |
| ♦ Face Book | : | kalaimagalAnpuvalipuram. |
| ♦ Founded | : | 05.01.1971 |
| ♦ Elevated to Grade 6 School | : | 1991. |
| ♦ Elevated to Grade 9 School | : | 1994. |
| ♦ Elevated to Grade O/L School | : | 1996. |
| ♦ Elevated to Grade 1C School | : | 01.05.2010. |
| ♦ School No. | : | 29071. |
| ♦ School ID | : | 1701028. |
| ♦ Census No. | : | 16079. |
| ♦ Present Grade | : | MahaVidyalayam. |
| ♦ Category | : | 1C. |
| ♦ School Colour | : | Maroon. |
| ♦ School Day | : | 5th January. |
| ♦ Prefect's Day | : | 1st November. |
| ♦ House | : | 1. Kurinchi (Blue) |
| | | 2. Mullai (Red) |
| | | 3. Neithal (Yellow) |
| | | 4. Marutham (Green) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான பிரதம குரு அவர்களின் ஆசிச்செய்தி

இயற்கை எழில் கொண்ட திருக்கோணமலை என்னும் புண்ணிய பூமியில் அன்புவழிபுரம் என்ற சிறப்பு பெயர் பெற்ற இடத்தில் அமைந்துள்ள கலைமகள் மகா வித்தியாலயம் மாணவ மாணவிகளுக்கு அறிவை வளர்க்கும் பெரும் பணியை ஆற்றி வருகிறது. இவ் வித்தியாலயம் ஒவ்வொரு வருடமும் பரிசளிப்பு விழா நடாத்தி பரிசுகள் வழங்கியும், விசேட மலர் ஒன்றும் வெளியிட்டு தனது சேவை மூலம் மாணவர்களின் ஊக்கத்தையும் திறமையையும் வளர்த்து வருகின்றது. இந்த வருடமும் (2016) பரிசுகள் வழங்கியும் மலர் வெளியிட்டும் சிறந்த ஒரு சமுதாயத்தை உருவாக்கும் பணியை செய்து வருகின்றது. இவர்களது இச்சிறந்த பணி தொடர்ந்தும் நிகழ வேண்டுமென எல்லாம் வல்ல ஸ்ரீ பத்திரகாளி அம்பாளை வேண்டிக்கொண்டு எனது நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சிவஸ்ரீ. சோ. இரவிச்சந்திரக் குருக்கள்**
ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான ஆலய
பிரதம குருவும், ஆதீன கர்த்தாவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருக்கோணமலை மறைமாவட்ட ஆயர் அவர்களின் ஆசிச்செய்தி

அலைகள் ஓயாது ஒலித்துக்கொண்டிருக்கும் திருமலை மண்ணிலே அன்புவழிபுரக் கிராமத்திலே தன்னிகரற்ற தகைமையுடன் வளர்ச்சிபடியில் வீறுநடைபோடும் தி/ கலைமகள் மகா வித்தியாலயத்தின் "கலையமுதம்" சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் இறைவனுக்குள் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

குழந்தையின் முதல் கல்விக்கூடம் தாயின் மடி என்பார்கள். அதே குழந்தை பாடசாலை வரும் போது ஆசிரியர்கள் இரண்டாவது பெற்றோராக செயற்படுகின்றனர். பிள்ளைகளின் கல்வியிலும், ஒழுக்கத்திலும் கண்ணுங்கருத்துமாக இருந்து அவர்களின் ஒவ்வொரு வளர்ச்சிப் படியிலும் பெருமிதங் கொண்டு பூரிப்படையும் அர்ப்பணிப்புள்ள அதிபர் ஆசிரியர்களை நான் இப் பாடசாலையில் கண்டேன். இச் சஞ்சிகை கூட மாணவச் செல்வங்களின் ஆக்கத்திற்கும், ஊக்கத்திற்கும் வித்திடுவதுடன் மேலும் அவர்களை பாராட்டி கௌரவிக்கும் ஒரு முயற்சியோடு கூடிய நிகழ்வே. பரிசளிப்பு நிகழ்வையொட்டி வெளிவரும் இச்சஞ்சிகையானது, கடந்த காலங்களில் கலைமகள் மகா வித்தியாலயத்தின் பல சாதனையாளர்களை கௌரவிப்பதுடன், ஏனைய மாணவர்களை ஊக்கப்படுத்தும் சிறப்பு நிகழ்வாகும்.

"துப்பாக்கியால் தீவிரவாதியைக் கொல்லலாம். கல்வியால் தீவிரவாதத்தையே கொல்லலாம்" மலாலா என்ற பெண்ணின் இக் கூற்று கல்வியால் சாதிக்க முடியாதது எதுவுமில்லை என்பதை வலியுறுத்தி நிற்கின்றது.

ஒழுக்க நெறி தவறக்கூடிய நவீனத்துவம் நிறைந்து கிடக்கின்ற இக்காலகட்டத்திலே தன்னிடம் கொடுக்கப்பட்டுள்ள மாணவச் செல்வங்களைச் சரியான திசைக்கு வழிநடத்திச் சென்றுகொண்டிருக்கும் கலைமகள் பாடசாலை அதிபர் ஆசிரியர்களை நான் பெரிதும் பாராட்டுகின்றேன். பாடசாலைக் குடும்பம் எனும் உணர்வுடன் அதிபர், ஆசிரியர்களை மதித்து அவர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றல்களைப் பயன்படுத்துவதையும் ஆசிரியர்கள் அர்ப்பணிப்போடு செயற்படுவதையும் இப் பாடசாலையில் காணக்கூடியதாக உள்ளது. "இப் பாடசாலையின் உயர்ச்சிக்கு முழுக் காரணமும் என் ஆசிரியர்களே" என்பது இப்பாடசாலை அதிபரின் கூற்று. இத் தாழ்ச்சியும் அர்ப்பணிப்பும் இவர்களால் வளர்க்கப்படும் மாணவர்களிடமும் உருவாக்கப்படும் என்பதில் ஐயமில்லை.

தி/ கலைமகள் மகா வித்தியாலயம் மேலும் வளர்ச்சியடைந்து, மாணவர்கள் கல்வியிலும், ஒழுக்கத்திலும் சிறந்து விளங்க வாழ்த்துவதுடன் இறை ஆசியும் கிருபையையும் வேண்டி நிற்கின்றேன்.

"இறைவன் உங்களை தம் உள்ளங்கையில் தாங்கி ஆசீர்வதிப்பாராக"

கிறிஸ்துவில்,
**பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்**
திருக்கோணமலை மறைமாவட்ட ஆயர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருக்கோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சித் தலைவருமான கௌரவ இரா. சம்பந்தன் அவர்கள் வழங்கும் வாழ்த்துச் செய்தி

வரலாற்றுப் பெருமைமிக்க திருக்கோணமலை பட்டினத்தின் எல்லைக் கிராமமான அன்புவழிபுரத்தில் புறநகர்ப் பாடசாலையாக விளங்கும் தி/கலைமகள் மகா வித்தியாலயம் 2016 ஆண்டிற்கான பரிசளிப்பு விழாவினையொட்டி வெளியிடவுள்ள சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றினை வழங்குவதையிட்டு பேருவகையடைகின்றேன்.

இப்பாடசாலை 1971 ஆம் ஆண்டு முதலாம் வகுப்புடன் ஆரம்பிக்கப்பட்ட ஒரு பாடசாலையாகும். அப்பாடசாலையின் தேவையும் அதன் சேவையும் கருத்திற்கொள்ளப்பட்டு 1991 ஆம் ஆண்டிலிருந்து 6 ஆம் வகுப்பு வரைக்குமான பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது. அதன் பின்னர் அங்கு கல்வி கற்ற மாணவர்களின் உயர்வகுப்புத் தேவையைப் பூர்த்தி செய்யுமுகமாக 1996 ஆம் ஆண்டு முதல் க.பொ.த (சா/த) வகுப்பு வரையான கல்விச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டு, 2010 ஆம் ஆண்டு முதல் க.பொ.த (உ/த) வகுப்பும் தொடங்கப்பட்டு அன்று அப்பாடசாலை பெருவளர்ச்சி பெற்று விளங்குகின்றது. தற்போது மகா வித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டுள்ள இப்பாடசாலை 850 மாணவர்களையும், 41 ஆசிரியர்களையும் கொண்டு கல்விச் செயற்பாட்டுடன் வேறு முன்னேற்றகரமான துறைகளிலும் மாணவர்களை ஈடுபடுத்தி வருகின்றமை பெருமைக்குரிய விடயமாகும்.

சில காலமாக நடாத்தப்படாதிருந்த பரிசளிப்பு விழாவினை 2014 மற்றும் 2015 ம் ஆண்டுகளுக்கான பரிசளிப்பு விழாவாக நடாத்த பாடசாலை நிர்வாகம் முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய செயற்பாடாகும். இவ்விரு ஆண்டுகளிலும் பாடசாலை மட்டத்தில் பிள்ளைகள் பெற்ற சிறப்புக்களுக்கான பரிசளிப்புடன் தேசிய மட்டத்தில் விருது பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பும் நடைபெறவுள்ளமை சிறப்பம்சமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்குறிப்பிட்ட கால எல்லையுள் நூலக வாரத்தையொட்டி தேசிய மட்டத்தில் நூலகங்களுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டியில் தேசிய விருதைப் பெற்றுக்கொண்டுள்ளமையும், தேசிய மட்டத்தில் சமூக விஞ்ஞானப் போட்டியில் பங்குபற்றிய மாணவர்கள் 1ஆம், 3ஆம் இடங்களைப் பெற்றுக்கொண்டமையும் இந்து சமய, கலாசாரத் திணைக்களத்தினால் தேசிய மட்டத்தில் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் 2ஆம் வகுப்பு மாணவன் 2ம் பரிசைப் பெற்றுக்கொண்டமையும், அதேபோன்று தேசிய மட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான சித்திரம் வரைதல் போட்டியில் பாடசாலையின் அவ்விசேட பிரிவைச் சேர்ந்த ஒரு மாணவன் தேசிய விருதைப் பெற்றமையும் பாராட்டுக்குரிய நிகழ்வாகும்.

இத்தகு சிறப்புக்களைப் பெற்று விளங்கும் பாடசாலை தனது பரிசளிப்பு விழா தொடர்பில் வெளியிடவுள்ள சிறப்பு மலரானது பாடசாலையின் வரலாற்றினைத் தாங்கிவரும் திடகாத்திரமான ஆவணமாக மலர்ந்து மணம் வீசிட எனது உளம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, இப்பாடசாலை மென்மேலும் வளர்ச்சி கண்டு இம் மாவட்டத்தின் கல்வி உயர்வுக்காகச் சிறந்த பங்களிப்பினைச் செய்ய வேண்டுமெனவும் வாழ்த்துகின்றேன்.

**இரா. சம்பந்தன்**
பாராளுமன்ற உறுப்பினர்
எதிர்க்கட்சித் தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருக்கோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ க. துரைரெட்ணசிங்கம் அவர்களின் வாழ்த்துச்செய்தி

திருக்கோணமலை புனித பூமியில் தவத்திருகுன்றக்குடி அடிகளார் அவர்களினால் "அன்புவழிபுரம்" எனப்பெயர் சூட்டப்பட்ட அழகு நிறைந்த கிராமம் இது. இக் கிராமத்தின் மத்தியில் கல்வித்தெய்வமாகிய கலைமகள் நாமத்துடன் அமைந்து கல்வியினைக்குறைவின்றி வழங்கி வருவது கலைமகள் வித்தியாலயம். இவ் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் அதன் ஆவணமாக வெளிவரும் சிறப்பு மலருக்கும் வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

கல்வி இணைப்பாடவிதான முயற்சிகளில் திறமை காட்டும் மாணவர்கள் பாராட்டப்படுவதும், இதிலிருந்து தவறும் மாணவர்களை ஊக்கப்படுத்தி திறமை காட்ட வைப்பதும் ஒவ்வொரு வருடமும் பாடசாலைக்கு நிகராக இவ்வித்தியாலயமும் வளர்ச்சியடைய வேண்டும் என மனதார வாழ்த்துகிறேன்.

இவ் விழாவிற்கும், இம்மலர் வெளியீட்டிற்கும் உழைத்த அனைத்து நல் உள்ளங்களிற்கும் எனது வாழ்த்துக்களை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. துரைரெட்ணசிங்கம்**
பாராளுமன்ற உறுப்பினர்
திருக்கோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் அவர்களின் வாழ்த்துச்செய்தி

திருக்கோணமலை புறநகர்ப் பகுதியில் அமைந்துள்ள பழந்தமிழ்க் கிராமமான அன்புவழிபுரத்தில் அமைந்துள்ள தி/கலைமகள் மகா வித்தியாலயத்தின் 45வது அகவையில் பரிசளிப்பு விழாவையொட்டி வெளியாகும் "கலையமுதம்" சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

பல்வேறு துறைகளிலும் இக்கல்விக்கூடம் தேசிய, மாகாண, மாவட்ட சாதனைகளைப் புரிந்து முன்னேற்றம் கண்டுவருகின்றது. கல்வி வளர்ச்சியும், முன்னேற்றகரமாக அமைகின்றது. இதற்காக அர்ப்பணிப்புடன் ஒத்துழைக்கும் ஆசிரியர்கள் பெற்றோர், நலன்விரும்பிகள் பாராட்டுக்குரியவர்கள்.

இத்தகைய பரிசளிப்பு வைபவங்களை ஊக்கப்படுத்துவதுடன், அவர்களிடையே ஆரோக்கியமான உந்துதலை ஏற்படுத்தி சாதனைகளையும், பெறுபேறுகளையும் மேம்படுத்த உதவும்.

வகுப்பறை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்காக மேலதிகமாக மாணவர்களின் பல் துறை சார்ந்த வளர்ச்சிக்கு வித்திடக் கூடிய வகையில் பாடசாலையின் செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட வேண்டியது அவசியமாகும். பாடசாலை சமூகத்தின் பங்களிப்பும் இதற்கமையப் பெற்றுக்கொள்ளப்படும் போது பாடசாலையின் வளர்ச்சி உன்னதமாக அமையும்.

இப்பாடசாலையின் 45வது அகவையில் நடைபெறும் இப்பரிசளிப்பு விழா, ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள் மத்தியில் பாடசாலை வளர்ச்சி பற்றிய ஒரு உத்வேகத்தை தரும் என நம்புகின்றோம்.

எல்லோருக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. சி. தண்டாயுதபாணி**
கல்வி அமைச்சர்
கிழக்கு மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

அலை கடல் ஆர்ப்பரிக்கும் அழகொளிர் திருக்கோணமலையில் அமைந்திருக்கும் அன்புவழிபுரக் கிராமத்தின் மத்தியில் கல்வித்தெய்வமாகிய கலைமகள் உடன் உறைந்த கல்வி ஒளி வீசிக்கொண்டிருக்கும் கலைமகள் மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா மலரான "கலை அமுதம்" வெளிவருவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

1971 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை 2010 இல் க.பொ.த உயர்தர வகுப்புகளுடன் தரம் உயர்த்தப்பட்டது. இப் பாடசாலை சுமார் 3 கி.மீ சூழலில் இருந்து வரும் மாணவர்களை உள் வாங்கி உத்வேகத்துடன் செயலாற்றி வருவது சிறப்பானதொன்றாகும்.

பிள்ளைகளின் அறிவில் நடத்தைகளில் நிரந்தரமான மாற்றங்களை உருவாக்க வேண்டிய பொறுப்பு பாடசாலை அதிபர் ஆசிரியர்களிடமே உண்டு. நற்பிரஜைகளுக்குரிய எண்ணங்கள் சிந்தனைகள் உணர்வுகள் என்பவற்றை பாடசாலை இலக்குகளாக வடிவமைத்து அவற்றைச் செயல்படுத்தல் வேண்டும். இந்த வகையில் குறுகிய கால வளர்ச்சியில் பல்வேறு செயற்பாடுகளையும் தேசிய மட்டச் சாதனைகளையும் படைத்து கலைமகள் மகா வித்தியாலயம் வளர்ச்சி அடைந்துகொண்டிருப்பது மிகவும் பாராட்டப்படவேண்டிய விடயமாகும்.

பரிசளிப்பு விழா போன்ற செயற்பாடுகளில் மாணவர்களின் தேடல், திறன், ஆற்றல் என்பன ஊக்கப்படுத்தப்பட்டு அவை ஆவணப்படுத்தப்படுவது வரவேற்கத்தக்க விடயமாகும்.

இந்த நிகழ்விற்கு வழிகாட்டியாகவுள்ள வினைத்திறன் மிக்க அதிபர், அவரோடு சேர்ந்து ஒத்துழைக்கும் ஆசிரியர்கள், பாடசாலைச்சமூகம், ஆகியோருக்கு எனது நல்லாசிகளை வழங்குவதோடு எதிர்காலத்தில் இப்பாடசாலை கல்லூரியாக தரம் உயர்த்தப்பட வேண்டும் என வாழ்த்துகிறேன்.

**ஜனாப். எம்.ரி.ஏ.நிஸாம்**
மாகாணக்கல்விப் பணிப்பாளர்
மாகாணக்கல்வித் திணைக்களம்
கிழக்கு மாகாணம், திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வலயக்கல்விப் பணிப்பாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

திருமலையின் தனித்துவம்மிக்க பாடசாலைகளுள் ஒன்றாக விளங்கும் தி/ கலைமகள் மகா வித்தியாலயம் கிராமிய சூழலில் அமைவு பெற்றிருந்தாலும், நகரப் பாடசாலைகளின் வளர்ச்சிக்கு இணையாக வளர்ச்சியினை ஏற்படுத்துவதனை நோக்காகக் கொண்டு பாடசாலை சமூகம் செயற்பட்டு வரும் இக் காலகட்டத்திலே நடாத்தப்படவிருக்கும் பரிசளிப்புவிழா நிகழ்விற்கும், "கலையமுதம்" என்னும் சஞ்சிகை வெளியீட்டு நிகழ்விற்கும் எனது மனம் நிறைந்த பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

பாடசாலையில் பரிசளிப்புவிழா என்பது மாணவர்களின் கற்றல் அடைவுகள், ஆக்கத்திறன்கள், இணைப்பாடவிதானச் சாதனைகள் என்ற அனைத்தையுமே வழங்கப்படுகின்ற கௌரவத்தின் மூலம் ஊக்கமளிக்கின்றதோர் செயலாக அமைகின்றது. இதன் மூலம் மாணவர்கள் ஏதோ ஒரு துறையில் கௌரவத்தைப் பெறுவதோடு, ஏனையோருக்கு முன்மாதிரியாக செயற்படுவதும், வாழ்க்கைக்குத் தேவையான பலதிறன்களையும் பெற்றுக்கொள்கின்ற நல்ல சமூகப் பிரஜையாக மாற்றுகின்ற கலைக்கூடமாக செயற்படும் இப்பாடசாலை ஆசிரியர்களையும், மாணவர்களையும் சாதனைக்கு தூண்டுவது பாராட்டுக்குரியது. மேலும் ஓர் சமூகமானது பாடசாலை மீது கொண்டுள்ள உறவும் கரிசனையும் அப்பாடசாலை ஒழுக்காற்றிலும், வளர்ச்சியிலும், பாதுகாப்பிலும் பெரும் பங்கு வகிக்கின்றது என்பதை இவ்விழாவின் முயற்சி மூலம் பரிணமிப்பதைக் காணமுடிகின்றது.

பாடசாலையில் கிடைக்கப்பெறுகின்ற கௌரவங்கள் அனைத்து மாணவர்களையும் சாதனை செய்யத் தூண்ட வேண்டும். அதற்கான அனைத்து அனுசரணைகளையும் பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பாடசாலை நிர்வாகத்தினர் என அனைத்து தரப்பினரும் சகல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுக்கும் பெற்றுக்கொடுக்க வேண்டிய கடப்பாடுடையவர்களாகின்றனர்.

இப்பாடசாலை எதிர்காலத்தில் கல்வித்தர ரீதியாக மேலும் பல சாதனைகளை பெறுவதற்கான முயற்சியில் தொடர்ந்தும் பங்காற்றுவதற்கான உந்து சக்தியினை இறைவன் அனைவருக்கும் வழங்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து நிறைவு செய்கிறேன்.

"முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்"

**திரு. ந. விஜேந்திரன்,**
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருக்கோணமலை கோட்டக்கல்விப் பணிப்பாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

கலைமகள் மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவின் சிறப்பு மலரான கலைஅமுதம் வெளிவருவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

மாணவர்களின் ஆக்கங்கள் எழுத்துருவம் பெற்று ஆவணப்படுத் தப்படல் வேண்டும். இவ்வாறான நிகழ்வுகள் பாடசாலைகளில் நடைபெறுவது மிகவும் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். மாணவர்களின் அறிவுத்தேடல்களை அவர்களது வாழ்க்கைக்குப் பயன்படுத்திக்கொள்ள வழிகாட்ட வேண்டியது பாடசாலைகளின் முக்கிய பணியாகும். இந்தவகையில் கலைமகள் மகாவித்தியாலயத்தின் செயற்றிறன் வாய்ந்த அதிபர், அவரோடு இணைந்து செயற்படும் ஆசிரியர்குழாம், ஏனையோர்களது அயராதமுயற்சியின் வெளிப்பாடே சிறந்த பொதுப் பரீட்சை முடிவுகளாகும். இப்பரீட்சைப்பெறுபேறுகளை மேலும் அதிகரிப்பதற்கு அதிபர், ஆசிரியர்களால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுக்கு பெற்றோர்கள், அன்புவழிபுரக் கிராமமக்கள் மேலும் ஒத்துழைப்புக்களை வழங்கவேண்டும் என்பது எனது எண்ணம். அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் தான் இப்பாடசாலை பல்வேறு அபிவிருத்திகளைஅடையும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

மேலும் இப்பரிசளிப்புவிழா, மலர்வெளியீடு அனைத்துக்கும் அயராது உழைத்த அதிபர், பிரதிஅதிபர், ஆசிரியர்கள் ஏனைய பாடசாலைசார் சமூகத்தினர் அனைவரையும் நான் வாழ்த்துகின்றேன்.

**திரு. K. செல்வநாயகம்,**
கோட்டக்கல்வி அலுவலர்,
திருக்கோணமலை கோட்டம்,
திருக்கோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலை அதிபர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 45 வது அகவையில் நடைபெறும் பரிசளிப்பு விழாவையொட்டி வெளிவரும் சிறப்பு மலரான 'கலையமுதம்' மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். எமது மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் ஆக்கங்களையும் பாடசாலை தொடர்பான தகவல்களையும் உள்ளடக்கிய ஒரு வரலாற்று ஆவணமாக இது திகழ்கின்றது.

புறநகர்ச் சூழலில் பல்வேறு சுமைகளைத் தாங்கி ஆசிரியர்களினதும் சமூகத்தினதும் கல்வி அதிகாரிகளினதும் ஒத்துழைப்புடன் மிகச் சிரமத்தின் மத்தியில் சகல துறைகளிலும் முன்னேற்றம் கண்டுவரும் இப் பாடசாலை நீண்ட காலத்தின் பின்னர் இம்மலரை வெளிக்கொண்டு வருவதற்கு தமது ஆற்றல்களையும் அர்ப்பணிப்புக்களையும் பங்களிப்பையும் வழங்கிய மாணவர்கள், பிரதி அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள், சிவில் சமூக அமைப்பினர், மலர்க்குழுவினர்கள் மற்றும் இதழாசிரியர்களான திருமதி. S.மணிவண்ணன், திருமதி. P.ஹசன் மற்றும் முன்னாள் அதிபர் திருமதி. S.இராமநாதன் ஆகியோருக்கு எனது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாடசாலைச் சமூகம் இப் பாடசாலை தமக்குரியது என்பதை மனதில் நிறுத்தி செயற்படும் போது இப் பாடசாலையின் வளர்ச்சி பன்மடங்கு அதிகரிக்கும். இதனை அடைவதற்கு அனைவரும் ஒன்றுபட்டு உழைப்பதுடன் எதிர்காலத்தில் இப் பாடசாலை மேன்மேலும் பல சாதனைகள் புரிந்து உயர்வடைய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**திரு. K. ரவிதாஸ்,**
அதிபர்
தி/கலைமகள் மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலை பிரதிஅதிபர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

தி/கலைமகள் மகாவித்தியாலயத்தில் வெளியிடப்படவுள்ள பரிசளிப்பு 'கலையமுதம்' மலருக்காக வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இச்சஞ்சிகையில் மாணவர்களினதும், ஆசிரியர்களினதும், சமூகத்தினரதும் ஆக்கங்களை உள்வாங்கி ஒரு நிறைவான சஞ்சிகையாக காண்கின்றேன். இப்பரிசளிப்பு விழா மாணவர்களையும், பெற்றோர்களையும் கல்வியில் விழிப்படையச் செய்யும் என்பது தெளிவு.

நகரச் சூழலின் தாக்கமும் கிராமிய விழுமியங்களை உள்ளடக்கிய இம்மகாவித்தியாலயம் பல சவால்களை எதிர்நோக்கினாலும், அதிபர், திரு.க.ரவிதாஸ் அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிருவாகத்திறமையின் காரணமாக தேசியமட்டப் பரீட்சைகளிலும், தேசியமட்டப் போட்டிகளிலும், இணைப் பாடவிதானப் போட்டிகளிலும் பலசாதனைகளைப் படைத்து தனக்கென ஓர் இடத்தினைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

கல்வியில் அயல் சமூகத்தின் தாக்கம் மிகமுக்கியமான இடத்தினை பெற்றாலும், அச்சவால்களையும் சிரித்த முகத்துடன் எதிர்நோக்கி தனது தனித்துவமான பாதையில் இப்பாடசாலையினை வழிநடத்தி செல்லுகின்ற அதிபரின் அயராத முயற்சியும், ஆசிரிய குழாத்தினரின் தியாக சிந்தனையையும் பாராட்டுகின்றேன்.

இப்பரிசளிப்பு விழாவும் சஞ்சிகை வெளியீடும் சிறப்பாக வெற்றிபெற எனது இதயபூர்வமான நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. இரா. பரசுபாணி**
பிரதி அதிபர்
தி/கலைமகள் மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் அவர்களின் வாழ்த்துரை

கிழக்கிலங்கையின் கோணநாதர் பதியாகிய திருகோணமலை திருத்தலத்தின் நகரத்தை அண்டிய பகுதியில் அமைந்துள்ள அன்புவழிபுரம் எனும் பதியில் கலைமகளின் அருட்கடாட்சம் பெற்று நாற்பத்து ஐந்து வருடங்களாக படிப்படியான வளர்ச்சி பெற்றுவரும் தி/கலைமகள் மகாவித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஏழை ஒருவனுக்கு எழுத்தறிவித்தலே தலையான அறம் என்பது சான்றோர் வழிவந்த கொள்கையாகும். இக் கொள்கைக்கு ஏற்ப மிக அதிகளவான ஏழைமாணவர்களினது கல்வி, ஒழுக்கம் என்பனவற்றின் உயர்ச்சியில் உன்னதமான ஈடுபாட்டோடு உழைத்துவரும் இம் மகாவித்தியாலயத்தினது பெறுமதி குறித்து சகலரும் அறிந்தவர்களாக உள்ளோம். எமது ஒட்டு மொத்த முயற்சியின் விளைவாக பாடசாலை அபிவிருத்தி அடைவதோடு சமூக மாற்றத்திற்கும் வழிவகை ஏற்படும்.

நகரப்புறப் பாடசாலைகளின் வளப்பகிர்வோடு சமநிலையில் எமதுபாடசாலை நிற்கமுடியாது விட்டாலும்கூட, இருப்பதைக் கொண்டு பெரும் பயன் அடைவோம் எனும் கொள்கையோடு கல்வி வளர்ச்சியில் நன்னிலையிலேயே இருக்கின்றோம். தேசிய பரீட்சைகளிலும், ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் எமது மாணவர்கள் சிறந்த முன்னேற்றத்தைக் கண்டிருக்கின்றனர்.

எமது மாணவர்களினது அறிவு, திறன், மனப்பாங்கில் மாற்றத்தினையும், வளர்ச்சியையும் ஏற்படுத்தும் செயற்பாடுகளில் ஒன்றாகிய வருடாந்த பரிசளிப்பு விழா சிறப்பாக அமைவதோடு சிறந்த பயன்மிக்க விழாமலர் வெளிவருவதையிட்டு சந்தோசமடைவதோடு பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள் சார்பாகவும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.வே.சுந்தரராஜன்,**
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழாசிரியர்களின் இதயத்திலிருந்து.....

கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த திருக்கோணமலையின் மேற்கே, தி/ கலைமகள் மகா வித்தியாலயக் குழாத்தினராகிய நாம் பரிசளிப்பு விழாவும், கலையமுதம் சஞ்சிகை வெளியீடும் செய்வதில் பெருமையடைகிறோம்.

இச் சஞ்சிகையில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களின் ஆக்கங்கள் இடம் பெற்றிருப்பது பாராட்டுதற்குரியதாகும். அத்துடன் பாடசாலை வரலாற்றைக் கூறி நிற்கும் ஒரு மூலாதாரத் தூண் ஆகும்.

இச் சஞ்சிகையில் மாணவர்களின் ஆக்கங்கள் மட்டுமல்லாமல் விருதுகள், பரிசில்கள், பாராட்டுக்கள், படங்கள், போன்றவையும் நிரற்படுத்தப்பட்டிருப்பது எமது பாடசாலைக்குக் கிடைத்த பொக்கிஷம் ஆகும்.

இக் கலையமுதம் சஞ்சிகையானது உருவாகுவதற்கும், வெளிவருதற்கும் ஆலோசனைகள் வழங்கி, வழிகாட்டி வைத்த எமது பாடசாலையின் அதிபர் அவர்களுக்கு இவ் வேளையில் நன்றிகளைக் கூறிக்கொள்கிறோம்.

அத்துடன் இச் சஞ்சிகை வெளிவருவதற்கு உறுதுணையாக இருந்த பிரதியதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட அனைத்து உள்ளங்களுக்கும், ஆக்கங்களை தந்துதவியவர்களுக்கும், இச் சஞ்சிகையை அச்சிட்டு நூலுருவில் தந்த எஸ்.எஸ். டிஜிட்டல்ஸ் பிரிண்டர்ஸ் நிறுவனத்திற்கும் என் உளம் கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

இனி வரும் காலங்களில் எமது பாடசாலையின் பரிசளிப்பு விழாவும், "கலையமுதம்" சஞ்சிகையும் மேன்மேலும் விரிவு பெற்று எம் அனவருக்கும் வலம்புரியாய்த் திகழ வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

**இதழாசிரியர்கள்**
**திருமதி. செ. மணிவண்ணன்**
**திருமதி. மே.பி. ஹஸன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு

| | | |
|---|---|---|
| ஆலோசகர்கள் | : | திரு. க. ரவிதாஸ் அதிபர் |
| | | திரு. இ. பரசுபாணி பிரதி அதிபர் |
| இணையாசிரியர்கள் | : | திருமதி. செ. மணிவண்ணன் |
| | | திருமதி. மே. பி. ஹசன் |
| உறுப்பினர்கள் | : | திருமதி. ச. முருகுப்பிள்ளை |
| | | திருமதி. கு. விஜேந்திரன் |
| | | திருமதி. ஷி. ஜொ. ரு. எமில்ரைன் |
| | | திருமதி. கு. ஹம்சத்வனி |
| | | திருமதி. ஜோ. நித்தியகுமார் |
| | | திரு. அ. அதிஸ்டலிங்கம் |
| | | திருமதி. ஜெ. சதீஸ் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

01. அதியர் அறிக்கை
02. பாடசாலை வரலாறு
03. தி/கலைமகள் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றிய அதிபர்கள்
04. Anpuvalipuram Catchment Area
05. Landscape of School building
06. முதல் நாள் சம்பவத் திரட்டுப் பிரதி
07. பாடசாலைப் பெயர் மாற்றக் கடிதப் பிரதி
08. க.பொ.த (உ/த) கலைப்பிரிவு ஆரம்பிப்பதற்கான கடிதப் பிரதி
09. அன்புவழிபுரத்தின் தோற்றமும் வளர்ச்சியும்
10. விகடத் துணுக்குகள்
11. நினைவில் நிஜங்கள்
12. கறிவேப்பிலைகளா நாங்கள்?
13. நான் விரும்பும் தொழில்
14. தீ அனர்த்தங்களினால் ஏற்படும் அழிவுகளைத் தவிர்ப்பதற்கான ஆலோசனைகள்
15. தடைகளைத் தாண்டி...
16. சின்ன ரோஜாவே...!
17. உதவிக்காய் ஏங்கும் உள்ளங்கள்
18. வெண்ணிலா
19. Modern Ways of Communication Internet
20. ஆட்களைக் கொல்லும் தங்கம் (சிறுகதை)
21. பூக்கள்
22. இயற்கை அழிவு
23. வாழக் கற்போம்!
24. சுவர் இருந்தால் தான்...
25. வளர்மதியாய் என் பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. கல்வி

27. சுகமா? சுமையா? அதிபர்கள் தாங்குவார்களா?

28. மெல்லக் கற்கும் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

29. அன்புப் பரிசு

30. தண்டனை

31. தீப்பெட்டி / நெருப்பே!

32. தமிழ் பேசு!

33. மனிதனை மனிதனாக வாழவைக்கும் இந்துமதம்

34. பூக்கள்

35. பரிசளிப்புப் பனுவற் புதுமையே!

36. விடுகதைகள்

37. எமது விசேட கல்வி அலகின் வளர்ச்சிப் போக்கு

38. சிந்தனைத் துளிகள்

39. என் தாயே உன்னை நான் போற்றுகின்றேன்

40. நான் ஒரு பறவையானால்...!

41. கணித நுட்பங்கள்

42. பகவத் கீதை சொல்லும் வாழ்க்கை

43. பப்பா பாப்பா கதை கேளு!

44. மாணவர் இடைவிலகலில் ஆசிரியரின் பங்களிப்பு

45. Tips for protecting your computer from viruses

46. எங்கள் வீட்டுப்பூனை

47. அந்த மூன்று நாட்கள் (சிறுகதை)

48. இளமையிற் கல்வி

49. புதியதோர் சமுதாயம் உருவாக்க வித்திடும் ஆசான்கள்

50. யானை பழிவாங்கியது (குட்டிக்கதை)

51. கவிதைத் துளிகள்

52. மனிதன் மாற வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53. காற்றே நீ மெல்ல வீசு!
54. மரங்களைக் காப்போம்!
55. துண்டுப்பிரசுரம்
56. வேலைக்காரனும் பொக்கிஷமும்
57. சக்திகட்கு ஒரு விழா!
58. சர்வதேச சிறுவர் தினம்
59. பெருமை
60. வனப்பாதுகாப்பு
61. விடுகதைகள்
62. முயற்சி
63. நாட்டுப்பற்று
64. சிந்திக்க சில வரிகளும் சில நிமிடமும்
65. இலங்கையும் விவசாயத்துறையும்
66. ஐக்கிய நாடுகள் சபையும் அதன் செயற்பாடுகளும்
67. விடுகதைகளும் விடைகளும்
68. Grade - 5 Scholarship Results 2008 - 2015
69. G.C.E .O/L Results Analysis 2009 - 2014
70. G.C.E . A/L Results Analysis 2012 - 2015
71. பரிசு பெறுவோர் விபரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our Principal



## Mr.K.Ravithas (SLPS-II)
**BA, PGDE, M.Ed**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அறிக்கை

வடக்கே பனிபடர்ந்த கைலாயத்தின் நேரே, தெற்காக விளங்கும் தட்சண கைலாயம் எனும் திருக்கோணேஸ்வரப் பதியாம் திருக்கோணமலையின், மேற்கு நகர் வாயிலில் அமைந்துள்ளது குளமும் குளம் சார்ந்த பசுமை கொஞ்சும் பயிர் நிலங்களும் சூழ்ந்த அன்புவழிபுரம் தி/கலைமகள் மகா வித்தியாலயம்.

1971.01.05 எமது வித்தியாலயத்தின் பொன்னாள். அன்று பிரசவித்த எமது பாடசாலை, ஆரோகணமாக வளர்ந்து இன்று 45வது அகவையில் வெற்றி நடை போட்டுத் திகழ்கின்றது.

இதற்கு அயராது உழைத்த அதிபர்களை நாம் இவ்வேளையில் நினைத்து போற்றக் கடமைப்பட்டுள்ளேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| திரு. மு. மகாதேவன் | - | 05.01.1971 | - | 20.031971 |
| திரு. இ. தேவநாயகம் | - | 01.08.1971 | - | 29.05.1978 |
| திரு. க. சிவப்பிரகாசம் | - | 30.05.1978 | - | 21.11.1985 |
| திரு. எஸ். தேவதாஸன் | - | 22.11.1985 | - | 15.05.1987 |
| திரு. மா. கந்தையா | - | 15.05.1987 | - | 17.04.1991 |
| திருமதி. அ. சண்முகநாதன் | - | 18.04.1991 | - | 23.07.1992 |
| திரு. நா. இராஜநாதன் | - | 19.08.1992 | - | 31.12.1996 |
| திரு. கோ. ஶ்ரீஸ்கந்தா | - | 06.01.1997 | - | 11.11.2007 |
| திருமதி. ச. இராமநாதன் | - | 12.11.2007 | - | 31.08.2008 |
| திரு. வே. ஶ்ரீஸ்கந்தராசா | - | 01.09.2008 | - | 31.12.2009 |
| திருமதி. ச. இராமநாதன் | - | 01.01.2010 | - | 04.07.2010 |

இவர்களின் அயராத முயற்சியால் எமது பாடசாலை பல படிகளாக முன்னேற்றமடைந்து உயர்ச்சி பெற்று இன்று மகாவித்தியாலயமாக திகழ்கிறது.

1991 - Gr 6 - Type III
1994 - Ge 9 - Type II
1996 - G.C.E (O/L) - Type II
2010 - G.C.E (A/L) - 1C

### எமது பாடசாலையின் கல்வி சார்ந்த சாதனைகள்

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையும், க.பொ.த (சா/த) பரீட்சை, க.பொ.த (உ/த) பரீட்சை பெறுபேறுகள் மூலமாக எமது மாணவர்கள் சாதனை படைத்து பாடசாலைக்கு புகழைத் தேடி தந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5ம் தரம் புலமைப் பரிசில் பரீட்சையில் 2014ம் ஆண்டு வெளியான முடிவின்படி 150 வெட்டுப்புள்ளிக்கு மேல் 11 மாணவர்கள் பெற்றும், 70 புள்ளிக்கு மேல் 43 மாணவர்கள் பெற்றும், சான்றிதழ்களைப் பெற்றுள்ளனர். இப் பெறுபேறானதுகடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் அதிகரித்த போக்கைக் காட்டுகின்றது. எமது ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள், பகுதித் தலைவர்களின் ஒட்டுமொத் முயற்சியின் பலனாக இவ் வெற்றி கிடைத்துள்ளமையை மறுக்க முடியாது.

சென்ற வருட க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறுகளின் அதிசிறந்த பெறுபேறாக 9A பெற்றதோடு, அதிகமான மாணவர்கள் க.பொ.த (உ/த) ற்குத் தகுதி பெற்றுள்ளனர். இவர்களுள் உயர்தர விஞ்ஞான, கணித, தகவல் தொழிநுட்ப பிரிவுகளை தேர்ந்து, கல்வி பயில விரும்பிய மாணவர்கள் நகர்ப்புற பாடசாலைகளில் கற்க வேண்டிய சூழ்நிலை காணப்படுகிறது. கலைப்பிரிவிலும் பொருளியல் போன்ற பாடத் தெரிவு செய்யும் மாணவர்கள் நகர்ப்புறப் பாடசாலைக்குச் சென்று கற்கின்றனர். கலைப்பிரிவு மாணவர்கள் எமது பாடசாலையில் தொடர்ந்தும் கற்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். இத்தகைய உயர்ச்சிக்கு அல்லும் பகலும் அயராது உழைத்த அந்த ஆசிரியர்களையே பாராட்ட வேண்டும்.

கடந்த வருடம் க.பொ.த (உ/த) பெறுபேறுகள் ஏனைய வருடங்களை விட அதிகரித்த வீதத்தைக் காட்டுகிறது. எமது மாணவிகள் J.டுபாசினி, S.லேவண்யா பல்கலைக்கழகத்திற்குச் சென்று பாடசாலைக்கு பெருமை தேடித் தந்தனர். தொடர்ந்து 2015இல் பரீட்சைக்கு தோற்றிய அனைத்து மாணவர்களுக்கும் 100 வீத சித்தியை பெற்றனர்.

## இணைப்பாடவிதான செயற்பாடுகள்

◈ ஆரம்பக்கல்வி போட்டிகள்

எமது ஆரம்பப் பிரிவு தரம் 3, 4, 5 மாணவர்கள் வலய, மாகாண, தேசிய மட்ட போட்டிகளில் பங்கு பற்றி பல நிகழ்ச்சிகளிலும் வெற்றி பெற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

◈ தமிழ்மொழித்தினம்

வலயமட்ட தமிழ்தினப் போட்டியில் பல நிகழ்ச்சிகளிலும் எமது மாணவர்கள் வெற்றிகளை ஈட்டியுள்ளனர். குறிப்பாக இ. லக்ஷனா இலக்கணப் போட்டி பிரிவு 1இல் முதலாம் இடத்தையும், பு. கீர்த்திகா கட்டுரை ஆக்கம் பிரிவு 5இல் முதலாம் இடத்தையும் பெற்று வெற்றியீட்டியுள்ளனர். கடந்த வருடம் செல்வி. த. ரூபா பேச்சுப் போட்டி தேசிய மட்டத்தில் பங்கு பற்றியமை பெருமைக்குரிய விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◈ ஆங்கிலதின போட்டி

வலய மட்டத்தில் நடாத்தப்பட்ட ஆங்கில தினப்போட்டி நிகழ்ச்சிகளில் எமது மாணவர்கள் கலந்து வெற்றியைப் பெற்றனர். குறிப்பாக செள. சேலக்ஷிகா Dictation பிரிவு 4 இல் முதலாம் நிலையையும், ஞா. நிதர்சனா பிரிவு 2 இல் இரண்டாம் நிலையையும் பெற்று வெற்றியீட்டினர்.

◈ விளையாட்டு

கடந்த வருடம் இடம்பெற்ற கோட்ட, வலய, மாவட்ட, மாகாண மட்டப் போட்டிகளில் எமது மாணவர்கள் பங்குபற்றி வெற்றியீட்டி உள்ளனர். தேசிய மட்டத்திற்கு எமது மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டமை பெருமைக்குரியதே.

◈ சமூக விஞ்ஞானப் போட்டி

தேசிய மட்டத்தில் வெற்றி பெற்று எமது மாணவர்கள் செள. சேலக்ஷிகா மூன்றாம் இடத்தையும், செள. கனேசிகா முதலாமிடத்தையும் பெற்றுள்ளனர்.

◈ வேதாகமம் / அறநெறி

தேசிய மட்டப் போட்டியில் வெற்றியாளராக செல்வி. வி. பியூலா இரண்டாம் இடத்தைத் தட்டிக் கொண்டுள்ளார். அறநெறிப் பேச்சுப் போட்டியில் அ. கிகாசன் தேசிய மட்டத்தில் வெற்றியீட்டியுள்ளார்.

◈ விசேட கல்வி அலகு

எமது விசேட கல்வி அலகு மாணவர்களும் சளைத்தவர்களல்ல. பாடசாலை, வலய, மாகாண, தேசிய மட்ட ஆக்கப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியீட்டியுள்ளனர். அ. கிஷாந் சித்திரப் போட்டியில் தேசிய மட்டத்தில் வெற்றியீட்டியுள்ளார்.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், பழைய மாணவர் சங்கமும்

எமது பாடசாலையின் நிர்வாகத்திற்கு முழு ஒத்துழைப்பும், உதவிகளையும் சேவைகளையும் வழங்கி வலதுகரமாக நின்று உழைக்கின்றமை சிறப்புக்குரியதாகும். எமது பாடசாலையின் முழு நிதிபலமுமே பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பது இங்கு முக்கியமாகக் குறிப்பிடவேண்டும். அதற்குப் பக்கபலமாக பழைய மாணவர் சங்கம் அமைந்திருப்பதும் எங்கள் பாக்கியமாகும்.

## ஆளணி வளம்

எமது பாடசாலையில் 750 மாணவர்களும், 41 ஆசிரியர்களும், 2 கல்வி சாரா ஊழியர்களும், ஒரு தொண்டர் ஆசிரியரும் (N.R.C) ஒரு தொண்டர் ஊழியரும் (சுத்திகரிப்பு) உள்ளனர். ஆளணி வளமானது சில சந்தர்ப்பங்களில் பாதிப்புறுவது பாடசாலையின் அபிவிருத்திக்குக் குந்தகமாக அமைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாண்டில் மூன்று சிரேஷ்ட ஆசிரியர்கள் ஓய்வு பெற்றுள்ளனர். அவ்விடத்திற்கு மேலும் மூன்று ஆசிரியர்களின் தேவை ஏற்பட சந்தர்ப்பம் காணப்படுகிறது. இவ்வேளை இப்பாடசாலையின் கற்றல் கற்பித்தல் சூழலை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில் எனது தேவைகளையும் இவ்விடத்திலும் குறிப்பிடுவது பொருததம் என எண்ணுகிறேன்.

### ஆளணி தேவைகள்

பாடசாலையின் சுற்றுப்புற அழகினை, கவின்நிலையைப் பேணுவதற்குச் சுத்திகரிப்பு தொழிலாளி ஒருவர் தேவைப்படுகின்றார்.

### பௌதீகத் தேவைகள்

விசேட பிரிவுக்குரிய ஒரு வகுப்பறைக் கட்டிடம் தேவையாகவுள்ளது. அத்துடன் பழைய கட்டிடத் தொகுதியிலுள்ள மேலும் சில வகுப்பறைகள் முற்றாகத் திருத்தம் செய்யப்பட வேண்டியுள்ளது. மாணவர் ஆசிரியர்களுக்கான மலசலகூட வசதிகளும் தேவையாகவுள்ளது. விடுதிகள் மீள்திருத்தம் செய்யப்பட வேண்டியுள்ளது. குழாய் நீர் கட்டமைப்பு சீராக்கப்பட வேண்டுமென்பதுடன், புதிய கிணறு ஒன்றும் அமைக்கப்பட வேண்டும். அத்துடன் ஒன்றுகூடல் மண்டபத்துக்கான ஒலி, ஒளி கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும். கட்டிடத்திருத்தம், தளபாடத்திருத்தம் மேற்கொள்ள வேண்டியுள்ளன.

2016 ஆம் ஆண்டிற்குரிய பொதுப்பரீட்சைகள் அனைத்துக்குமான விசேட திட்டங்கள் முன்மொழியப்பட்டு அவற்றைச் சரியாகச் செயற்படுத்திவருகின்றோம். பொதுப் பரீட்சை அடைவு மட்டங்களை உயர்த்தும். எமது செயற்பாட்டில் என்னோடு தோள் நிற்கும் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள், ஆசிரியர் குழாம், பெற்றோர்கள் பழைய மாணவர்கள் அனைவருக்கும் இவ்விடத்தில் நன்றியினைக் கூறிக்கொண்டு எமது தேவைகளை நிறைவேற்ற அதிகாரிகள் தக்க நடவடிக்கைகள் எடுப்பார்களென்ற நம்பிக்கையோடு அதிபர் அறிக்கையினை நிறைவுசெய்கின்றேன்.

நன்றி

2016.04.05

திரு. க. ரவிதாஸ்
அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Deputy Principal



**Mr.R.Parasupani**
SLPS - II, BA, PGDE

# Sectional Heads



**Mrs.P.Kokulachelvan**
Grade: 12 -13



**Mrs.S.Kanthinathan**
Grade: 10 - 11



**Mrs.M.Ponnampalam**
Grade: 6 - 9



**Mrs.T.Vignesh**
Grade: 1 - 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Principal & Staffs



Sitting Left to Right - Mrs.M.P.Hassan, Mrs.P.Kokulachelvan, Mrs.S.Murugupillai, Mr.R.Parasupani (D.P), Mr.K.Ravithas (Principal), Mrs. S.Kanthinathan, Mrs.M.Ponnampalam, Mrs.T.Vignesh, Mrs.P.Kunarajasingam

Standing Left to Right 1st Row - Mrs.J.Sathees, Mrs.P.Vijayakumar, Miss.R.Nalini, Mrs.E.T.Fernando, Mrs.S.J.R.Emiltaine, Mrs. K. Kamalanathan, Miss.P.Jeevakala, Mrs.S.Kokulathasan, Mrs.S.Rajasothy, Mrs.M.Vithiya, Mrs.L.Thirukumar, Mrs. S. Sugunalingam

2nd Row - Miss.E.Angela, Mrs.S.Manivannan, Mrs.S.Kanagalingam, Mrs.K.Vijendren, Mrs.N.Vijendrarajah, Mrs.V.Ravendranathan, Mrs.J.Nithiyakumar, Mrs. M.Niroshitha, Mrs.C.Hamsathvani, Mrs.T.Ramanan, Mrs.M.Anthonyrajah, Mrs.S.Yogarajah

3rd Row - Mrs.R.Thanaluxmy, Mr.P.R.Nicholas, Mr.A.Athisdalingam, Mr.P.Yoganathan, Mr.K.Ravindren, Mr.K.R.Thavanesakumar, Mrs.V.Sriskandakumar

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## SCHOOL MANAGEMENT COMMITTEE



Sitting Left to Right - Mrs.S.Manivannan, Mrs.S.Murugupillai, Mr.R.Parasupani(D.P), Mr.K.Ravithas(Principal), Mr.A.Athisdalingam, Mrs. S.Kanthinathan

Standing Left to Right - Mrs.M.Ponnampalam, Mrs.M.P.Hassan, Mrs.T.Vignesh, Mrs.P.Kokulachelvan, Mrs.S.J.R.Emiltaine, Miss.R.Nalini

## PRIMARY STAFFS



Sitting Left to Right - Mrs.T.Vignesh, Mrs.K.Vijendren, Mr.R.Parasupani(D.P), Mr.K.Ravithas(Principal), Mrs.N.Vijendrarajah, Mrs.S.Kanagalingam

Standing Left to Right - Mrs.V.Sriskandakumar, Mrs.S.Rajasothy, Mrs.L.Thirukumar, Mrs. S. Sugunalingam, Mr.P.Yoganathan, Mrs.T.Ramanan, Mrs.J.Nithiyakumar, Mrs.M.Anthonyrajah

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## NON ACADEMIC STAFFS



Sitting Left to Right - Mr.T.Mahendran, Mr.R.Parasupani(D.P), Mr.K.Ravithas (Principal), Mr.L.Jesudasn, Mrs.M.Maheswary

## SCHOOL DEVELOPMENT COMMITTEE



Sitting Left to Right - Mr.A.Thanaraj, Mr.S.Kanesamoorthy, Mr.R.Parasupani(D.P), Mr.K.Ravithas(Principal), Mr.V.Sundararajan, Mr.A.Athisdalingam

Standing Left to Right - Mr.K.Chandrakumar, Mrs.M.Ponnampalam, Mrs.M.P.Hassan, Mrs.T.Vignesh, Mrs.Premalatha, Miss.R.Nalini, Mrs.S.Kanthinathan, Mr.P.Prabaharan

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை வரலாறு

வரலாற்றுப் புகழ்மிக்க பாடல்பெற்ற திருத்தலமான திருகோணமலை நகரின் மேற்கே, குன்றக்குடி அடிகளாரால் நாமமிடப்பட்ட அன்புவழிபுரம் எனும் கிராமத்தில் எமது தி/கலைமகள் மகாவித்தியாலயம் அமைந்துள்ளது.

இக்கிராமத்தின் நடுவே 05.01.1971 இல் திரு.மு.மகாதேவன் அதிபருடன் இரண்டு ஆசிரியர்களும் 27 மாணவர்களுடனும் தற்காலிகக் கொட்டில் ஒன்றில் ஆரம்பப்பாடசாலையாக உருவாக்கப்பட்டது. மாலை வேளையில் பொழுதுபோக்கிற்காக பலர் ஒன்றுகூடும் நோக்கத்தில் கட்டப்பட்ட தற்காலிகக் கொட்டிலிலேயே கதிரை மேசைகளைப் பெற்று பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதென்றும் கூறுவர். இதன் பின்பு அரசு நிரந்தரக் கட்டிடமொன்றை அமைத்துக் கொடுத்தது.

தொடர்ந்து அதிபர் திரு.இ.தேவநாயகம் அவர்கள் 01.08.1971 இல் கடமையேற்றார். தொடர்ந்து அதிபர் திரு.க.சிவப்பிரகாசம் அவர்கள் 30.05.1978 இல் கடமையேற்றார். தொடர்ந்து அதிபர் திரு.தேவதாசன் அவர்கள் 22.11.1985 இல் கடமையேற்றார். தொடர்ந்து அதிபர் திரு.மா.கந்தையா அவர்கள் 15.05.1987 இல் கடமையேற்றார். இவ்வாறாக 1991 வரை இருபது வருட காலங்கள் முப்பது பேச்சஸ் சுற்றுவட்டத்திற்குள் எமது பாடசாலை இயங்கி வந்தது. படிப்படியாக நான்கு சிறிய கட்டிடங்களுடன் தரம் ஐந்து வரை வகுப்புகள் நடைபெற்று வந்தன.

இவ்வித்தியாலயத்திற்கென ஒரு கிணறு கட்டப்பட்டிருந்தது. இதன் விசேடம் என்னவென்றால் அயல் வீடுகளுக்கான கிணறுகளில் நன்னீர் சுவை குன்றிக் காணப்பட, இவ்வித்தியாலய கிணற்றின் நீர் நன்னீர் ஊற்றும் சுவையும் கொண்டதாகக் காணப்படுகின்றது.

1990களில் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் இப் பாடசாலையில் முகாமிட்டுத் தங்கியிருந்தனர். இதன்பின் அரசு இவ் வித்தியாலயத்திற்கென அலுவலகம் ஒன்றையும் சிறிதான வகுப்பறைகளுடன் மின்சார வசதியையும் அமைத்துக் கொடுத்திருந்தது. தொடர்ந்து 18.04.1991 இல் கடமையேற்ற முன்னாள் அதிபர் அமரர் திருமதி. அன்னலஷ்மி சண்முகநாதன் அவர்களால் தரம் 6 எமது பாடசாலைக்கு சேர்க்கப்பட்டது. அத்துடன் இரண்டு ஆசிரிய விடுதிகளையும் ஏற்படுத்தியிருந்தார். ஆளுநரால் வித்தியாலயத்தின் அருகிலிருந்த நெசவுநிலையக் காணி பாடசாலைக்குக் கையளிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து 19.081992 இல் அதிபராக இருந்த திரு.என்.இராஜநாதன் அவர்கள் பாடசாலையின் நாற்புற எல்லைகளுக்கும் சுற்றுமதிலை அமைத்துக் கொடுத்திருந்தார். அத்துடன் இரண்டு ஆசிரிய விடுதிகளையும், மனையியல், விஞ்ஞான ஆய்வு கூடங்களுடன் இரு மாடிக்கட்டிடங்களையும் பெற்றுக் கொடுத்திருந்தார்.

எவ்வாறாயினும் பாடசாலைக் காணி சமநிலமாக அமையாது மேடுபள்ளமாகக் காணப்பட்டது. பாடசாலை முற்றத்தில் மழைக்காலங்களில் குளம் போன்று நீர் நிறைந்திருக்கும். மாணவர்கள் இடைவேளை நேரங்களில் கால்களை நனைத்து விளையாட ஓடுவதும், அதை ஆசிரியர்கள் கண்டிப்பதுமாக தொடர்ந்து இடர்ப்பாடுகள் ஏற்பட்ட வண்ணம் இருந்தன. சிலவேளைகளில் ஆசிரியர்களும் மாணவர்களும் சேற்றில் சறுக்கி விழுவதுமுண்டு. இதைக் கண்ணுற்ற பெற்றோர்கள், ஆசிரியர்கள், கழகங்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழைய மாணவர் சங்கம் என்பவை கிரவெல் மண் கொடுத்தும் பெக்கோ மெசின் கொடுத்து உதவியும் நிலத்தைச் சமப்படுத்துவதற்கு உதவி செய்தமை இன்னும் நினைவு கூரவேண்டிய நிகழ்வாகும். தொடர்ந்து 06.01.1997 இல் அதிபராக கடமையேற்ற திரு.கோ.ஸ்ரீஸ்கந்தா அவர்கள் நூலக வசதியுடன் வகுப்பறைகள் கொண்ட இருமாடிக்கட்டிடம் ஒன்றைப் பெற்றுக் கொடுத்திருந்தார். தொடர்ந்து பழைய மாணவர்கள் அரச உதவியுடன் நீர்த்தாங்கி ஒன்றினை ஆக்கினர். மலசலகூடங்கள் ஆண, பெண் இருபாலாருக்கும் ஏற்படுத்தப்பட்டன.

2004 இல் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின்போது இடம்பெயர்ந்த மக்கள் நீண்ட நாட்கள் இப் பாடசாலையில் முகாமிட்டிருக்க நேர்ந்தது. இவ்வேளை இவ்வூர் மக்கள் அவர்களுக்கு ஆதரவு கொடுத்தனர். பாடசாலை காலை மாலை வேளையாக நடாத்த வேண்டிய நிலைமை காணப்பட்டது. இதன் பின் சிறுவர் பாதுகாப்பு அமைப்பு (Save the Children) கணினி அலகு, நுண்கலை அலகு,விஞ்ஞான அலகு, அலுவலகம் போன்றவற்றுடன் மூன்று மாடிக் கட்டிடம் ஒன்றைத் தந்து கணினிகளையும் கொடுத்தது. 2007இல் LCDRC நிறுவன அனுசரணையுடன் திரு.ஜெரால்ட் கணபதிப்பிள்ளை அவர்களது ஆலோசனையுடன் வலயக்கல்வித் திணைக்களத்தின் அனுமதியுடன் விசேட கல்வி அலகு ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து வரும் காலங்களில் JAICA செயற்றிட்டத்தினூடாக விருதினைப் பெற்றது.

தொடர்ந்து 12.11.2007 இல் கடமையேற்ற திரு.வே.ஸ்ரீஸ்கந்தராஜா அதிபர் அவர்கள் பாடசாலையின் கவின்நிலையைப் பெருக்குவதற்காக உட்கட்டமைப்பு வசதிகளுடன் நிழல் தருமரங்கள், பூமரங்கள், காட்சிப்பலகைகள், சுவரோவியங்கள், சிந்தனைக்கு சில வாக்கியங்கள், மதில் உயர்த்துதல் போன்ற செயற்பாடுகளில் வளப்படுத்தியிருந்தார். அத்துடன் கற்பித்த ஆசிரியர்கள் சிலரின் உதவியுடன் சரஸ்வதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலையொன்றையும் நிர்மாணித்திருந்தார். சமையலறை, பாடசாலை பிரதான வாயில், ஒன்றுகூடல் மண்டபத்தின் கீழ்த்தளம், குழாய்க்கிணறு என்பன அமைத்துக் கொடுக்கப்பட்டது.

தொடர்ந்து 2010இல் மீண்டும் பாடசாலையைக் கையேற்ற திருமதி.ச.இராமநாதன் அவர்கள் காலத்தில் JAICA செயற்றிட்டத்தின் மூலம் நடாத்திய போட்டியில் முதலிடத்தைப் பெற்றது. பாடசாலைக்கென தனியான விளையாட்டு மைதானம் பெறப்பட்டு விளையாட்டுப்போட்டியும் நடாத்தப்பட்டது. அத்துடன் க.பொ.த.(உ/த) வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது.

05.07.2010 இல் இவ்வித்தியாலயத்தைப் பொறுப்பேற்ற அதிபர் திரு.க.ரவிதாஸ் அவர்கள் இவ்வித்தியாலயத்தை மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்தினார். அத்துடன் Internet, Face book, Email ,Multimedia போன்ற நவீன தொடர்பாடல் தொழிநுட்பத் திறனை விருத்தி செய்யும் செயற்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒன்றுகூடல் மண்டபத்தின் கீழ் மேல் தள வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு மின் இணைப்பும் பெறப்பட்டு 400 கதிரைகளும் பெறப்பட்டுள்ளன.

மாணவர் ஒன்று கூடும் இடம் கற்கள் பதிக்கப்பட்டு, ஒலி பெருக்கி வசதியுடன் மேடையும் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் அழகிய முகப்பு வாயில் அமைக்கப்பட்டு பாடசாலை அழகிய கவின்நிலையுடன் காணப்படுகிறது. மேலும் மலசல கூட வசதிகள், சிற்றுண்டிச்சாலை வசதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் , மதில் கட்டுமாணப் பணிகளும் நடைபெற்றுள்ளன.

மாணவர்கள் உண்பதற்கு இருப்பிடவசதியும் குடிநீர்வசதியும், நவீன முறையில் அமைக்கப்பட்ட மலசலகூடமும் மதிலும் கட்டப்பட்டுள்ளன.

ஆசிரியர்களுக்கு சீருடையும், மாணவர் தலைவர் சீருடையும் புதிய இலச்சினை, கழுத்துப்பட்டி என்பன அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

எமது வித்தியாலயம் இன்று 45வது அகவையில் கால் பதித்துள்ளது. 1971 இல் ஒரு கொட்டிலுடன் பிறந்த எமது வித்தியாலயம் இன்று 3ஏக்கர் 3ரூட் 12 பேச்சர்ஸ் காணியில் கம்பீரமாகக் காட்சியளிக்கிறது.

- அதிபர் அலுவலகம்
- பிரதியதிபர் அலுவலகம்
- ஒன்றுகூடல் மண்டபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வகுப்பறைகளுடனான கட்டிடங்கள்
- கணினி அறை
- வாசிப்பு அறை
- மல்டிமீடியா அறை
- வழிகாட்டலும் ஆலோசனையும் அறை
- மனைப்பொருளியல் கூடம்
- விஞ்ஞானகூடம்
- சங்கீத நடனகூடம்
- நூலகங்கள்
- விசேட கல்விப்பிரிவு அலகு
- விளையாட்டு மைதானம்
- கிணறு, குழாய்க்கிணறு
- ஆசிரியர், மாணவர் மலசலகூடங்கள்
- சிற்றுண்டிச்சாலை
- சமையற்கூடம்
- விளையாட்டரங்கு

போன்ற வசதிகளுடன் கல்வித் துறையில் சிறந்த பெறுபேறுகளையும் பெற்று வலய, மாவட்ட , மாகாண, தேசிய விருதுகளையும் பெற்று முன்னணிப் பாடசாலையாக இப் பாடசாலை வளர்ச்சி பெற்று வருகிறது.

## என் அம்மா!

ஐயிரண்டு மாதங்கள்
அம்மா உங்கள்
கருவறைக் கூட்டினுள்
கட்டிக்காத்தீர்கள்!

பாராட்டிச் சீராட்டி
பாலூட்டி நீங்கள்
பாற்சோறு ஊட்டி என்னைப்
பாங்குடனே வளர்த்தீர்கள் - என்

கண்ணில் தூசி விழுந்தாலும்
கலங்கிப் போகும் உங்கள்
தெய்வீக அன்பைத்
தெளிய வைப்பேன் இவ்வுலகுக்கு!

ஆயிரம் பிறவி எடுத்தாலும்
அம்மா உங்கள் புகழ்பாட
அவனியிலே அவதரிக்க
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்!

செல்வி. உ.சலோமி
தரம் - 9B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி/கலைமகள் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றிய அதிபர்கள்



அமரர். திரு. மு. மகாதேவன்
05.01.1971 - 20.03.1971



அமரர். திரு. இ. தேவநாயகம்
01.08.1971 - 29.05.1978



அமரர். திரு. க. சிவப்பிரகாசம்
30.05.1978 - 21.11.1985



திரு. ம. தேவதாசன்
22.11.1985 - 15.05.1987




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமரர். திரு. மா. கந்தையா
16.05.1987 - 17.04.1991



அமரர். திருமதி. அன்னலட்சுமி
சண்முகநாதன்
18.04.1991 - 23.07.1992



திரு. N. இராஜநாதன்
19.08.1992 - 31.12.1996



திரு. K. சிறீஸ்கந்தா
06.01.1997 - 11.11.2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி. ச. இராமநாதன்
12.11.2007 - 31.08.2008



அமரர். திரு. வே. சிறிஸ்கந்தராசா
01.09.2008 - 31.12.2009



திருமதி. ச. இராமநாதன்
01.01.2010 - 04.07.2010




திரு. க. ரவிதாஸ்
05.07.2010 - இன்றுவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# T/Kalaimagal Maha Vidyalayam


## Anpuvalipuram Catchment Area






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# T/KALAIMAGAL MAHA VIDYALAYAM
## Landscape of School building






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தி/கலைமகள் மகா வித்தியாலத்தின் தொடக்க நாளான 05.01.1971 அன்று எழுதப்பட்ட சம்பவதிரட்டுப் புத்தகப்பிரதி

05-1-1971 | திருகோணமலை பிரதம கல்வி அதிகாரி அவர்களின், 23-12-1970 கடித இல TH/98 படி ஆரம்பிக்கப்பட்ட தி/ அன்புவழிபுரம் அமெரிக்க தமிழ் கலவன் பாடசாலையி லிப் புதிய பாடசாலைக்காக இன்று முதல் இச் சம்பவத் திரட்டுப் புத்தகம் பாவிக்கப்படுகிறது.

[illegible]
( [illegible] 24/8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, பண்பாட்டலுவல்கள், காணி, காணி அபிவிருத்தி போக்குவரத்து அமைச்சு – கிழக்கு மாகாணம்
අධ්‍යාපන, සංස්කෘතික කටයුතු, ඉඩම්, ඉඩම් සංවර්ධන හා ප්‍රවාහන අමාත්‍යාංශය – නැගෙනහිර පළාත
Ministry of Education, Cultural Affairs, Land, Land Development & Transport – Eastern Province
திருகோணமலை ත්‍රිකුණාමලය Trincomalee
026 - 2220035 (Secretary) 026 – 2222176 (General) 026 – 2222730 (Fax) E-mail: Mineducation@ep.gov.lk

எங்கள் இல. / අපේ අංකය / My No. EP/3/PL-Sch.name Change.

உங்கள் இல / ඔබේ අංකය / Your No.

04.01.2012

வலயக் கல்விப் பணிப்பாளர்
வலயக் கல்வி அலுவலகம்
திருகோணமலை

**பாடசாலைப் பெயர் மாற்றம்**

**தி/கலைமகள் வித்தியாலயம்**

மாகாணக் கல்வித் திணைக்களத்தின் EP/20/04/85/05 இலக்க 29.12.2011 திகதிய கட்டமைப்புக் குழுவின் தீர்மானத்திற்கமைய திருகோணமலை கல்வி வலய **தி/கலைமகள் வித்தியாலயம்** , **தி/கலைமகள் மகா வித்தியாலயம்** என பெயர் மாற்றம் செய்ய என்னால் அனுமதி வழங்கப்படுகிறது.

T.அகிலன்
உதவிச் செயலாளர்

த.அகிலன்
உதவிச் செயலாளர்
கல்வி, பண்பாட்டலுவல்கள், காணி,
காணி அபிவிருத்தி போக்குவரத்து அமைச்சு
கிழக்கு மாகாணம்
திருகோணமலை.

ஒப்பம்: N.A.A.புஸ்பகுமார
செயலாளர்

பிரதி:

01.மாகாணக் கல்விப் பணிப்பாளர் கி.மா.

[illegible] அதிபர். தி/கலைமகள் வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி, பண்பாட்டலுவல்கள், காணி, காணி அபிவிருத்தி போக்குவரத்து அமைச்சு – கிழக்கு மாகாணம்
අධ්‍යාපන, සංස්කෘතික කටයුතු, ඉඩම්, ඉඩම් සංවර්ධන හා ප්‍රවාහන අමාත්‍යාංශය - නැගෙනහිර පළාත
Ministry of Education, Cultural Affairs, Land, Land Development & Transport – Eastern Province
திருகோணமலை ත්‍රිකුණාමලය Trincomalee
☎ 026 - 2220035 (Secretary) 026 – 2222176 (General) 026 – 2222730 (Fax) E-mail : edueast@sltnet.lk

எங்கள் இல. / මගේ අංකය / My No. EP/3/PL/UPG/Sch

உங்கள் இல. / ඔබේ අංකය / Your No.

16.12.2010

வலயக் கல்விப் பணிப்பாளர்

வலயக் கல்வி அலுவலகம்

திருகோணமலை

**க.பொ.த.உயர்தர கலைப்பிரிவு ஆரம்பிப்பதற்கான அனுமதி**

**தி/கலைமகள் வித்தியாலயம்**

மாகாணக் கல்வித் திணைக்களத்தின் EP/20/PDE/PR/85C ஆம் இலக்க 15.12.2010 ஆந் திகதிய கட்டமைப்புக் குழுவின் தீர்மானத்திற்கமைய, திருகோணமலை மாவட்ட திருகோணமலை கல்வி வலய **தி/கலைமகள் வித்தியாலயத்தில்** கீழ்க்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கமைய 01.05.2010 ஆந் திகதி தொடக்கம் க.பொ.த.உயர்தர கலைப்பிரிவு ஆரம்பிப்பதற்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது. இப்பாடசாலையின் கட்டமைப்பு 01-13 (வகை 1-c) என வகைப்படுத்தப்படுகின்றது.

(அ) ஆகக் குறைந்தது 15 (பதினைந்து) மாணவர்கள் கலைப்பிரிவில் கற்றல்

(ஆ) இவர்கள் யாவரும் அடிப்படைக்கல்வித் தகைமைகளை முழுமையாகப் பூர்த்தி செய்தவர்களாக இருத்தல்

த.அகிலன்
உதவிச் செயலாளர்

T. AKILAN
Assistant Secretary
Ministry of Education, Cultural Affairs
Land, Land Development & Transport
Eastern Province
Trincomalee.

ஒப்பம்: எச்.கே.யு.கே.வீரவர்த்தன
செயலாளர்

பிரதிகள்:

01. மாகாணக்கல்விப் பணிப்பாளர், கிழக்கு மாகாணம்

02. அதிபர், தி/கலைமகள் வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் தலைவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் அதிபரை வாழ்த்துகின்றோம்



## திருமதி. சரோசா இராமநாதன்
**SLTS-I, BA, PGDE**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புவழிபுரத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

ஈழ மணித்திருநாட்டின் கிழக்குப்பகுதியில் வங்காள விரிகுடாவின் வாசலின் கம்பீரமாக அமர்ந்து இருக்கும் அழகிய நகரம் திருக்கோணமலை. முத்திக்கும் வானுயர்ந்த மலைகளை அரணாகவும், வளம் கொழிக்க வருங்கடலின் பேரலைகள் அரவணைத்துச் செல்லும் புதுமை மிகுந்த பூமி இது. உலகிலேயே இரண்டாவது அழகிய துறைமுகத்தை தன்மடியில் தலாட்டிக் கொண்டிருக்கும் தாய்மை மிகுந்த தவப்பூமி. முல்லை, மருதம், குறிஞ்சி, நெய்தல் என நானிலச் செல்வங்களை தன்னகத்தே கொண்ட சிறப்பு மிக்க பெருமை மிகுந்த நகரம். திருக்கோணமலை நகரிலிருந்து மேற்கே 5மைல் தூரத்தில் கண்டி, அனுராதபுர வீதிகளின் வலதுபக்கமாக அமைந்துள்ளது அன்புவழிபுரம் எனும் அழகிய கிராமம். இதனுடைய ஆரம்ப அடிச்சுவடுகளைச் சற்றுத் திரும்பிப்பார்ப்போம்.

பிரசவம் என்பது ஒரு வரலாற்றின் ஆரம்பம். உயிர்களின் உள்நுழைவும், வித்திலிருந்து வெளிவரும் மென்முளைகளைப் போன்ற சமூகத்தின் ஆரம்ப நிலையும் ஓர் கிராம வரலாற்றின் முதற்படி இந்நிலைகளெல்லாம் இனிமையானதும், நினைவுகளை விட்டு நீங்காத பசுமை நிறைந்த ஞாபகங்களைக் கொண்டதுமாகும். அன்புவழிபுரம் சுமார் 3 சதுரகிலோமீற்றர் நிலப்பரப்பை கொண்டது. ஆரம்ப கால நிலையை சற்று கண்ணோக்கினால் வடகிழக்குப் பகுதிகள் தட்டக்கை காடு எனவும், தெற்கு மேற்கு பகுதிகள் கொறவப்பொத்தானை வேன் A,B,C எனவும் தற்போது வியாபார நிலையங்கள் (அங்காடி) (Market) அடங்கியுள்ள பகுதி முதிரம் சேனை எனவும் அழைக்கப்பட்டது. இதற்கான சான்றுகளை தற்போதும் பிரதேச செயலகம் (ப/சூ), நகராட்சி மன்ற ஆவணங்களிலும் காணக்கூடியதாக உள்ளன. தட்டக்கை காட்டின் வடபகுதியிலே ஒர் அழகிய குளம் அமைந்துள்ளது. தற்போது இக்குளம் பண்ணைக்குளம் என அழைக்கப்பட்டாலும் அதனுடைய பிறப்பு பெயர் தாடகைக்குளம் ஆகும்.

இக்குளத்தை 2ம் உலகப்போர் நடந்த காலப்பகுதியில் பிரித்தானிய படையினர் தமது தேவைகளுக்காக பராமரித்து வந்தார்கள். இப்பெயர்ப்பதிவு தற்போது நீர்ப்பாசன திணைக்களத்திலே ஆவணமாக உள்ளது. அடுத்து இக்கிராமத்தின் பிறப்பை சற்று அவதானிப்போம். திருக்கோணமலை நகரின் உட்பகுதியிலே குடிதனை நெருக்கிப் பெருக்கமாய் வாழ்ந்த சாதாரண நடுத்தர மக்களைச் சொந்த காணிகளில் குடி அமர்த்துவதற்காகப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ந.இ.இராஜவரோதயம் அவர்களின் முயற்சியினால் 40 பேர்ச் அரச காணி மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. 1956ம் ஆண்டு ஆனி மாதம் தட்டக்கை காடு துண்டுகளாகப் பிரித்து அளக்கப்பட்டது. 1957ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு தை மாதம் 5ம் திகதி திருக்கோணமலை கச்சேரியில் திருவுளச்சீட்டு குலுக்கல் மூலம் மக்களுக்கு காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

அதைத்தொடர்ந்து பாதையில்லாக் காட்டினுள் மக்கள் புகுந்து சென்று தத்தமது காணிகளை இனங்கண்டு துப்பரவு செய்யத் தொடங்கினர். அக்காலப்பகுதியில் தட்டக்கை காடு பயங்கர வனவிலங்குகள் நிறைந்த காடாகவே காட்சியளித்தது. அந்த வனப்பகுதியிலேயே அழகிய மலர்கள் நிறைந்த தாடகை குளத்தின் கரையின் அருகினில் கிரிகொட்டா எனும் வேடுவன் தனது தாயாருடனும், சகோதரனுடனும், தனது வேட்டைப் பரிவாரங்களாக பத்திற்கு மேற்பட்ட நாய்களுடனும் வாழ்ந்து வந்தான். இரும்பாலான கூர் ஆயுதமும், கைக்கோடரியுமே அவனுடைய வேட்டைக்கான ஆயுதங்கள். என்ணெயே கண்டிராத பறட்டைத் தலை, இடையைச் சுற்றி ஓர் துணி, வெற்று மேனி இதுதான் அவனுடைய திருக்கோலம். தாயார் இடையைச் சுற்றி கம்பாயமும் மேலே ஒரு சட்டையும் அணிந்திருப்பாள். அவளுடைய தோளிலே கைக் கோடரி ஒன்று உறங்கிக் கொண்டிருக்கும். சகோதரன் கூழைக் கையன் எனக் குறிப்பிடும் ஒற்றைக்கை வேடுவனின் தாயார் யாருடனும் பேசமாட்டார். கிரிகொட்டாவை நெருங்கி கதை கொடுத்தால் தெளிவில்லாத தமிழில் பேசுவான். காட்டு மூலிகையும், மோட்டு மந்திரமும் மிருக இறைச்சியுமே தனது வாழ்வாதாரம் எனக் கூறிக் கொள்வாள். நாளடைவில் மக்கள் பரவலாக குடியேறத் தொடங்கியவுடன் அவனுடைய ஜீவனோபாயம் தளர்வடையத் தொடங்கியது.

தனது பரிவாரங்களுக்கே உணவு தேடிக் கொடுக்க முடியாத காரணம் காடுகள் எல்லாம் அழிக்கப்பட்டுவிட்டன. மிருகங்கள் எல்லாம் அயல்பகுதிகளிலுள்ள பெருங்காடுகளுக்கு இடம் பெயர்ந்து சென்று விட்டன. இதனால் நிர்க்கதியான வேடுவன் செய்வதறியாது தட்டக்கை காட்டை விட்டு வேறெங்கோ சென்று விட்டான். தட்டக்கைக் காடு துவசம் செய்யப்பட்டது. ஒரு சில குடும்பங்கள் மரநிழலை ஆதாரமாகக் கொண்டு பழைய சேலைகளை மறைப்பாகக் கட்டி அமர்ந்து கொண்டனர். அதிலிருந்து கொண்டே சிறு சிறு ஓலைக்குடில்களை தமக்கென அமைத்துக்கொண்டார்கள். இவ்வேளையில் திருக்கோணமலைக்கும் தம்பலகாமத்திலுள்ள ஆதி கோணேஸ்வரர் ஆலயத்திற்கும் சமய யாத்திரையை மேற்கொண்டிருந்த தென்னிந்தியாவின் திருவண்ணாமலை ஆதீனத்தின் பிரதமகுரு தெய்வசிகாமணி ஸ்ரீலஸ்ரீ அருணாசலம் தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களை 1957ம் வருடம் புரட்டாதி மாதம் 21ம் திகதி பிரதோஷ திதி அன்று பாராளுமன்ற உறுப்பினர் திரு. இராஜவரோதயம், திரு.வன்னியசிங்கம், நகரசபைத் தலைவர் ஏகாம்பரம், அறநெறித் தொண்டர் திரு.சண்முகராஜா, பத்திரிகை நிருபர் திரு. குருநாதன் ஆகியோர் புதிய கிராமமாக உருப்பெற்று வரும் தட்டகைப் பகுதிக்கு அழைத்து வந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இற்றாலியன் கேம்ப் பாதை ஊடாக இப்பகுதியில் உள்நுழைந்து ஒற்றையடிப் பாதை ஊடாக தாடகைக் குளத்தின் அருகே அமைந்துள்ள ஒரு பகுதியில் பால மரத்தின் அடியிலே குன்றக்குடி அடிகளார் தமது திருக்கரத்தால் "திரிசூலம்" ஒன்றை நிலை நிறுத்தி "ஞானவைரவப் பெருமானின் அருளோடு இப்பகுதி அன்புவல்லிபுரம் என வழங்கட்டும்" என வாழ்த்திச்சென்றார். ஆனால் தட்டக்கைகாடு அன்புவல்லிபுரம் என திருநாமம் பெற்றாலும் நாளடைவில் அன்புவழிபுரம் என திரிபுபட்டு அப்பெயரே நிரந்தரமாகி விட்டது. அந்த நாட்கள் என்றும் மனதை விட்டு அகலாது. அந்த மண்வாசனையை நினைத்தாலே மயக்கம் வரும். காட்டு மலர்களின் நறுமணம் தென்றலோடு கலந்து வந்து சிந்தையிலே மகிழ்வு தரும். கீச்சிடும் குருவிகளும், கூவிடும் கருங்குயிலும், விசிலடிக்கும் மைனாக்களின் சத்தங்களும் மனதிற்கும் இதமாக சுகத்தைத் தரும்.

கொத்துக் கொத்தாய்க் கனிந்து சொரியும் பாலை, வீரை, நாவல் கனிகளெல்லாம் தரையிலே கம்பளம் விரித்தது போல் அழகாகக் காட்சி தரும். சிறுவர்கள் எல்லாம் பழத்தைப்பொறுக்கி மண்ணை ஊதிச்சுவைக்கும் போது சுட்டதோ பழமென முருகன் ஔவையிடம் கேட்டதை ஞாபகமூட்டும். அப்பேர்ப்பட்ட அழகு கொள் கந்தர்வனத்தை என்றுமே நாம் காணமுடியாது. எல்லாம் மறைந்து நகரமாகி விட்டதோ இல்லை நரகமாகி விட்டதோ தெரியவில்லை. தத்தமது காட்டினைத் துப்பரவு செய்யும் போது அயல் காணிக்காரரின் உதவியோடு ஒன்றாய்ச் சேர்ந்து செயற்படுவார்கள். கொட்டில்கள் அமைத்து வேயும் போதும், கிணறுகள் தோண்டும் போதும், பாதைகளைத் துப்பரவு செய்யும் போதும் ஒன்றாகச் சேர்ந்து உறவினர் போன்று ஒத்தாசை புரிந்தனர். அந்த உறவில்லாத உறவினர்கள். புதிய உறவுகள் புரிந்துணர்வு கொண்ட ஏழ்மை உள்ளங்கள். அன்பு கொண்டு அரவணைத்து வாழும் உணர்வு கொண்ட உண்மை ஜீவன்கள் அந்த முன்னோர் இக்கிராமத்தின் மூத்த குடிமக்கள். எமது பெற்றோர் இவ்வுலகை விட்டுச் சென்று பலகாலமாகி விட்டது. போகும் போது தம்மோடு சேர்த்து உணர்வுகளையும், பண்பையும், அன்பையும் எடுத்துச் சென்றார்கள் போலும். இன்று அயல்வீட்டுக்காரருடன் கூட அறிமுகமில்லாத பொய் வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அதிகாலை வேளையில் சேவல் கூவித்தான் நாம் விழித்துக் கொள்வது வழமை.

வானமும் வதிவிடமும் கலந்து கொண்ட கிராமத்தில் குரங்குகளின் கூப்பாடே எம்மை விழித்துக்கொள்ளச் செய்யும். பகல் வேளையில் சில்வண்டுகளின் ரீங்காரம் இதமாக இருக்கும். கதிரவன் மறைந்து மாலை மயங்கி இருள் சூழ்ந்த வேளையிலே மின்சாரம் இல்லாத கிராமத்தின் மேல்முகட்டில் வெள்ளிநிலா வெளிச்சம் தரும். மின்மினி பூச்சிகளின் கண்சிமிட்டும் வெண் ஒளியும், குடிசைகளில் மங்கலாக ஒளிர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கும். செம்மஞ்சள் தீச்சுடரும் சேர்ந்து. காரிருள் தன்னில் கருநீல வானத்தில் தாரகைகள் ஒன்றுகூடி கண்சிமிட்டும் காட்சிதனை நினைவு கூரும்.

இக்கிராமத்தை துரித கதியில் செழிப்படையச் செய்ய வேண்டுமானால் ஓர் பலம் வாய்ந்த அமைப்பு எமக்குத் தேவையெனக் கருத்தில் கொண்டு 1959 தை மாதம் திரு. வேலுப்பிள்ளை ஆசிரியரின் தலைமையின் கீழ் சனசமூகநிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இச்சங்கத்திற்கு உறுதுணையாக இளைஞர்களும் ஓர் கழகத்தை அமைத்துக்கொண்டனர். இச்சங்கங்களின் முயற்சியினால் மயானத் தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாக 1959 பிற்பகுதியில் அரச காணியைப் பெற்று மக்களின் ஒத்துழைப்புடனும், இளைஞர்களின் ஒத்தாசையுடனும் முழுமையாகத் துப்பரவு செய்யப்பட்டது. 1959ம் ஆண்டிலே அன்புவழிபுரத்திற்கு ஒதுக்கப்பட்ட விளையாட்டு மைதானத்தின் கிழக்கே மூலையிலே ஓலையினால் வேயப்பட்ட சிறிய வாசிகசாலை இளைஞர் கழகத்தினால் அமைத்து நிருவகிக்கப்பட்டது. 1960ம் ஆண்டு தைப்பொங்கல் அன்று கள்ளப்பற்றை காட்டினுள் கவனிப்பாரற்று கிடந்து எடுத்து வரப்பட்ட பிள்ளையார் திருச்சுருபத்தை ஸ்ரீ தில்லையம்பலப் பிள்ளையார் என திருநாமம் சூட்டி பிரதிஷ்டை செய்து மடாலயமாக அமைத்து வைத்தார் "கந்தையா" எனும் விநாயக அடியார். இவ்வாலயம் தற்போது மகோற்சவ ஆலயமாக வானுயர்ந்த கோபுரத்தோடு கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. அன்புவழிபுர கிராமத்திற்கு ஓர் கைத்தொழில் கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்ட மாதர் சங்க பாதுகாவலர் "பசுபதி" அவர்களின் முயற்சியினால் 1961ம் வருடம் விளையாட்டு மைதானத்தின் வடக்கு மூலையில் 100 அடி நீளம் 20 அடி அகலம் கொண்ட நெசவுப் பயிற்சி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டது. அந்நெசவு நிலையம் தற்போது ஞான வைரவர் ஆலய வளவினுள் அத்துமீறி அமர்ந்து கொண்டது. மெதுமெதுவாக ஆமை வேகத்தில் அன்புவழிபுரம் அபிவிருத்தியில் முன்னகர்ந்து சென்று கொண்டிருந்தது. ஓலைக்குடிசைகளாக இருந்த உறைவிடங்களில் சில கல் வீடுகளாக மாற்றமடைந்தன. பாதைகள் செப்பனிடப்பட்டன. மக்கள் சந்தோஷமாகத் தமது வாழ்க்கை எனும் கப்பலில் பயணம் செய்து கொண்டிருந்த வேளையிலே 1964ம் வருடம் மார்கழி மாதம் 22ம் திகதி செவ்வாய்க்கிழமை மக்கள் தமது அன்றாட வேலைகளில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தார்கள்.

மார்கழி மாதம் மயிர் நனையாத் தூறல் என்பர். மனதுக்கு இதமான மாலை நேரம் மழை சற்றுப் பலமாகப் பெய்யத் தொடங்கியது. தென்றலென சாமரையாக அசைந்த காற்றுச் சற்று வேகமாக வீசத் தொடங்கியது. நேரம் செல்லச் செல்ல மாலை மயங்கி இருள் பரவத் தொடங்கியது. காற்றோ சூறாவளியென மாறி அகோரத்தாண்டவம் ஆடியது. ஐயகோ! பின்னர் கேட்கவும் வேண்டுமா? ஒரு சில கணத்தினிலே அன்புவழிபுரம் எனும் பேரழகி மதுரையை எரித்த கண்ணகி போல,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்ணனை இழந்த குந்தி போல, கணவனை இழந்த கைம் பெண் போல தலைவிரி கோலம் கொண்டு சிதைந்து போய் காட்சி தந்தாள்.

கரும் இருட்டு மக்களின் அவலக் குரல் கிராமத்தையே அதிர வைத்தது. பெரும் விருட்சங்கள் வேரோடு சாய்ந்தன. மனைகளெல்லாம் மல்லாந்து மண்ணைத் தழுவின. கூரைகளெல்லாம் பட்டம் போல் பேய்க்காற்றில் அடிபட்டுச் சென்றன. மண் சுவர்களெல்லாம் மண்ணோடு சேர்நது தம் பழைய உறவைப் புதுப்பித்துக் கொண்டன. அதற்குள் அகப்பட்ட உயிர்களெல்லாம் மாண்டு போயின. கர்ப்பிணித் தாயோ, கையில் பிள்ளையுடன் உடல் நசுங்கி இறந்து போனாள். தீமூட்டி காய்ந்த சோதரனோ சுவர் வீழ்ந்து நெருப்புக்குள் தீய்ந்து போனான். சுமார் 9 உயிர்கள் அன்புவழிபுர கிராமத்திலே காவு கொள்ளப்பட்டன. விடிகாலைப் பொழுது வானம் மட்டுமே வெளுத்தது. மனங்களெல்லாம் ஏக்கத்தோடு வெளிச்சத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டன. அந்தத் திகைப்பிலிருந்து மெதுவாக வெளிவந்த மக்கள் தமது அன்றாட தேவைகளை நிறைவேற்றத் தொடங்கினர். இடிந்து வீழ்ந்த வீடுகளெல்லாம் புதுப்பொலிவுடன் கட்டியெழுப்பப்பட்டன. சரிந்து வீழ்ந்த வேலிகளெல்லாம் சீர் செய்யப்பட்டன. காலம் தன் கடமையைச் சீராகச் செய்ததனால் வருடங்கள் பல கடந்தன. கிராமத்துச் சிறார்கள் தமது ஆரம்பக் கல்வியை இற்றாலியன் காம்பில் அமைந்திருந்த பிரித்தானியப் படையினரால் கைவிடப்பட்ட கட்டிடத்தில் பயின்று வந்தனர். இவ் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை 1947ம் வருடம் வைகாசி மாதம் 7ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலை கஞ்சிமடம் தமிழ்க்கலவன் ஆரம்ப பாடசாலை என அழைக்கப்பட்டது. கால ஓட்டத்தில் மாணவர்களின் எண்ணிக்கை உயர்வடைந்த காரணத்தால் இடவசதி போதாமையை கருத்தில் கொண்டு 1961ம் ஆண்டு 5ம் மாதம் 15ம் திகதி கண்டி வீதியின் 3ம் மைல் கல்லில் வலது பக்கத்தில் தற்போது விபுலானந்தா கல்லூரி என சிறப்புற நடைபெற்று வரும் இடத்திற்கு கஞ்சிமடம் தமிழ் கலவன் பாடசாலை இடமாற்றப்பட்டது. இக்காலப்பகுதியில் அன்புவழிபுரத்தில் மக்கள் பரவலாகக் குடி அமரத்தொடங்கிய காரணத்தால் எமது கிராமத்தினுள்ளேயே ஓர், பெண்கள் பாடசாலை அமைக்கவேண்டுமென்ற முயற்சிகளை மேற்கொண்டனர். பாடசாலை அமைப்பதற்கான பொருத்தமான இடம் கிடைக்கப் பெறாத காரணத்தால் விளையாட்டு மைதானத்திற்கு ஒதுக்கப்பட்ட காணியிலேயே பாடசாலை அமைப்பதென முடிவு செய்யப்பட்டு 1970ம் வருடம் முற்பகுதியில் பாடசாலைக்கான முதற் கட்டிடம் மைதானத்தின் கிழக்குப் பகுதியில் மக்களின் ஒத்துழைப்புடன் தற்காலிகமாக கட்டி முடிக்கப்பட்டது. இப்பாடசாலை கலைமகள் வித்தியாலயம் என சிறப்புப் பெயரோடு 1971ம் வருடம் தை மாதம் 5ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

முதலாவது அதிபராக திரு.மு.மகோதேவன் அவர்கள் கடமையாற்றினார். அதைத்தொடர்ந்து பல அதிபர்கள் சிறப்பாகக் கடமையாற்றிச் சென்றனர். 45 அகவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பாக முன்னகர்ந்து வந்த இப்பாடசாலை பல மாடிக் கட்டிடங்களையும் தன்னகத்தே கொண்டு கம்பீரமாகக் காட்சியளிப்பதோடு, தற்போது அதிபராகக் கடமையாற்றும் திரு. க. ரவிதாஸ் அவர்களின் வழிகாட்டலின் பெறுமதி மிக்க பெறுபேறுகளைப் பெற்றுக் கலைமகள் மகாவித்தியாலயமாகப் பல்கலைக் கூடமாகக் காட்சியளிக்கின்றது. ஆனால் எமது முன்னோடிகளின் எண்ணக்கருத்துப்படி இதை ஓர் பெண்கள் பாடசாலையாக அமைக்க வேண்டுமென்ற விரும்பு மறுதலிக்கப்பட்டு மறந்து போனதோ? காலங்கள் கடந்துவிட்டன. இனவாதம் என்ற சக்தியிலே அகப்பட்ட எமது மூத்தோரும், உடன் பிறப்புக்களின் உயிர்களும் காவு கொள்ளப்பட்டனர். 1958ம் வருடத்திலிருந்து இன்று வரை எமது கிராம மக்கள் பல்வேறு காலப்பகுதியில் இடம்பெயர்ந்தனர். திசை தெரியாமல், காடு மேடு கடல் கடந்து சென்றார்கள். சிலர் கடல் கடந்து, கண்டங்கள் கடந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அன்புவழிபுரத்திலே உறவுகள் எல்லாம் ஓடிய பின்னர் உறவில்லாத உறவுகளெல்லாம் ஒன்று கூடி தட்டக்கை காட்டின் மண் வாசனையையும், மலர் வாசனையையும் நினைவில் நிறுத்தி நெஞ்சு நெகிழ்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வாழ்க அனைவரும் வளமுடன். நிலை பெறுக எம்மூர் அன்புவழிபுரம்.

தொகுப்பாளர்,
திரு.இ. இராஜேஸ்வரன்
அன்புவழிபுரம்.

## விகடத் துணுக்குகள்



வாழைப் பழம் ஒரு சீப்பு வாங்கினால்
ஒரு சீப்பு இலவசம் என்று சொன்னீர்கள்.
பிறகு ஏன் தலைவாரும் சீப்பைத் தருகிறீர்கள்?

"பழம் நழுவிப் பாலில் விழுந்துட்டுது"
இதைச் சோகமாய்ச் சொல்லுறாய் ஏன்?
விழுந்தது பலாப் பழமாச்சே!

செல்வி. உ.புவனப்பிரியா
தரம் - 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்ட் வாத்தியக் குழு



தமிழ் மன்றம்



புனித ஜோன்ஸ் அம்புலனஸ் படையணி



விவசாய மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றாடல் கழகம்



சமூக விஞ்ஞான மன்றம்



வின்சன் டீ போல் சபை



சுகாதாரக் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுக் கழகம்



ஆங்கில மன்றம்



கிறிஸ்தவ மன்றம்



கணித மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் நிஜங்கள்

திருமதி. சரோசா இராமநாதன்
முன்னாள் அதிபர்

எழில் கொஞ்சும் திருகோணமலை நகரின் எல்லையில் குடிமனைகளின் நடுவே கம்பீரமாய் திகழ்ந்து நிற்கின்றது அன்புவழிபுரம் கலைமகள் மகாவித்தியாலயம் இன்று தரம் பதின்மூன்று வரை வகுப்புக்கள் நடத்தப்பட்டு ஒரு 1C பாடசாலையாக நகரப்பாடசாலைகளுக்குச் சளைத்தவர்கள் அல்ல என மாணவர்களும் ஆசிரியர்களும் அதிபரும் நிமிர்ந்து நின்று பேசக்கூடிய பாடசாலை இதுவாகும். இன்றைய அதிபர், மாணவர்களை பல்வேறு துறைகளில் சாதனை பெறவைத்தும் ஆசிரியர்களுக்கு விருதுகள் வாங்க வைத்தும் எனப் பல்வேறு வழிகளிலும் இச்சமூகத்தை மேம்படுத்துவதில் ஆர்வம் காட்டி வருதுவது அனைவரும் அறிந்தது.

இந்தவிடத்துச் சற்றுப் பின்னோக்கி இருபத்தைந்து வருடங்களுக்குள் இதன் நிலைமைகள் பற்றி இம்மலரில் இணைந்து கொள்ள விளைகின்றேன். 1991 இல் செப்ரம்பர் மாதத்தில் இப்பாடசாலை தரம் 6 வரை வகுப்புக்கள் நடத்திக்கொண்டிருந்த வேளை திருமதி. அன்னலெட்சுமி சண்முகநாதன் அதிபராக கடமையாற்றினார்.

இவ்வேளை 1992 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் விபத்து ஒன்றின்போது சுகயீனம் ஏற்பட்டு அப்போதைய பெண் அதிபர் காலமாகிவிட்டார். அவ்வேளை குழாய் நீர் பெறுதல் ஏற்பாட்டைச் செய்திருந்தார். அவரால் ஆசிரிய விடுதிகள் இரண்டும் கட்டப்பட்டன 'நீர் பெறுதல் நிகழ்வு' ஏற்பாடாகியிருந்தது. இதற்கு வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் வருகைதந்திருந்தார். அந்நிகழ்வுக்கு தலைமை தாங்கி நடத்த வேண்டிய தேவை எனக்குக் காணப்பட்டது. அவ்வேளை ஆளுநர் அயலில் கட்டப்பட்டிருந்த நெசவு நிலையக்கட்டிடத்தை வேறு இடத்திற்கு மாற்றவும் அக்காணியை பாடசாலைக்குத் தரவும் அனுமதி வழங்கியிருந்தார், இவ்வேளை பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினரின் செயற்பாடு பாராட்டத்தக்கது. விசேடமாக S.D.S செயலாளர் திரு. S.G.விக்டர் குறிப்பிடத்தக்கவராவார்.

1996 இல் க.பொ.த(சா/த) பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றி 1993களிலும், 1995களிலும் பரிசளிப்பு விழா மிகக் கோலாகலமாக நடைபெற்றது. கிராமப்புறபாடசாலை என்ற நிலைமை மாறி நகர்ப்புறப் பாடசாலையைப் போன்ற தொரு தன்மை நிலவியது. தலைமைத்துவம் கொண்ட ஆரிரியர் குழாம் மட்டுமல்ல, மாணவர் குழாம் தோன்றிக் கல்வியில் சாதனை படைத்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் போர்க்காலச் சூழலில் "ஆசிரியர் சொற்படி நட" என்ற நிலைமாறி மாணவர்களுக்குப் பயந்து ஆசிரியர்கள் நடந்து கொள்ள வேண்டிய நிலையையும் கண்டனுபவித்தேன். இருந்த போதிலும் காந்தி நகர் பிரதேசத்திலிருந்து போர்க்காலத்தில் இடம்பெயர்ந்து மீளக் குடியேறிய பாடசாலை மாணவர்களது. பிறப்புச் சான்றிதழ்கள் பெறுவதற்கு ஆவன செய்தோம் பிறப்புச் சான்றிதழ் இன்றி பாடசாலைக்கு மாணவர்களை அனுப்பாமல் இருந்தனர். அவர்களுக்கான நிவாரணத்தை Unicef உதவியுடன் பெற்றுக் கொடுத்தோம். இதன் மூலம் பெருந்தொகையான மாணவர்கள் பயன் பெற்றனர்,

2004 இல் மாபெரும் இயற்கை அனர்த்தமான 'சுனாமி' ஏற்பட்ட போது நிர்க்கதியான பலர் இப்பாடசாலையில் முகாமிட்டிருந்தனர். இவ்வேளை ஆசிரியர்கள் அயல்சமூகத்துடன் இணைந்து தம்மாலான பணியாற்றினர். இதன் காரணமாகவே 'சிறுவர் பாதுகாப்பு நிதியம்' மூன்று மாடிக் கட்டிடத்தையும் வழங்கி கணினிப் பொறிகளையும் வழங்கியிருந்தது. இது தவிர காலத்துக்குக் காலம் திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர்கள் காட்டிய ஆதரவு மூலம் பாண்ட் வாத்தியக் குழுவும் தோற்றம் பெற்றது. இப்பாடசாலையில் க.பொ.த.(உ/த) வைப்பதற்கு எடுத்த ஆரம்பக் கட்ட ஏற்பாடுகள், பல்கலைக்கழகத்திற்கு சென்ற மாணவர்களை கற்பித்தமை மனச் சந்தோசத்தை அளிக்கின்றது.

05-07-2010 களுக்குப் பின் அதிபராக கடமையேற்ற அதிபர் திரு.K.ரவிதாஸ் அவர்களின் காலம் இப்பாடசாலைக்குக் கிடைத்த ஓர் பொற்காலம் என்றே கூறவேண்டும். மாணவரது கல்விசார் அடைவு மட்டங்கள் ஏனைய புறக்கிருத்தியச் செயற்பாடுகள் அனைத்திலும் வித்தியாலயம் நாளுக்குநாள் வளர்ச்சிகளைக் கண்டுகொண்டிருப்பது கண்கூடு. மாணவரது கல்வி ஒழுக்கம் சார்ந்த செயற்பாடுகளில் இவ்வதிபர் கண்ணும் கருத்துமாய் இருந்து பல்வேறு முன்னேற்றப் பாதைகளை வகுத்துக்கொண்டிருப்பதைக் காணும் நாம், இவ்வதிபரது செயற்பாடுகளைப் போற்றுவதுடன் இப்பாடசாலை இவரது காலத்திலேயே கல்லூரியாகத் தரமுயர்த்தப்பட்டு அன்புவழிபுரக்கிராமச் சூழலில் இருந்து நகர்ப்புறம் நோக்கி நகரும் பிள்ளைகளையும் உள்வாங்கி அபிவிருத்தியடைய வேண்டுமென மனதார வாழ்த்துகின்றேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறிவேப்பிலைகளா நாங்கள்?

திருமதி. சுதாமதி சுகுணலிங்கம்
(BA.Dip.in.Ed) - ஆசிரியர்

அன்பிற்கு இலக்கணமாயிருந்தும்
அறிவுரைக்கு இலக்கணமாய் இருந்தும்
வாழ்கின்ற காலத்தில் குடும்பத்தின்- என்றும்
ஆணி வேராய் இருப்பவர்கள்
நாமிருவர் நமக்கிருவர் என்ற
நல்லோர் கருத்திற்கமைய
ஓராணும் ஓர் பெண்ணுமாய்
ஈரைந்து மாதங்கள்கருவோடு சுமந்து
ஈன்றெடுத்து தரணிக்கு தந்து
ஈர்மூன்று வயதிலே எம்மை
ஈசனுக்கு இணையாம் ஆசானைக்காட்டி
பன்னிரண்டு ஆண்டுகளில்
பாடசாலைக் கல்வியையும் தந்து
பள்ளிப்பருவத்தில் பாடப் புத்தகமும்
பரீட்சைக் கட்டணமும்
உரிய வேளையில்கட்டிட வேண்டி
ஒரு வேளை உணவைத் தியாகம் செய்து
பாடப்புத்தகமும் வாங்கிப்படித்து
பரீட்சையில் பெற்ற சித்தியுடனே
சிந்தை மகிழ்ந்து சிலகாலம் கழிக்க
பட்டக் கல்வி கற்கும் பல்கலைக்கழகமும்
பண்டிகையும் வந்திடவே
பணத்திற்கு செய்வதென்ன?
பலவழியில் யோசித்தும் பலனும் கிடைக்கவில்லை
பள்ளத்துக் காணியிலே பாதியை
பண்ணையார் காணியுடன் சேர்த்துவிட்டு
பணம் பத்தாயிரம் கொண்டு வந்து
பட்டுப் பாவாடை சட்டையுடன்
பல பொருட்களும் வாங்கி வந்து
பண்டிகை கொண்டாடி மகிழ்ந்திட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் வருமானம் போதாது
தொடர்ச்சியான படிப்பிற்கு
தொட்டிலில் கிடக்கும் போது
என் அன்னை எனக்களித்த
தங்கச் சங்கிலியை தட்டானிடம்
விற்று விட்டுப் பெற்றபணம் கொண்டு
பட்டப் படிப்பினை பலவாறு முடித்துவிட்டு
உதிரத்தை வியர்வையாய் அர்ப்பணித்து
ஊக்கமுடன் கல்வியை தந்து
பருவத்திலே திருமணமும் செய்து விட்டு
பிள்ளைகள் வாழ்வில் பெருமிதம்கண்டு
பிந்திய நாட்களில் பேரன் பேத்தி கொஞ்சிடும் போது
முதுநரை தெரிந்து முதுமையும் வந்திடும்
உடல் என்னும் இயந்திரம் இயக்கத்தைக் குறைத்திடும்
இயங்காத இயந்திரத்தை இனி எதற்கு
என்றெண்ணி எள்ளி நகையாடிடுவர்
மூத்தபிள்ளை வீட்டில் மூவிரு மாதங்கள்
இளையமகள் வீட்டில் இருமூன்று மாதங்கள் - என
வருடத்தை மட்டும் சரிபாதியாக்கிடாமல்
பெற்றோர் இருவரையும் இருதுருவங்களாக்கி
பெரும் சுமையொன்றை சுமப்பது போல
பெற்றோர்களை சுமக்கும் நிலையை
எண்ணி எண்ணி என்றும் ஏங்கும்
எத்தனை நெஞ்சங்கள் இன்றுண்டு
மகன் வீட்டில் சாப்பாடும்
மருமகளின் குறைகாணும் பேச்சும்
நித்தம் நித்தம் நெஞ்சினிலே
குத்தல்களும் குமுறல்களும் - என்றும்
ஆறாத வடுக்களாய் ஆழமாய்ப் பதிந்திட
மகளின் வீடு சென்று மனமகிழ்ந்து
வாழ்ந்திடலாம் வாருங்கள் என
அருமை மனையாளின் ஆசை வார்த்தை கேட்டு
அங்கிருந்து புறப்பட்டு அவள் அகம் சேர்ந்திடவே
மருமகனின் மரியாதை கெட்ட வார்த்தைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளின் மனம் வருந்திய குமுறல்களும்
தினம் கேட்டு திசைமாறி
செல்வதெங்கே தெரியாதே
வயதாகிப் போனதால் வடுக்கேட்டு வருந்தி
வழிதெரியாமல் வாடிக் கொண்டும் நின்று
கண்ணீரின் துளிகள் வெண்ணிற மீசை நனைக்க
கட்டிய மனையாள் கேட்டுவிட்டால் விம்மி அழுதிடுவாள் - என்றெண்ணி
தன்கையால் துடைத்து விட்டு தள்ளாடி நடந்து
முதியோர் இல்லக் கதவைத் தட்டிட.....
குடும்பம் என்னும் பல்கலைக்கழகத்தில்
விரிவுரையாளராய் துணைவேந்தராய் இருந்த நாம்
குடும்பம் என்னும் சமையலில்
அரிசியாய்க் கறியாய்ப் புளியாய் இருந்து
சுவையான சக்தியூட்டிய நாம்
இன்று வெறுத்து ஒதுக்கித் தள்ளிவிட
"கறிவேப்பிலைகளா? நாங்கள்!

# நான் விரும்பும் தொழில்

உலகிலுள்ள தொழில்களில் மக்கள் உயிர் காக்கும் தொழில் வைத்தியமாகும். அதுவே நான் விரும்பும் தொழில். நோயால் வாடும் மக்களின் துயர் துடைப்பவனே வைத்தியனாவான். அவன் பயன் கருதாது பணி செய்பவன். காலை, மாலை என்று பாராது எந்நேரமும் அவன் கடமை செய்யக் கடமைப்பட்டுள்ளான்.

ஏழை, பணக்காரன், தாழ்ந்தவன் என்ற பேதம் பாராது அனைத்து உயிருக்கும் தொண்டாற்றுபவன் வைத்தியன். அவனது தொழில் புனிதமானது. இப்புனிதமான தொழிலில் ஈடுபட்டுழைப்பதே என் இலட்சியமாகும்.

பயிர்களைப் பிடித்து வாட்டும் பிறவிப் பிணியைப் போக்கி அவர்களுக்குப் பேரின்பத்தை வழங்குபவன் இறைவன். அவன் வைத்தியநாதன் என அழைக்கப்படுகிறான். இம்மண்ணுலகில் நோயால் வாழும் துன்பத்தைப் போக்குபவன் வைத்தியனாவான்.

செல்வி. உ. புவனப்பிரியா
தரம் - $6^B$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீ அனர்த்தங்களினால் ஏற்படும் அழிவுகளைத் தவிர்ப்பதற்கான ஆலோசனைகள்

இன்று எமது நாட்டின் பொருளாதார ரீதியான பெரும் அழிவுகளை ஏற்படுத்துவதில் நெருப்பு முக்கிய காரணியாகத் திகழ்கிறது. பெரும் முதலீடுகளை இட்டு வர்த்தகம் செய்ய முற்படும் நாம் அதனை அழிவுகளிலிருந்து காப்பதற்கான முன்னவதானிப்பைக் கவனிக்கத் தவறிவிடுகின்றோம். இக்கவனயீனத்தால் பாரிய சொத்தழிவுகளுக்கும், உயிர், உடல் சேதங்களும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. அனர்த்தம் ஏற்படும் முன்னரே எச்சரிக்கையாக பாதுகாப்பை உறுதிப்படுத்துவோமானால் வந்த பின் காப்பதை விட வரமுன் காப்பதே மேல் என்ற முதுமொழிக்கமைவாக ஏற்படப்போகும் அனர்த்தங்களில் இருந்து தப்பித்துக்கொள்ள வாய்ப்புக்கள் உண்டு.

## தீ ஏற்படுவதற்கான காரணிகளாவன:

அனர்த்தம் பற்றிய போதிய அறிவின்மை, விபத்து, அலட்சியம் இவையே முன்னணி வகிக்கின்றன. ஒருவருடைய அலட்சியச் செயற்பாட்டால் தொடர் வியாபார ஸ்தலங்கள், ஏழைகளின் தொடர் குடியிருப்புக்கள் (லயன்கள்), வளமிக்க வளங்கள் எனத்தினமும் நாட்டின் ஏதோ ஒரு இடத்தில் நெருப்பினால் அழிவுகள் ஏற்பட்டுக் கொண்டிருப்பதை நாம் செய்திகள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. இவ்வழிகளை எப்படித் தவிர்ப்பதும் நாட்டில் வாழும் சமையலறையில் செயல்படும் பெண்கள் உட்பட சகலரும் தீ அனர்த்த முதல் நிலை தடுப்பு முறை அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டும் இதனால் தம்மையும் தமது சொத்துக்களையும் மற்றவர்களுடைய உயிரைக்கூட காப்பாற்ற முடியும்.

## தீ உருவாவதற்கான முதல்நிலைக்காரணிகளாவன:

1. பாதுகாப்பற்ற முறையில் தீ வைத்தல்
2. மின்சாரம்
3. சமையல் எரிவாயு

### 1. பாதுகாப்பற்ற முறையில் தீ வைத்தல் :-

பாதுகாப்பற்ற முறையில் குப்பைகளுக்குத் தீ வைப்பது, ஓலைக்குடிசைகளில் பாதுகாப்பற்ற வகையில் மண்ணெண்ணெய் விளக்குகளைக் கையாள்வது, காட்டில் விறகு வெட்டச் சென்று வனங்களே எரிந்து நாசமாகி விடுவிறது. மேற்குறிப்பிட்ட அனர்த்தங்கள் மனிதர்களின் அலட்சியப் போக்கினாலும் அழிவுகளின் விளைவுகளைப் புரிந்து கொள்ள முடியாத அறிவற்ற தன்மையினாலுமே பெரும்பாலான தீ அனர்த்தங்கள் ஏற்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதனையாளர்கள் தேசிய மட்டம்



செல்வி.சௌ.விதுர்ஷிகா



செல்வி.சௌ.கனேசிகா



செல்வி.சௌ.சேலக்ஷிகா



செல்வி.பு.கீர்த்திகா



செல்வன்.அ.கிஷாந்

## பல்கலைக்கழகம்



செல்வி.S.லேவண்யா



செல்வி.J.டுபாசினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனையாளர்கள் மாகாண மட்டம்



செல்வி.ச.திவ்வியா



செல்வி.க.நாகேஸ்வரி



செல்வி.உ.சலோமி, செல்வி.சௌ.திவ்வியா, செல்வி.லெ.மதிவதனி,
செல்வி.சௌ.பிரியங்கா



செல்வி.ம.நிஷாந்தினி



செல்வி.ச.தர்ஷிக்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. மின்சாரத்தினால் ஏற்படும் தீ :-

பொருத்தமற்ற மின்சார இணைப்புக்கள் சேதமடைந்த மின்சார இணைப்புகள், உபகரணங்கள் மேற்கூறப்பட்ட காரணங்களால் தூண்டப்படும் தீயானது பின்னர் அதனோடு சம்பந்தப்பட்டுள்ள சாதாரண பலகை, ஓலை, கடதாசி, பிளாஸ்டிக், துணிகள் போன்ற பொருட்களோடு சேர்ந்து விசாலமாகப் பற்றிப் பரவத் தொடங்குகின்றது. இச் செற்பாட்டைச் சாதாரண தீ எனக் குறிக்கின்றோம். மின்சாரத்தால் தூண்டப்பட்ட தீ ஏற்பட்டாலோ வேறு காரணங்கள் மூலமாகத் தீ ஏற்பட்டாலோ தீயை அணைக்கப் போகும் முன்னர் உடனடியாக மின்சாரத்தைத் துண்டித்து விட்டே செயல்பட வேண்டும் சில வேளைகளில் பிரதான ஆழி பொருத்தப்பட்டுள்ள பகுதியை நெருங்க முடியாவிட்டால மின்சாரத்தைத் துண்டிப்பதற்கான வழிவகைகளைக் கைக்கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் மின்சாரம் தாக்கி அனர்த்தம் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. உங்களுடைய பாதுகாப்பை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

இச்சந்தர்ப்பத்தில் சாதாரண பொருட்கள் அல்லாமல் எண்ணெய் சம்பந்தமான திரவங்களாக இருக்குமேயானால் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் போன்ற திரவங்கள் மின்சார ஒழுக்கை ஆதாரமாகக் கொண்டு தீப்பற்றிப் பெரும் அழிவுகளை ஏற்படுத்தச் செய்யும். இந்நிகழ்வை எண்ணெய் சம்பந்தமான தீ எனக் குறிப்பிடுகின்றோம். இதை சாதாரண தனி மனிதர்களால் கட்டுப்படுத்துவது கஸ்டமும், ஆபத்தும் கூடியதாகும். எனவே உடனடியாக தீயணைப்புப் படையினருக்கும் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கும் தகவலை அறிவிக்க வேண்டும். மேற்குறிப்பிடும் தீ ஏற்பட்டால் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். தீப்பற்றிக் கொண்ட பெற்றோலிலும், கானிலும் உள்ளடக்கப்பட்டுள்ள திரவம் வெடித்துச் சிதறி தீச்சுவாலைகள் 50 - 100 அடி தூரத்திற்குக் கடத்தக் கூடியது.

எனவே தங்களுடைய பாதுகாப்பைக்கருத்திற் கொள்வதோடு மற்றவர்களுடைய பாதுகாப்பையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அவ்விடத்தை விட்டு தூர விலகிச் செல்ல ஒத்தாசை புரிவது சாலச்சிறந்தது.

## 3. சமையல் எரிவாயுவினால் ஏற்படும் தீ :-

சமையல் எரிவாயு மூலம் தீ ஏற்படுவதற்கான காரணிகளாக பின்வரும் விடயங்கள் கவனிக்கப்படுகின்றன. எரிவாயு சிலிண்டருக்கும், அடுப்பிற்குமிடையே தொடர்புபடுத்தும் குழாய் சீராக பொருத்தப்படாமை, இயக்குவதில் பிழையான வழிமுறை, பொருத்தமற்ற வகையில் களஞ்சியப்படுத்தல் எலி போன்ற உயிரினங்கள் வாயு செல்லும் குழாயை சேதப்படுத்துவதால் தீ ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. எனவே எரிவாயுவால் ஏற்படும் இவை போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனர்த்தங்களை தவிர்த்துக் கொள்ளும் பாதுகாப்பு முறைகளை நாம் கைக்கொள்ள வேண்டும்.

எரிவாயு சிலிண்டரை சமையலறைக்கு வெளிப்பகுதியில், அடுப்பிற்கு அருகாமையில் வைத்தல் வேண்டும். சுவரில் ஓர் சிறு துளையிட்டு எரிவாயு செல்லும் குழாயை அதனூடாக உட்புகுத்தி மறுபக்கத்தில் (வெளியே) உள்ள எரிவாயு சிலிண்டரோடு பொருத்திவிட வேண்டும். எரிவாயு சிலிண்டரை மழை, வெயிலில் சேதமடையாமல் பாதுகாப்பாக வைத்து விடுங்கள். சமையலறைக்குள் தற்செயலாக தீ ஏற்பட்டால் உடனடியாக சமையலைறையை விட்டு வெளியேறி சிலிண்டரின் மேலே பொருத்தப்படிருக்கும் ரெகுலேற்றை கழற்றி விட்டீர்களேயானால் எரிவாயு செல்வது தடைப்பட்டு விடும். அதன் பின்னர் சாதாரண தீயாக இருந்தால் நீரை விசிறி நெருப்பை அணைத்துக்கொள்ள முடியும். இச்செயல் முறை உங்களையோ, உங்கள் சொத்துக்களையோ பாதுகாக்கக் கூடிய சுலபமான வழிமுறை என்றே கூறலாம்.

சமையலறைக்கு வெளியில் எரிவாயு சிலிண்டரை வைப்பதற்கு இடவசதி இல்லாதவர்கள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தவறான செயல் முறைகளையும், குறைபாடுகளையும் சீர் செய்வதில் கவனம் செலுத்தி பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அதிகாலை வேளையில் சமையலறைக்குச் செல்லும் முன் சற்று அவதானமாகச் செயற்பட வேண்டும். இரவு நேரங்களில் ஜன்னல், கதவுகளைப் பூட்டி விட்டுச் செல்வதால் சில வேளைகளில் எரிவாயு செல்லும் குழாயின் பொருத்துக்கள் தளர்வடைந்திருந்தாலோ, எலி போன்ற ஜந்துக்கள் வாயு செல்லும் குழாயை சேதமாக்கி விட்டாலோ அதன் மூலம் வெளியேறும் வாயு பூட்டியுள்ள சமையறை முழுவதும் நிறைந்திருக்கும். சாதாரண வளியை விட எரிவாயுவின் அடர்த்தி சீத அளவு கூடியதாக இருந்தால் அடுப்பை இயக்கும் போது தீப்பொறியால் சமையலறை முழுவதுமே தீப்பற்றக் கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. சமையலறைக்குள் நுழையும் போது அறை இருளாக இருப்பதனால் வெளிச்சத்தை ஏற்படுத்துவதற்காக ஆழியை இயக்கும் போது அதில் குறைபாடுகள் ஏதும் இருந்தால் அதனால் ஏற்படும் தீப்பொறியினால் சமையலறை முழுவதுமே தீப்பற்றிக் கொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு.

எனவே விடியற்காலையில் சமையலைக்குள் செல்ல முன்னர் உள்ளிருந்து வித்தியாசமான மணம் வருகிறதா என அவதானித்துக் கொள்ளுங்கள். எரிவாயுவின் மணம் பேரீச்சம்பழத்தை ஞாபகப்படுத்துவது போன்று இருக்கும். முதலில் சமையலறைக்குள் சென்று ஜன்னல், கதவுகளை திறந்து விடுங்கள். இச்செயற்பாட்டால் வெளியில் பரவியிருக்கும் சாதாரண வளி உட்புகும் போது சமையலறைக்குள் வியாபித்திருக்கும் எரிவாயு சாதாரண வளியுடன் கலந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைய எரிபற்றும் வீரியத்தை இழந்து விடும். எனவே அதன் பின்னர் அறையினுள் வெளிச்சத்தை ஏற்படுத்துங்கள்.

எரிவாயுவின் காரணியாகக் கொண்ட எண்ணெய் பற்றிக் கொள்ளுமானால் மின்சாரத்தின் ஆதாரத்தோடு ஏற்படும் எண்ணெய் தீயைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளை மின்சாரம் என்ற பகுதியில் விளக்கமளிக்கப்பட்டுள்ள வழிமுறையில் செயல்படுவீர்களேயானால் உங்கள் உயிர்களையும், சொத்துக்களையும், பாதுகாப்பதில் எந்த விதக் கஸ்டமும் ஏற்படாது.

1. உங்களுடைய பாதுகாப்பு
2. பிற உயிர்களைப் பாதுகாத்தல்
3. தீ ஏற்பட்ட பகுதியில் தெளிவான விபரம்
4. என்ன வகையான தீ என்பதை அறிந்து கொள்ளல்
5. பொருத்தமான தீ அணைப்பு
6. உபகரணத்தை பாவித்தல்

பூட்டியிருக்கும் களஞ்சிய அறையினுள் தீ ஏற்பட்டால் அறிந்து கொள்வது ஆரம்ப நிலையில் கஸ்டமாக இருக்கும். களஞ்சிய அறையிலிருந்து வித்தியாசமான மணம் வெளிவருமாக இருந்தாலோ உள்ளிருந்து புகைவருவதை அறிந்து கொண்டாலோ, அவ்வறையின் வெளிப்புறச்சுவரில் கையை வைத்துப் பார்த்தல் வெப்பமாகவிருந்தால், அச்சுவரில் பூட்டப்பட்டிருக்கும் அவ்வறையினுள் தீ ஏற்பட்டுள்ளதென்பதை அறிந்து கொள்ளலாம். உடனே சென்று கதவைத் திறந்தால் உள்ளிருந்து வெளியே வீசப்படும் தீச்சுவாலையின் வெப்பத்தினாலோ, வெப்பத்தோடு கூடிய கரும்புகையினாலோ உங்களுக்கு ஆபத்து ஏற்படலாம். எனவே, அவதானமாக கதவின் பக்கவாட்டில் சுவரைப் பாதுகாப்பாகக் கொண்டு கதவை மெதுவாகத் திறந்தால் நேரடியாக உங்களுக்கு ஏற்படும் ஆபத்தைத் தவிர்த்துக் கொள்வதோடு, ஆரம்பத்தில் கூறியபடி தீயைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளை கைக்கொள்ளுங்கள், இல்லாவிட்டால் பிற உதவிகளைப் பெற்றுக்கொள்ள முயற்சி செய்யுங்கள்.

செல்வன். ஜ. சுமன்
தரம் - 12





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடைகளைத் தாண்டி...!

திருமதி. சரோசா இராமநாதன் - பிரதி அதிபர்
கலைமாணி பட்டதாரி

அன்று புதன் கிழமை. கல்வியியல் கல்லூரிக்கு விண்ணப்பம் அனுப்புவதற்காக அதிபரின் சிபார்சினைப் பெற்றுக் கொள்வதற்குத் தனது பாடசாலைக்குச் சென்றிருந்தாள் வதனா.

"குட்மோனிங் சேர்"........

குட்மோனிங் வாங்கோ......

அதிபரிடம் விண்ணப்பத்தைப் பயிலுடன் நீட்டினாள். அதிபரும் முகமலர்ச்சியுடன் தனது மாணவியின் விண்ணப்பத்தைச் சிபார்சு செய்தார்.

"வாழ்த்துக்கள் வதனா. உமக்குக் கட்டாயமாகக் கிடைக்கும்"............

கூறு முன்பே அதிபரின் காலில் விழுந்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்ட வதனாவின் கண்களிலிருந்து பொல பொல வென்று கண்ணீர் வழிந்தோடியது....... நெஞ்சம் கனத்தது. படிவங்களுடன் அலுவலகத்தை விட்டு வெளியே வந்தாள்.

அதிபரின் அனுமதியுடன் நேரே தனக்கு விருப்பமான கமலா ரீச்சரைத் தேடிச்சென்றாள். அவரிடமும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டாள்.

"நிச்சயம் உமக்கு கிடைக்கும்"...........

கமலா ரீச்சர் கூறி முடிக்கும் முன்... "மிஸ் எனக்கு அம்மா, அப்பா எல்லாமே இந்த பள்ளிக்கூடம் தான்"......தேம்பி தேம்பி அழுகிறாள்.

"என்ர அம்மாவோ அப்பாவோ என்னப் படிப்பிக்க கஷ்டப்பட இல்ல".........

"அதனால தான் நான் முதல் தடவை ஓலெவல் பரீட்சை எழுதி பாஸ் பண்ணல்ல"......
"அதுக்குப் பிறகு பள்ளிக்கூடம் வரப் பயத்துல வீட்டில் இருந்துட்டன்".........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் தான் மிஸ் சேர் ஆட்கள் இரண்டு பேரை எங்கட வீட்ட வரப்பண்ணிக் கட்டாயமாகப் பள்ளிக் கூடத்தால இரண்டாந்தரம் ஓலெவல் பரீட்சை எழுத வைச்சனீங்க"............

அழுகையினிடையே மனதின் துயரங்களைக் கொட்டினாள் வதனா.

கமலா ரீச்சர் அவளுக்கு ஆறுதல் சொல்லித் தேற்றுகிறார்.

எத்தனையோ ஆசிரியர்கள் பிள்ளைகளைத் தமது பிள்ளைகளாகவே கருதுகிறார்கள். பசிக்கு உணவு வாங்கிக் கொடுக்கிறார்கள். உடைகள், சப்பாத்து போன்றவற்றை வாங்கிக் கொடுக்கிறார்கள். டியுசன் காசு கொடுக்கிறார்கள். இவை எல்லாம் வெளி உலகுக்குத் தெரிவதில்லை. ஆனாலும்...
பிள்ளைகளின் மனதில் இவை இருந்து கொண்டேயிருக்கும்.

கமலா ரீச்சரின் நினைவு பின்னோக்கிப் பார்க்கிறது.
ஓலெவல் பரீட்சை முடிவுகள் வெளிவந்தன. வதனா பள்ளிக்கூடப் பக்கம் வரவில்லை. அவள் ஆறு பாடத்தில் சித்தி பெற்றிருக்கவில்லை. அவளது வீடும் கமலா ரீச்சருக்குத் தெரியாது. இரண்டு ஆசிரியர்களிடம் அவளது நிலை பற்றி பேசினார். அவர்கள் தேடிப் போய் வதனாவிடம் மீண்டும் பாடசாலைக்கு வரச் செய்தனர். பாடசாலையின் மூலம் இரண்டாந் தடவை ஓலெவல் பரீட்சைக்கு விண்ணப்பிக்குமாறு கமலா ரீச்சர் கூறினார். இவ்வாறு பரீட்சை எழுதித் தகைமையைப் பெற்றுக் கொண்டாள் வதனா.

இதன் போது அவளைத் தனது வீட்டில் தங்கவைத்துப் பரீட்சை எழுத வழி செய்து கொடுத்தவர் நிர்மலா ரீச்சராவார். வதனா உயர்தர வகுப்புக்குள் நுழைந்து விட்டாள். இதனிடையே தாய் தந்தையர் கல்விச் செலவிற்காக அவளுக்கு எந்தவிதமான உதவியையும் செய்யவில்லை,...

இனி..........
உயர்தர வகுப்பில் இரண்டு வருடங்கள் கஷ்டப்பட்டுப் படிக்க வேண்டும். டியுசன் செலவுகள் ஒப்படைகள் நூலக தேடல்களுக்கான செலவுகள், புத்தகங்கள் எனப் பலதரப்பட்ட செலவுகள் உண்டு. இவற்றையெல்லாம் எவ்வாறு சமாளிப்பது? என்பது பற்றியே எந்நேரமும் சிந்தித்துக் கொண்டிருப்பாள் வதனா. யாருடனும் இது பற்றிப் பரிமாறிக் கொள்ளமாட்டாள். அடிக்கடி பெருமூச்செறிவாள். பெயருக்கேற்ற முகலட்சணமுடைய அவள் முகம் எப்போதும் வாட்டமுற்றே காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதனா சிறந்த பேச்சாற்றலுள்ள மாணவி. தமிழ் மொழியில் நடிப்பு, விவாதத்திறன், பேச்சுப்போன்றவற்றில் அபார திறமையுள்ளவள், பாடசாலை ஆசிரியர்களால் விரும்பப்படுபவள். பல்கலைக்கழகம் செல்வாள் என்றே அனைவரும் எண்ணினர்.

அவளது திறமைகளைப் புடம் போட்டுப் பார்த்த கமலா ரீச்சர் வதனா பல்கலைக்கழகம் செல்வாள் என்று நம்பினார். பாடசாலை அதிபரிடமும் இவள் பற்றி அடிக்கடி கலந்துரையாடுவார். மேடை நிகழ்வுகளில் அவளது திறமைகளைப் பார்த்து ரசித்து மகிழ்பவர் அவர். உயர்தர வகுப்புப் பரீட்சைக்கு இரண்டு மாதங்களே இருந்தன.

வதனா பாடசாலைக்கு வரவில்லை. ஏனைய மாணவர்களுக்கும் அவள் பற்றித் தெரியவில்லை. இறுதியாக ஒரு மாணவி தகவலறிந்து கூறினாள்.

வதனா வறிய குடுப்பத்தைச் சேர்ந்தவள். தந்தை கூலி வேலை செய்பவர். தாய் இல்லத்தரசி. இருவரும் அதிகம் படிக்கவில்லை. வதனாவுடன் இளைய மகளும் மகனும் அவர்களுக்குண்டு. தந்தை உழைக்கும் சம்பாத்தியத்தில் குடித்தே காலம் கழித்தவர். தாயினால் குடும்ப செலவினங்களைச் சமாளிக்க முடியவில்லை. பெரிதும் சிரமப்பட்டாள். என்றாலும் குடும்பக் கட்டுக்கோப்பு கௌரவம் குலைந்து போகாமல் இருக்கப் பொறுத்துக் கொண்டே வந்தாள். எவ்வளவு காலம் தான் பொறுப்பது?

ஒருவாறாக வட்டிக்குக் கடன் வாங்கி வெளிநாட்டு வேலைக்குத் தந்தையை அனுப்பி வைத்தார்கள். அங்கிருந்து மூன்று மாதத்துக்கு ஒருமுறை தந்தை அனுப்பிய பணத்தில் வட்டியை மட்டுமே செலுத்தினர். பட்டகடன் அப்படியே இருந்தது..... தந்தை இரண்டு வருடங்களின் பின் நாடு திரும்பி ஊருக்கு வந்தார்... அத்திவாரம் போட்டுக் கட்டத் தொடங்கிய வீட்டு வேலைகள் முடிக்கப்படாமல் அரைகுறையாகக்கிடந்தன. கடன் கொடுத்தவர்கள் கடனைக் கேட்டு வந்தனர்.

வதனாவின் தந்தை மீண்டும் குடித்து விட்டுத் தாயுடன் சண்டை பிடித்தார். தாயை அடித்துத் துன்புறுத்தினார். தாய் யோசித்தாள்... பெண்பிள்ளைகள் வளர்ந்து நிற்கின்றனர். இப்போது ஏதாவதொரு முடிவை எடுத்தேயாக வேண்டும். இதற்கு ஒரே வழி கணவரிடமிருந்து விவாகரத்துப் பெறுதலே இதற்காகத் தாயும் பிள்ளைகளும் சில நாட்கள் உறவினர் வீட்டில் தங்கினர்.

தந்தை தேடினார்.........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியையும் மக்களையும் தேடி விசாரித்து கண்டு பிடித்தார். வீட்டுக்கு வருமாறு வற்புறுத்தினார். தாயும் பிள்ளைகளும் வருவதற்கு மறுத்து விட்டனர். தாய்க்கும் தந்தைக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. உள்வீட்டு விவகாரங்கள் தெருவிலே பேசப்பட்டன. வதனாவிற்கு பெரும் சங்கடமாகி விட்டது. இதனிடையே உறவினர்கள் தலையிட்டுப் பிரச்சினையைத் தீர்த்து சமாதானப்படுத்த முயன்றனர். முடியவில்லை……

கணவனின் தொல்லை தாங்க முடியாமல் செய்வதற்கு வேறு வழி ஒன்றும் தெரியாத மனைவி மீண்டும் வீட்டுக்கு பிள்ளைகளுடன் வந்தாள். பாடசாலை அதிபரிடமிருந்து வதனாவுக்கு அழைப்பு வந்திருந்தது. அவ்வாறே அவளும் பாடசாலை சென்று அதிபரின் ஆலோசனையைக் கேட்டாள். தாய் தனது மூத்த பிள்ளையின்றி வீட்டு நிலைமைகளைச் சமாளிக்கவோ கணவனின் தொந்தரவுக்கு முகம் கொடுக்கவோ முடியவில்லை.

இவ்வாறான நிலைமை ஏன்?
தனது கணவன் ஒரு நல்ல குடும்பத் தலைவனாக இருந்திருந்தால் இப்படிக் கஷ்டங்கள் ஏற்படுமா?தாய் யோசித்து யோசித்துக் குழப்பமடைந்தாள். மனக்குழப்பம் ஏற்பட்டு பிதற்றினாள். தாயை ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். வதனா தாயுடனேயே இருந்தாள். பரீட்சை நெருங்கிக் கொண்டிருந்தது. வதனா பரீட்சை எழுதுவாளா?

பரீட்சை அனுமதி அட்டை வந்தது.

அதிபரும் கமலா ரீச்சரும் வகுப்பாசிரியரும் அங்கலாய்த்தனர்.
என்ன செய்வது?………..

அதிபர் விசாரித்தார். அவளது வீட்டைத் தேடிக் கண்டு பிடித்துப் புத்திமதிகள் சொன்னார். பாடசாலைக்கு வரும்படி கூறினார்.

வதனாவும் வந்தாள்.

அன்று பரீட்சை அனுமதி அட்டை வழங்கும் நாள் அனுமதி அட்டையில் கையொப்பத்தைப் பெற்றுக் கொண்ட எல்லா மாணவர்களும் அதிபர், ஆசிரியர்களின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளக் காலில் வீழ்ந்தனர். வதனா காலில் விழுமுன்பே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சேர் உங்கள் எல்லாருடைய எதிர்பார்ப்பையும் என்னால நிறைவேற்ற முடியாமல் போகப்போகுது சேர்"

"என்னால எதனையும் கிரகிக்க முடியவில்ல"......
அம்மாவுக்குச் சுகமில்ல வாட்டில் இருக்கிறா"........
"என்ர பதின்மூன்று வருட இலட்சியம்"
வாய்விட்டு அழுதாள் வதனா.
கமலா ரீச்சர் தேற்றினார்.

"சரி இப்போ பரீட்சையை எழுது. இவ்வளவு நாளும் படிச்சதை வைச்சு பாஸ் பண்ணினாப் போதும்"....... அதிபர் ஆறுதல் கூறினார்.

மன அமைதியுடன் புறப்பட்டு சென்ற வதனா பரீட்சை எழுதினாள். திறமைச் சித்திகளுடன் சித்தி பெற்ற வதனாவுக்குப் பல்கலைக்கழகம் செல்ல வாய்ப்போ வசதியோ இருக்கவில்லை. தான் இந்தளவாவது தப்பித்துக் கொண்டதையிட்டு சந்தோஷப்பட்டாள்.

தற்போது விண்ணப்பப் படிவங்களுடன் செல்லும் வதனாவுக்குக் கல்வியியல் கல்லூரி அனுமதி கிடைக்குமா? அவளது எதிர்காலம் எவ்வாறு அமையப் போகிறது?

காலம் பதில் சொல்லும்.

## சின்ன ரோஜாவே...!



சின்னச் சின்ன ரோஜாவாம்
சிரிக்கும் அழகு ரோஜாவாம்
நினைக்கும் போது மனதெல்லாம்
உவகை பொங்கி வழியுதே!

சிவப்பு மஞ்சள் நிறங்களில்
செழிப்பு மலர்ந்து சிரிக்குதே
அம்மா, அப்பா அனைவரும்
அதனைப் பார்த்து ரசிக்கின்றார்!

செல்வி. இரா. கேஷவி
தரம் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவிக்காய் ஏங்கும் உள்ளங்கள்!

உதவிகள் செய்யும்
உன்னத மனிதர்கள் இன்று
உலகில் பணத்துடன்
உல்லாசமாய் வாழ்வதில்லை.

பணக்காரர்களும் அவர்களுக்கு
பாவ புண்ணியங்கள்
பார்த்துத்தான் பாரினில்
பரமானந்தத்துடன் வாழ்கின்றார்களா?

உதவி உதவி என்று
உள்ளங்கள் அலையும் போது
ஊரில் உள்ள வீடுகளில்
ஊசி சத்தம் கூட இல்லை.

பந்தங்கள் எல்லாம்
வற்றி விட்டாலும் கூட
பசிக்கும் அன்புக்கும்
பதற வேண்டியதாயிற்று.

உத்தம மனிதர்கள்
உன்னதமாக உலகில் வாழ்ந்த போதும்
உருளும் உலகில் இன்றும்
உதவிக்காய் ஏங்கும் உள்ளங்கள்
உலகில் பாதி உண்டு மானிடா!

செல்வி. ஜெ. தனுஷா
தரம் - 11B

# வெண்ணிலா!

வானப் பரப்பினிலே ஒரு
வட்டத் தோசை போலவே
எட்டி நானும் பார்த்திட
எழுந்து எழுந்து வருகிறாய்!

பட்டுப் போன்ற வானிலே
பால் நிறமாய்த் தெரிகிறாய்
எட்டித் தொட்டு பார்த்திட
எந்தன் உள்ளம் துடிக்குது!

இரவினில் மட்டும் தெரிகிறாய்
பகலில் எங்கே செல்கிறாய்?
தேய் பிறையாய்த் தேய்கிறாய்
வளர் பிறையாய் வளர்கிறாய்!

மாதம் ஒரு நாளிலே
மகிழ்ந்து நானும் பார்த்திட
முழு நிலவாய்த் தெரிகிறாய்
முந்தி முந்திச் செல்கின்றாய்!

ஏனோ தேய்ந்து செல்கிறாய்
எழுந்து வளர்ந்து வருகிறாய்
அமாவாசை அன்று நீ
மாயமாக அமைகின்றாய்!

உன்னை காண இன்னுமே
உள்ளம் மகிழ நிற்கின்றேன்
என்றும் முழு நிலவாக
எங்கும் வரமாட்டாயா?

பி. கிசாந்தன்
தரம் - 11A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Modern Ways of Communication Internet

Mrs.T.F. Elizabeth
Teacher B.A

Now we are living the technology world. It is really hard to imagine our life without internet since internet is playing an important role in each every field.

First we see what is internet? The internet is a global system of connected computer net works to link several billions devices in world wide.
Even though internet is having lot of benefits.

- ★ Most of people are interested in spending their time with online activities.
- ★ We can collect information on almost every subject imaginable.
- ★ Many people use the world wide web to access news, weather, and sports reports.
- ★ People use chat messaging and e-mail and keep in touch with their friends and beloved ones in world wide.
- ★ It has powerful search engines also.

  Even though internet is having lot of disadvantage too.
- ★ Students are interested in spending more time with one line sites and forget about their studies kids on interested in playing online games.
- ★ Too much of computer and internet usage is not good for health too.
- ★ Some students are in need to wear spectacle in the child hood days as well as get some un wanted health issues, due too much of usage.
- ★ Some people are getting addicted to the internet and thus causing problems with their inter actions of friends and loves ones.
- ★ internet has a lot of cheater sities and anyone can post anything and much of it is garbage

So it gives us many advantages and also it misleads our life also.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்களைக் கொல்லும் தங்கம் (சிறுகதை)

ஓர் அடர்ந்த காட்டிற்குள் சாமியார் ஒருவர் மூச்சுத்திணற ஓடிக்கொண்டிருந்தார். அதைக் கண்ட மூன்று திருடர்கள் அவரைப் பார்த்து "ஏன் ஓடிக்கொண்டிருக்கிறீர்கள்?" எனக் கேட்டனர். அதற்கு அந்த சாமியார் "என்னை சாவு துரத்துகிறது" எனக் கூறினார். அதைக் கேட்ட திருடர்கள் சாமியாரை பைத்தியம் என நினைத்தனர். அவர்கள் சாவைக் காட்டுமாறு சாமியாரைப் பணித்தனர்.

சாமியார் திருடர்களை அழைத்துக் கொண்டு சென்று ஓர் குகையைக் காட்டினார். அந்தக் குகை முழுவதும் கண்ணைப் பறிக்கும் அளவிற்கு தங்கம் நிறைந்திருந்தது. மூன்று திருடர்களும் தங்கத்தை அபகரிக்க எண்ணினர். ஆனால் அவர்களைப் பசி வாட்டியது. அப்பொழுது மூன்று திருடர்களுள் ஒருவன் உணவு வாங்கச் சென்றான். அவன் உணவு வாங்கி வந்ததும் அவனை மற்றைய இரு திருடர்களும் கொலை செய்துவிட்டனர். தங்கத்தை இருவருமே பகிர்ந்து கொள்ள எண்ணியிருந்தனர். உணவு வாங்கச் சென்ற திருடனோ உணவில் விஷம் கலந்திருந்தான். ஏனெனில் மற்றைய இருவரைப் போலவே தானே தங்கம் முழுவதையும் கவர விரும்பினான். விஷ உணவை உண்ட மற்றைய இரண்டு திருடர்களும் மாண்டனர். தங்கம் மூவரையும் கொன்றது. சாமியார் கூறிய வாக்கும் பலித்தது.

செல்வி. சௌ. சேலக்சிகா
தரம் - 11B

## பூக்கள்!

வண்ண வண்ணப் பூக்களாம்
வடிவான பூக்களாம்
மனதைக் கவர்ந்து எங்குமே
வாசம் வீசும் பூக்களாம்!

தேனைக் குடிக்கும் வண்டுகள்
தேடி ஓடிப் போகுமாம்
மஞ்சள் நிறப் பூக்களாம்
மகிழ்ந்து நாமும் பார்க்கலாம்!

சிறுவரான நாங்களும்
தேடிப் பறிக்கும் பூக்களாம்
கோயிலுக்குத் தினமுமே
கொண்டு செல்லும் பூக்களாம்!

செல்வி. பா. தர்மினி
தரம் - 7B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை அழிவு

விஞ்ஞானமயமான விந்தைகள் நிறைந்த இவ் நவநாகரிக உலகிலே அன்றிலிருந்து இன்றுவரை உலக ரீதியாக ஏற்பட்டு வரும் பாரிய பிரச்சினைகளுள் இயற்கை அழிவு மிக மிக முக்கியமான ஒன்றாகும். இயற்கை அழிவானது ஏற்படுவதற்கு முக்கிய காரணம் வெப்பநிலை அதிகரித்தல் ஆகும். கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தில் இருந்து இவ் இயற்கை அழிவுகள் நடந்து வருவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இயற்கை அழிவானது மூன்று வகைப்படும். காலநிலை அழிவு, உயிரியல் அழிவு, புவி வெளியுருவ புவிச்சரித அழிவு என்பனவாகும். காலநிலை அழிவுகள், சூறாவளி, பனிச்சூறாவளி, அனல்காற்று, திடீர் கடும் குளிர் காற்று, வெள்ளப் பெருக்கு, வரட்சி, பனிக்கட்டியாதல் என்பனவாகும். புவிநடுக்கம், எரிமலை வெடிப்பு, நிலவழுக்கை, மண்சரிவு, மண்ணரிப்பு, பனிப்பாறைச் சரிவு என்பன புவிவெளி உருவ புவிச்சரித அழிவுகள் ஆகும். நீர், நிலம், தீ, ஆகாயம், காற்று ஆகிய காரணிகள் இயற்கை அழிவுகள் நடைபெற காரணமாகும்.

பஞ்ச பூதங்கள் இன்றி ஓர் அணுவும் அசையாது. பஞ்ச பூதங்களால் தான் காட்டுத்தீ, புவிநடுக்கம், அமிலமழை, மண்ணில் நைதரேற் அதிகரித்தல், கடற் பகுதிகளில் எண்ணெய்க் கழிவுகள் கலத்தல், ஆபத்தான வகையில் கழிவுகளை அகற்றல் போன்ற பிணக்குகள் ஏற்படுகின்றன என்று கூறுவதில் எந்தவித ஐயமும் இல்லை. அதிக காற்றால் மரங்கள் ஒன்றோடு ஒன்று உரசுவதால் காட்டுத் தீ ஏற்படுகிறது. புவியின் உட்பாகத்தில் உருகிய பாறைக் குழம்பான மக்மா புவியின் இடை வெளியினூடாக (புவியின் இடையோட்டு) வெளிவருவதால் எரிமலை ஏற்படுகின்றது. சூறாவளியும் இயற்கை அழிவுக்கு ஓர் சிறந்த உதாரணம் ஆகும்.

தாழமுக்க வட்டமையத்தை நோக்கிக் காற்றுக்கள் ஒருங்கும் போது ஏற்படும் தாழமுக்கம் வட்ட மையத்திலிருந்து வெளிப்புறமாகச் செல்லச் செல்ல அமுக்கம் அதிகரிக்கின்றது. இத்தாழமுக்க வட்ட மையத்தை நோக்கி காற்றுக்கள் மிக வேகமாக ஒருங்கும். அவ்வாறு ஒருங்கும் போது அந்த இடத்தில் ஏற்படும் சுழற்சியை சூறாவளி எனலாம்.

சோமாலியா, பிறேசில், ஹவாய் தீவுகள், இஸ்ரேல், எட்னா, உகண்டா, குவாங்கோ, ஜப்பான் போன்ற அநேக நாடுகள் இயற்கை அழிவுகளுக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கின்றன என்று கூறலாம். உதாரணமாக இந்தியாவில் போப்பால் இரசாயனத் தொழிற்சாலையில் ஏற்பட்ட அழிவு, அணுசக்தி சார்ந்த அனர்த்தம் உதாரணம் உக்கிரேனில் சேனவல்லில் ஏற்பட்ட அழிவுகளால் உயிரிழப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகள்

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகள்

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகள்

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகள்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டுள்ளது என்று கூறுவதும் மிகவும் கவலைக்குரிய ஒரு விடயம் ஆகும். எரிமலை ஏற்படக் காரணங்கள் ஆவன: வெப்பம், அமுக்கம், பாறைகளின் பிளவு, மூட்டு என்பனவாகும். 75% வீதமாக இருந்த காடுகள் எல்லாம் 25% செயற்கைக் காடாக்கப்பட்டுள்ளது. இக் காலகட்டத்தில் காடழிப்பு முக்கிய இடம் வகிக்கின்றது. இதனால் உயிரினங்களுக்கு புகழிடம் இல்லாமல் போகும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. வனவாழ் மிருகங்கள், பறவைகள் இறந்து போகும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளன.

காடுகளில் 81% உயிரினங்கள் காணப்படுகின்றன. தற்போதைய கால கட்டத்தில் வன விலங்குகள் அருகிச் செல்வது யாம் அறிந்த உண்மையே. சாதாரண நிலங்கள் எல்லாம் பாலை நிலங்களாகவும், தரிசு நிலங்களாகவும் மாற்றம் அடைகின்றது. இது மட்டும் அல்ல ஆறுகள், குளங்கள் வற்றிப் போகின்றன. பணவசதி படைத்தோரால் கூட தம் செயற்பாடுகளை சரியான நிலைமையில் முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை காணப்படுகிறது. நதுன், டம்பா, கொரா, நாகமரம், காட்டாமணக்கு, மூசுறை, அகிலான், கருடன் போன்ற வன்மையான மரங்களும் அழிக்கப்படுகின்றன. பண்டைக் காலத்தில் காடுகளின் வீதம் 80% வீதமாக காணப்பட்டது. தற்பொழுது காடானது 25% வீதமாக குறைவடைந்து காணப்படுகின்றது. இது ஒரு சிந்திக்கத்தக்க விடயம் ஆகும். இதற்கு முக்கிய காரணம் மனிதன் ஆவான். ஏனெனில் காடுகளை அழித்து கட்டிடங்களைக் கட்டுகின்றான். அதுமட்டும் அன்றி தரிசு நிலங்களாகவும் மாற்றி காட்டுவளத்தை குன்றச் செய்கின்றான்.

இயற்கை அழிவுகளுள் பாரிய விளைவை ஏற்படுத்துவது ஓசோன் படைத் துவாரம் ஆகும். ஓசோன் படையானது வளிமண்டத்திலுள்ள படை மண்டலத்தில் காணப்படுகின்றது. ஓசோன் மண்டலமானது உலகில் வாழும் உயிர்களுக்கு இரு பெரும் நன்மைகளைப் புரிகின்றது. ஒன்று பூமியில் வாழும் உயிரினங்களின் தட்ப வெப்ப நிலைகளுக்கேற்ப சூரியனில் இருந்து பூமியை நோக்கி வரும் புற ஊதாக் கதிர்களை வடிகட்டிக் கொடுக்கின்றது. இரண்டாவது சூரியனில் இருந்து பூமியை நோக்கி வரும் தொலைதூர சிவப்புக் கதிர்களை ஈர்த்துப் பூமியின் வெப்பநிலையை ஒழுங்குபடுத்துகின்றன. பூமிக்கு பாதுகாப்பாக இருக்கும் ஓசோன் படைக்கு தற்போது அழிவு ஏற்படத் தொடங்கி உள்ளது. ஆய்வுகளின் படி இத்துவாரம் ஏற்படுவதற்கு முக்கிய காரணி குளோரோ புளோரோ காபன் எனப்படும் இரசாயனப் பொருளே என்பது கண்டறியப்பட்டுள்ளது. உலகெங்கும் விரிவடைந்துள்ள தொழிற்சாலைகளின் விளைவே இதுவாகும். அந்தாட்டிக்காவில் மட்டுமன்றி தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற இடங்களிலும் ஓசோன் துவாரம் அவதானிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை 10% அழிந்து விட்டது. இந்த நிலை இன்னும் தொடர்ந்தால் பூமியின் வெப்பநிலை மேலும் அதிகரித்து பூமியிலுள்ள உயிரினங்கள் அழிய நேரிடும். பூமியின் வெப்பநிலை அதிகரிப்பதால் சோலை நிலங்கள் பாலை நிலங்களாக மாற்றமடைகிறது. ஓசோன் படை அழிவதால் பூமி வாழ் உயிர்களாகிய மனிதர்களுக்கு தோல் புற்றுநோய், கண் வியாதிகள் போன்ற விளைவுகள் ஏற்படும். எனவே தான் இது போன்ற இயற்கை அழிவுகளை முற்றுமுழுதாக தீர்க்க முடியாவிட்டாலும், இயன்றளவு குறைத்து எமது சந்ததியினரைப் பாதுகாப்போம். இயற்கை அன்னை எமக்களித்த இயற்கை வளங்களை பாதுகாத்துப் பயன் பெறுவோம்.

**ஆக்குபவனும் மனிதனே, அழிப்பவனும் அவனே!**

செல்வி. சௌ. விதுர்ஷிகா
தரம் - 12

---

# வாழக் கற்போம்!

பள்ளிக் கூடம் சென்றிடுவோம்
பாடங்களை நாம் படித்திடுவோம்
புள்ளி மான்களாய் திரிந்திடுவோம்
துள்ளி விளையாடி மகிழ்ந்திடுவோம்!

மல்லிகைப் பூக்களாய் மணந்திடுவோம்
மனதிற்கினிய கதை பேசிடுவோம்- குரு
சொல்லிய வார்த்தை மதித்திடுவோம்
எண்ணிய வாழ்வைப் பெற்றிடுவோம்!

உண்மை பேசியே உயர்ந்திடுவோம்
உத்தமனாய் நாம் வாழ்ந்திடுவோம்
நன்மை தீமை இரண்டையுமே
நயமாய் ஏற்கப் பழகிடுவோம்!

கல்வி தனையே கண்ணெனவே
கருதியே நாமும் வாழ்ந்திடுவோம்
கண்ணியமாகவே பேசிடுவோம்
காலத்தைப் பொன்போல் போற்றிடுவோம்!

மூத்தோர் வார்த்தை அமிழ்தெனவே
மதித்தே வாழப் பழகிடுவோம்
முன்னோர் காட்டிய வழிகளிலே
முயன்று வாழக் கற்றிடுவோம்!

செல்வி. சு.சாய்மிருதிகா
தரம் - 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவர் இருந்தால் தான்.........

திருமதி. செந்திளங்குமாரி மணிவண்ணன்
ஆசிரியை
(BA, H.Econ (Trd), Dip.in Coun

மனமுண்டானால் இடமுண்டு என்பது பழமொழி. மனித வாழ்வில் உடல், உள, சமூக, ஆன்மீக நிலைகளுக்கிடையில் சமநிலையான முழுமையான நன்னிலை காணப்படவேண்டும். ஒருபிள்ளை தன்னைப் பற்றிய ஒரு திருப்தியும், ஆறுதலும் அடையவேண்டும். அன்பு காட்டலும், அன்பு காட்டப்படுகின்றோம்" என்ற உயர்வும் மிக முக்கியமானதாகும். இவையெல்லாம் ஒரு மனிதனின் குடும்பத்தின் அல்லது சமூகத்தின் நிலைமைகளைப் பொறுத்து அமைகின்றன.

எமது சிறார்களும் இத்தகைய தேவை கொண்டவர்களே. இவர்கள் தம்முடைய சமூக வாழ்வில் குறித்ததொரு சமுதாயத்திற்குரியவராகவும், ஒரு ஊரில் வாழ்பவராகவும் இருப்பதுடன், தனித்து வாழ்வதைவிட சமுதாயத்தில் காணப்படும் கட்டுப்பாடு, மதிப்பு, கௌரவம், பண்பாடு, விழுமியம், சமத்துவம், சுதந்திரம் போன்ற பல்வேறு அம்சங்கள் சாதகமாக அமைகின்ற போது உளநலம் மேம்பட்டவர்களாக விளங்குவர்.

பாடசாலையில் கற்கும் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் சிறப்பாக அமைவதற்கும், கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆசிரியர் குழாத்திற்கும், தம் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொண்ட பெற்றார்க்கும் இவ் உளநலம் மேம்பட்டதாகக் காணப்படவேண்டியது மிக முக்கியமானதாகும்.

மாணவர்கள் சந்தோஷமான நிலை, பதட்டம், ஒடுக்கமற்ற அமைதியான நிலை, சமநிலையான மனவெழுச்சி, சிறந்த முறையில் உறவுகளைப் பேணல், ஒத்துப் போகும் தன்மை, முரண்பாடற்ற தன்மை, ஒழுங்கு முறைகளை கடைப்பிடித்தல், சிறந்த கிரகித்தல் திறன், சுயாதீனமாக செயற்படல், நேர்கணிய நிலை, சுறுசுறுப்பான நிலை, கடமையை சிறந்த முறையில் நிறைவேற்றல், சிறந்த ஞாபக சக்தி, தன்னில் அக்கறையுள்ளவராக இருத்தல், விளையாட்டு உடற்பயிற்சியில் ஈடுபடல், புதியவற்றைத் தேடிக்கற்கும் ஆற்றல் காணப்படுதல் ஆகிய நற்பண்புகளை கொண்டிருப்பது அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைப் பருவத்தில் ஏற்படுகின்ற நடத்தைகளுக்குப் பொறுப்பாக அது வாழுகின்ற குடும்பமே விளங்குகிறது. அது தவறான வழியில் செல்கின்றது என்றால் அதற்குரிய பொறுப்பை அக்குடும்பத்தினரே ஏற்க வேண்டும்.

பிள்ளைகளுக்குப் போதிப்பவர்களும், ஆலோசனைகள் வழங்குபவர்களும் முதலில் தாம் நல்லபடி வாழ்ந்து காட்டுதல் வேண்டும்.

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்" என்று வள்ளுவர் மொழிந்துள்ளார்.

பிறருக்குப் புத்தி புகட்டுதல், ஆலோசனை கூறல், போதனை செய்தல் என்பன மிக எளிதான காரியம், ஆனால் சொல்லியபடி நடந்து காட்டுதல் என்பது தான் மிக மிகக் கடினமான காரியம். குடும்பங்களிலும் பெரியவர்கள், வளர்ந்தவர்கள், தாய் தந்தையர் சதா போதித்துக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். ஆயினும் அப்பிள்ளைகள் சொல்வழி கேளாதவர்களாகவும், மூர்க்கம் நிறைந்தவர்களாகவும், குற்றங்கள் புரிபவர்களாகவும் காணப்படுகின்றனர். போதனைகள் எடுபடாமைக்குக் காரணம் போதனையாளர்கள் சாதனையாளர்களாகவும் இல்லாமையேயாகும்.

குடும்பத்தில் தாய்க்கும் தந்தைக்கும் இடையே நிலவுகின்ற பரஸ்பர உறவு, அன்பு வயப்பட்டு, அறிவு மயப்பட்டதாக விளங்கினால், அப்பிள்ளைகளின் வளர்ச்சியும் விருத்தியும் நடத்தைப் போக்குகளும் உயர்வான நிலையில் திகழும். மாறாக அன்பு, பந்த பாசம், பிணைப்பு, பாதுகாப்பு, நல்லெண்ணம் இல்லாத வரண்ட ஒரு சூழலில் வளர்ந்து வருகின்ற பிள்ளைகளின் வளர்ச்சி தடுக்க முடியாததாகி விடும்.

ஒவ்வொருவரது வாழ்க்கையும் குறிக்கோளை உடையதாகக் காணப்பட வேண்டும். குறிக்கோள் இல்லாத வாழ்க்கை மீகாமன் இல்லாத கப்பல் ஆழ்கடலில் தத்தளிப்பது போல, எவற்றை அடைய வேண்டும் என்ற திடமான நிலைப்பாடு இல்லாததாகவே இருக்கும். எனவே வருமுன் காக்க என்ற ஆன்றோர் வாக்குப்படி, நல்ல வாழ்க்கைக் குறிக்கோள்களை வகுத்து, தூய மனத்தினராய், தூய பேச்சினராய், தூய செயலினராய், நேர் வழியில் செல்பவராய் மானுடம் நிறைந்தவராய் அக் குறிக்கோளை அடைய முயன்றால் வெற்றி நிச்சயம். வாழ்விலும் இன்பம் மலர்தல் உறுதி.

பண்டைய தமிழ் மக்கள், ஒவ்வொருவரும் சான்றோனாக வாழ்க்கையில் திகழ வேண்டும் என்ற விழுமிய வாழ்க்கைக் குறிக்கோளைக் கொண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே"

என்ற புறநானூற்றடியும்,

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்"

எனக் திருக்குறட்பாவும் அதனை உறுதிப்படுத்துகின்றன.

நல்ல கல்வியைக் கற்பதனால் எய்தப்படுகின்ற பயன் நடுவுநிலைமை எனும் நற்பண்பினைப் பெறுதலும், அவ்வாறு ஒழுகுதலும் ஆகும்.

"............... நெஞ்சத்து
நல்லம் யாம் என்னும் நடுவுநிலைமையால்
கல்வி யழகே அழகு"

என்கிறது நாலடியார். எல்லா வகை அழகுகளுக்குள்ளும் கல்வியழகே ஒருவர்க்கு மிகுந்த அழகையும் சிறப்பையும் தருவது எதனால் என்று ஆராயின் நெஞ்சத்தில், வாக்கில், செய்கையில் ஒருவரை நடுவுநிலைமையில் நிற்கக் கல்வி துணை செய்வதால் ஆகும்.

இளம் பிள்ளைகள் வளர வேண்டியவர்கள், வாழ வேண்டியவர்கள், ஆரோக்கியமாகவும் ஆளுமையுடனும் நீண்ட காலம் வாழ இருப்பவர்கள். நமது மனித சமுதாயத்தை நன்முறையில் தொடர வைப்பவர்கள். ஆகையால் குடும்பமும், பாடசாலையும், சமூகமும் அப்பிள்ளைகளுக்கு நல்லொழுக்கப் பயிற்சியளித்து, அவர்களை நல்லவர்களாகவும், ஒழுக்க நெறிகளில் வல்லவர்களாகவும் வளர்த்து விட வேண்டும். அவர்களுக்கு மூத்தவர்கள் வழங்கக் கூடிய பெருஞ்சொத்து நல்லொழுக்கப் பண்பாடு ஆகும். அதற்குரிய சிறந்த சமூகச்சூழலைக் கட்டியெழுப்ப நாம் அனைவரும் முயல்வோமாக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்மதியாய் என் பாடசாலை!

கலங்கி நிற்கின்றோம்,
பாடசாலை வாழ்க்கையின் விளிம்பில்
திரும்பிப் பார்க்கின்றேன்
இனிய பயணத்தின் முதல் தடத்தை!

பதினொரு ஆண்டுகளுக்கு முன்
தடம் பதித்தேன் - என் பள்ளியில்
என் தாயின் கருவறையை
மீண்டும் அடைந்த களிப்புடனே!

அன்றும் இன்றும்
அடடா! எத்தனை மாற்றங்கள் தான்
அவை அத்தனையும் என்
பள்ளியின் முன்னேற்றங்களே!

சிறிதாய் இருந்த வகுப்பறைகள்
பெரிதாய் ஆனதென்ன மாயமோ
கட்டிடங்கள் எல்லாம் - இராஜ
கோபுரங்கள் போல் ஆனதோ!

சிட்டுக் குருவிகளாய் எம் மாணவர்கள்
கல்வி எனும் தாகத்துடன் வர
தாகத்தை தீர்த்து நல்வழிகாட்டி
வழிப்படுத்தியவர்கள் நம் ஆசான்களே!

புத்தம் புதிய பூக்களுடன்
பூந்தோட்டமும் பூத்துக்குலுங்க
பிரதான மண்டபமும்
மலர் தூவி வரவேற்கின்றதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பள்ளியில் பயிலவரும்
மாணவர் எண்ணிக்கை உயர்ந்திட
அறிவைப் புகட்டும் ஆசான்களின்
அர்ப்பணிப்புச் சேவை பன்மடங்கானதோ!

கலைமகளின் சிலையும்தாய்
கண்டிப்பின் வடிவும் தாய் தலைமையே ஆளுமையாய்
அன்பையே சாயலுமாய் - வித்தியாலய
நிலை உயர சதா உழைப்பவர் எம் அதிபர்!

அடடா எத்தனை மாற்றந்தான் என்பள்ளியிடம்
அவை அத்தனையும் சொல்ல வார்த்தையில்லை என்னிடம்
போற்றுகின்றேன் என்பள்ளித் தாயின் மாற்றங்களை
வேண்டுகிறேன் என்றும் ஏற்றங்களை!

செல்வி. சௌ. விதுர்ஷிகா
தரம் - 12

## கல்வி

தப்பாமல் கல்வியை ஓது - கல்வி
தரும் புகழ்க் கீழந்த உலகினில் ஏது?
மப்பில்லா வானம் போல் ஆகும் - கல்வி
வளமில்லா வாழ்க்கை பயனற்றுப் போகும்!

அன்போடு ஆசிரியரைப் போற்று - பள்ளி
அறிவுரை வாழ்க்கையில் இருளுக்கு மாற்று!
என்றென்றும் கற்றிடலாகும் - அறிவு
இல்லாமை என்கின்ற செயலற்றுப் போகும்!

கற்றுத் தெளிவதே மேன்மை - கல்வி
கல்லாத மக்களால் வருவதே தீமை
பெற்றவர் காதுக்குத் தேனாம் - பிள்ளை
பேச்சாளி அறிவாளி என்பது தானாம்!


செல்வி. வே. வபிஷா
தரம் - 10B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகமா? சுமையா?
# அதிபர்கள் தாங்குவார்களா?

திரு. செ. சிறிதரன்
ஆசிரியர்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெல்லக் கற்கும் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

திருமதி. ச. முருகுப்பிள்ளை
பயிற்றப்பட்ட மனையியல் ஆசிரியை

பல்வேறு விதமான குடும்ப, சமூக, சமய பின்னணியில் வாழும் பிள்ளைகள் வெவ்வேறு வகையான பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக உள்ளனர். இவர்களில் பெரும்பாலான பிள்ளைகள் இத்தகைய சவால்களிலிருந்து எதிர்நீச்சல் போட்டு தப்பிப்பிழைத்து வாழக்கூடியவர்களாக இருந்த போதிலும் இவ்வாறான இயலுமை குறைந்த மாணவர்கள் உடல் ரீதியாகவும் பாதிப்புக்களை எதிர் கொள்வர்.

சாதாரணமான ஒரு வகுப்பறையில் நாற்பது பிள்ளைகள் உள்ளனர் என எடுத்துக் கொண்டால் எமது நாட்டிலுள்ள கல்வி ஒழுங்கு முறைமையினடிப்படையில் ஓர் ஆசிரியரினால் ஏக காலத்தில் அத்தனை பிள்ளைகளினதும் அடிப்படைகளை இனம்கண்டு அவர்களின் குணம்குறிகளுக்கு ஏற்ற வகையில் கற்பிக்கும் வழிமுறைகளை நடைமுறைப்படுத்தி மெல்லக் கற்போரின் பிரச்சனைகளை எதிர்கொண்டு தீர்வுகாண்பது அசாத்தியமான விடயம் ஆகும்.

அவ்வாறான மெல்லக் கற்போருக்குரிய நிலையில் இருந்து சாதாரண பிள்ளைகளின் கல்வி மட்டத்திற்கு உயர்த்துவதற்குரிய செயற்பாடுகளினை ஒவ்வொரு ஆசிரியர்களும் தெரிந்திருக்க வேண்டியது அவசியமாகும். அவ்வாறான பிள்ளைகளை ஆரம்பக்கல்வி நிலையிலிருந்தே இனம்கண்டு உரிய மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளாத பட்சத்தில் தொடர்ந்தும் அப்பிள்ளைகள் இடைநிலைக் கல்வியை விளங்கிக் கொள்ள முடியாதவர்களாக இடையில் விலகும் நிலைக்கு உள்ளாவார்கள். இவ்வாறானவர்களின் பிரச்சினைக்கான காரணங்களை ஆராய்வதை இனி நோக்குவோம்.

ஒரு பிள்ளையை பாதிக்கும் காரணிகளை இரு வகையாக பிரிக்கலாம். அவை

1. அகக்காரணிகள்
2. புறக்காரணிகள் என்பனவாகும்.

ஒரு பிள்ளையின் பாதிப்புக்கான அகக்காரணிகளாக பின்வருவனவற்றை வகைப்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. உடல் குறைபாடு

இது பிறப்பினாலோ, நோய் மூலமாகவோ, விபத்துக்களினாலோ ஏற்படலாம்.

02. மந்த புத்தி

தாயின் கருப்பையில் குழந்தை உருவாகும் போது தாயின் போதிய போஷாக்கான உணவு உட்கொள்ளாமை, பிறந்த பின் பிள்ளைக்குரிய போஷாக்கான உணவு வழங்கப்படாமை, பெற்றோர்களின் நிறமூர்த்தங்களினூடாக கடத்தப்படும் பண்புகள் இந் நிலைக்குக் காரணமாகலாம்.

03. நோய்கள்

பரம்பரை நோய்கள், ஆரம்பத்திலிருந்தே உரிய சிகிச்சை செய்யப்படாததால் தொடர்ச்சியாக பிள்ளை நோய்வாய்ப்படும் தன்மை, போஷாக்கான உணவு உண்ணாமையினால் நோய் எதிர்ப்பு சக்தி குறைவடையும் போது அடிக்கடி நோய்வாய்ப்படலாம்.

04. சுயமாக இயங்க முடியாமை

குழந்தைப் பருவத்திலேயே பிள்ளைக்கு ஏற்படும் உளப்பாதிப்புகள் தொடரும் போதும், தன்னம்பிக்கையை கட்டியெழுப்பப்படாமை போன்ற காரணங்களினால் இந்நிலை ஏற்படும்.

05. நம்பிக்கை குலைந்த நிலை

குழந்தைப் பருவத்திலேயே பயந்த சுபாவம், எந்த விடயத்தையும் அலட்சியமாக நோக்குதல், இந்நிலைக்கு அடிப்படை காரணமாகி எந்த நிலையிலும் பிறரை நம்பியிருத்தல்.

06. திக்குவாய்

07. தாழ்வுச்சிக்கல் போன்றன அகக்காரணிகளாகும்.

பிள்ளை சாதாரண வகுப்பில் ஏனைய மாணவர்களுடன் சேர்ந்து கற்றலை மேற்கொள்ள முடியாதவனாக இருப்பான்.

புறக்காரணிகளைப் பொறுத்தவரை அவற்றை மூன்று வகையாக நோக்கலாம்.

1. குடும்பம் 2. சமூகம் 3. பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வகுப்பில் உள்ள பிள்ளைகளில் பலர் இவ்வாறான காரணிகளால் பாதிக்கப்பட்டவர்களாக இருப்பர். ஆனால் கூர்மையாக அவதானித்தல் தொடர்ச்சியான மதிப்பீடுகளை மேற் கொள்ளல், பொருத்தமான முறைகளில் பிள்ளைகளை அணுகுதல், ஆசிரியர் தன்மீது கரிசனை கொள்கிறார் என்ற உணர்வை பிள்ளை ஏற்றுக் கொள்ளல் போன்ற பல்வேறு நடைமுறைகளினூடாக பிள்ளையை புறக்காரணிகளால் பாதிக்கப்படுவதிலிருந்து குறைத்துக் கொள்ளலாம்.

### குடும்பக்காரணிகள்

01. குடும்ப அங்கத்தவர் பிரிவு :- யுத்தக்காரணம், வெளிநாடு செல்லல், இடப்பெயர்வு.
02. வறுமை:- பெற்றோருக்கான தொழிலின் போதிய வருமானமின்மை, குடும்ப உறுப்பினர் தொகை அதிகமாயிருத்தல்.
03. வீட்டு வன்முறை :- தந்தையின் குடிப்பழக்கம், பெற்றோரின் தொடர்ச்சியான சண்டை
04. வதிவிடப்பிரச்சினை :- வீடின்மை, வீட்டில் போதிய வசதியின்மை
05. போஷாக்கின்மை
06. நம்பிக்கையின்மை
07. பெற்றோர் கவனிப்பின்மை
08. பெற்றோர் கல்வி அறிவின்மை
09. பெற்றோரின் அடக்குமுறை
10. அன்பு, ஆதரவு, பாதுகாப்பின்மை

### சமூகக்காரணிகள்

01. யுத்த சூழல், தொழில் மாற்றங்களினால் இடப்பெயர்வு
02. சாதிப் பிரச்சினை
03. கலவரங்கள் அதிகமான சூழல்
04. இயற்கை அனர்த்தம் அடிக்கடி நிகழல்
05. கலாசார சீரழிவான சூழல்

இவ்வாறான காரணிகளை ஓர் ஆசிரியரினால் இலகுவாக மாற்ற முடியாது. ஆனாலும் இவ்வாறான பல்வேறு காரணங்களின் தாக்கங்களையும் தாண்டி கல்வி கற்கும் நோக்கத்துடன் பாடசாலைக்கு சமுகமளிக்கும் பிள்ளைகளின் பிரச்சினைக்கான பாடசாலை தொடர்பான காரணிகளை மட்டுமாவது ஆசிரியர்கள் கவனித்து தீர்வு காண்பதன் மூலம் மெல்லக்கற்போரின் எண்ணிக்கையைக் குறைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக் காரணிகள்

01. சக மாணவர்களால் ஒதுக்கப்படல்
02. ஆசிரியர்களின் கடுமையான தண்டனை.
03. ஆசிரியர்களின் கவர்ச்சிகரமற்ற கற்பித்தல் முறை
04. பாதகமான கல்விச் சூழல்
05. அன்பு, ஆதரவு, பாதுகாப்பின்மை
06. நெருக்கீடுகள்

வகுப்பறை மட்டத்தில் ஆசிரியர்கள் இவ்வாறான மெல்லக்கற்கும் பிள்ளைகளின் பின்னணியை இனங்கண்டு அவர்களை ஏனைய மாணவர்களோடு ஒப்பீட்டு ரீதியில் நோக்குவதை தவிர்த்து தனித்தனியாக பின்வரும் அணுகல் யுக்திகளை கையாளுவதன் மூலம் சிறந்த ஆசிரியராக மிளிர முடியும்.

01. பிள்ளைக்கு பொருத்தமான சூழலை உள்ளக, வெளியக நிலையில் அமைத்துக் கொடுத்தல்.
02. பிள்ளையின் கருத்துக்களை அவதானத்துடன் செவிமடுத்தல்.
03. அவராலும் முடியும் என்ற நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல்.
04. ஒத்துணர்வுடன் செயற்படுதல்.
05. தனது அனுபவங்களையும் கருத்துக்களையும் பகிரச் சந்தர்ப்பங்களை அளித்தல்.
06. பெற்றோர், பாதுகாவலர்களைச் சந்தித்தல்.
07. இம் மாணவர்கள் தொடர்பான தகவல்களை திரட்டிப் பேணுதலும், முன்னேற்ற அறிக்கைகளை பேணுதலும்.
08. தலைமை தாங்கும் சந்தர்ப்பங்களைப் பிள்ளைக்கு வழங்குதல்.
09. விளையாட்டில் ஈடுபடப் பிள்ளைக்கு ஆர்வத்தை தூண்டச் செய்தல்.
10. குழு முயற்சிகளில் ஈடுபடக்கூடிய கற்பித்தல் யுக்திகளை கையாளல்.

இவ்வாறாக வகுப்பறையில் நமக்குத் தெரியாமல் கற்பித்ததை கற்றதாக நடித்துக் கொண்டிருக்கும் பிள்ளைகளை இனங்கண்டு அப்பிள்ளைகளின் இயலுமைக்கேற்ப ஏற்பட்ட இடர்ப்பாடுகளைக் களைவதற்கு எல்லா ஆசிரியர்களும் ஒரு சிறு முயற்சியை எடுத்தாலே நமது சமுதாயத்தின் எதிர்கால சமூகம் ஒரு கற்றறிந்த சமூகமாவதற்கு எமது எத்தனத்தை நல்குவது ஒரு நல்லாசிரியரின் கடமையாகும். அவ்வாறில்லாமல் கெட்டிக்காரப் பிள்ளைகளுக்குக் கற்பித்தலே ஆசிரியரின் கடமை எனக் கருதினால் அது சுகதேகிகளுக்கு வைத்தியம் செய்யும் வைத்தியனுக்கு ஒப்பாவர். வைத்தியசாலைகள் நோயாளிகளுக்காக உருவாக்கப்பட்டதேயன்றி சுகதேகிகளுக்கல்ல என்பது சரியானால் பாடசாலைகளும் மெல்லக்கற்போரை வழிப்படுத்துவதற்கே உருவாக்கப்பட்டது என்பது சரியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புப் பரிசு

டிறிக்.... டிறிக்.... டிறிக்....
என்ன இது சத்தம் என்று எல்லோரும் திரும்பிப் பார்க்கிறார்கள். ஆம் எனது பழைய சைக்கிளை மிதித்தபடி நான் பாடசாலைக்குச் சென்று கொண்டிருக்கின்றேன். எனது வண்டிக்கு பெல்லும் இல்லை, பிறேக்கும் இல்லை. ஆனால் ஏதோ லொறி வருகிறது என நினைத்து எல்லோரும் ஓரமாக நின்று வழிவிடும் அளவுக்கு அதன் சத்தம் அபரிமிதமானது. அன்றாடம் கூலிக்கு வேலை பார்க்கும் அப்பாவின் முதலாளி தனது பேரனின் பழைய சைக்கிள் என எனக்காகக் கொடுத்தார். தினமும் நடந்தே பாடசாலை சென்றிருந்த எனக்கு இது பழையதாகத் தெரியவில்லை. நல்ல ஒரு நண்பனாகவே பேணமுடிகிறது.

பாடசாலை முடித்து வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். என்னை விலத்திய படி மிக வேகமாக ஒரு கார் சென்றது. தற்செயலாகத் திரும்பிப் பார்த்த போது காரின் பின் சீற்றில் ஒரு குழந்தையின் கைகளை இறுகப்பிடித்தபடி இரண்டு முரடர்கள் உட்கார்ந்திருக்கக் கண்டேன். சிறிது நேரம் எனக்கு எதுவுமே புரியவில்லை. அந்தக் குழந்தையை யாரோ கடத்திச் செல்வதாக சந்தேகப்பட்டு அந்தக் காரைப் பின்தொடர்ந்து விரைவாகச் சென்றேன். எனது அவசரம் புரிந்து எனது நண்பனும் முக்கி முனகி ஓரளவு வேகமாக ஓடினான். சற்றுத் தூரத்தில் அந்தக் கார் நின்றது. நான் அருகே சென்று கண்ணாடி வழியாகப் பயந்து பயந்து எட்டிப் பார்த்தேன். கண்ணாடி சற்றும் திறந்திருந்தது. ஆனால் எவரையும் காணவில்லை. நான் காரின் இலக்கத்தை மனதினுள் குறித்துக் கொண்டேன். அருகில் இருந்த சிறு துரும்பு ஒன்றை எடுத்து கார்த் திறப்புக்குரிய துவாரத்தினுள் புகுத்தி அடைத்தேன். பின் அவசர அவசரமாக வீடு சென்று அம்மாவிடம் விபரத்தைக் கூறினேன். அம்மா நான் கூறிய காரின் இலக்கத்தையும் விபரங்களையும் தொலைபேசி மூலம் பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்தார்.

மாலையில் பொலிஸ் அதிகாரிகளும் அந்தக் குழந்தையின் தந்தையாரும் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். என்னைப் பாராட்டினார்கள். எனக்கும் அம்மாவிற்கும் மிகுந்த மகிழ்ச்சியாக இருந்தது.

டிறிங்.... டிறிங்..... டிறிங்..... என்ன பார்க்கிறீர்கள்? எனது புதிய சைக்கிளில் நான் பாடசாலைக்குச் சென்று கொண்டிருக்கின்றேன். என்னால் காப்பாற்றப்பட்ட குழந்தையின் தந்தையார் எனது வீர சாகசச் செயலுக்கு அளித்த அன்புப் பரிசு இது!

ர. கிஷோர்
தரம் - 8B





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்டனை

திருமதி. மே.பி. ஹஸன் (ஆசிரியர்)
BA, Dip in Ed, Dip in Counselling

"அடியாத மாடு படியாது"
அடி உதவுவது போன்று அண்ணன்
தம்பி கூட உதவ மாட்டார்கள்"

இவை பழைய காலத்து பிள்ளைவளர்ப்புக்கு பயன்படுத்தப்பட்ட கூற்றுக்கள். பாடசாலைகளிலும் வீடுகளிலும் பிள்ளைகளுக்குத் தண்டனை வழங்குவதை நியாயப்படுத்த மேற்படி பழமொழிகளை மேற்கோள் காட்டுவது வழமை.

"சிறு பிள்ளைகள் அறிந்து தவறு செய்வது உண்டா? இல்லை. தவறு அல்லது ஆபத்தானது என்ற விளக்கமின்றி தவறுகளைச் செய்கின்றனர். சில பெற்றோரும், ஆசிரியர்களும் ஆபத்தான அல்லது தவறான காரியங்களையும் அவற்றின் பின் விளைவுகளையும் பிள்ளைகளுக்குப் பக்குவமாக எடுத்துக்கூறுகின்றனர். பலர் அத்தகைய தவறுகளை மாணவர்கள் செய்தபின் தான், "பார்த்தாயா நீ செய்த வேலையால் என்ன தீங்கு நேர்ந்துள்ளது?" என்று தவறைச்சுட்டிக்காட்டி, மீண்டும் அத்தவறு நிகழா வண்ணம் திருத்த, உணர்த்த முற்படுவர். இன்னும் சிலர் தவறு எவ்வாறு நேரும் என்ற விளக்கமும் கொடுக்க மாட்டார்கள், தவறொன்று நிகழ்ந்து விட்டால் அது தெரிந்து நடந்ததா? அல்லது தெரியாமல் நடந்ததா? என்று ஆராயவும் மாட்டார்கள். அறிவுரை வழங்கவும் மாட்டார்கள். மாறாக அடி, காதுதிருகல், குட்டு போன்ற உடல் ரீதியான தண்டனைகளும், சிறிய உள்ளங்களை புண்படுத்தக் கூடிய வசைச் சொற்களும் சரமாரியாகப் பொழிவார்கள். இங்கே தொடர்ச்சியாக இன்னுமொரு விடயத்தைப் பிள்ளை கற்றுக்கொள்கின்றது. கோபம் வரும் போது இப்படித்தான் பேசவேண்டும் என்று. இங்கே பெரியவர்களே சிறியவர்களுக்குத் தவறான வழிகளை கற்றுக் கொடுக்கின்றனர் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா?

பாடசாலைகளில் இருந்து இடைவிலகிய மாணவர்களின் ஆய்வுகளில் இருந்து தொகுக்கப்பட்ட விடயங்களை நோக்குவோமெனில், ஆசிரியர்கள் அலட்சியமாக நடந்து கொள்ளும் சில சந்தர்ப்பங்கள், தண்டனைகள், புறக்கணிப்புக்கள் பெருமளவு இடை விலகலின் காரணமாக அமைந்துள்ளன.

ஆயினும் சிறிய அளவு இடைவிலகல்கள் பெற்றோர்களின் அசட்டை காரணமாகவும் வறுமை காரணமாகவும் நிகழ்கின்றது. பாடசாலைகளில் சமாதானமான சூழ்நிலைகளை உருவாக்குவதில் சரீரத் தண்டனை வழங்காது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களைத் திருத்த முடியாது என்ற கருத்தை முன்வைக்கின்றனர். "நாபே" என்ற உளவியலாளர் பின்வருமாறு கூறுகின்றார்.

"தண்டனையால் ஒருவனது மனப்பாங்கோ
பெறுமானமோ மாறுவதில்லை. மாறாக தனது
நிலைப்பாடு பற்றிய ஒரு வித உணர்வே
அவனிடம் தோன்றுகிறது. மேலும் அதன்
முக்கியத்துவம், இலக்கு, ஸ்திரத்தன்மை
பற்றிய உணர்வு விருத்தியடைகிறது. இதனால்
வெளியில் நடத்தை மாறியது போன்று
தோன்றினாலும் ஆழமான மனப்பாங்குகளும்
பெறுமானங்களும் விருத்தியடைகின்றன.
இதனால் தண்டனை வழங்கும் ஆசிரியர்,
அவர் கற்பிக்கும் பாடம், பாடசாலை
என்பன விரும்பத்தகாத விடயங்கள்
என்ற நோக்கு மாணவர்களிடையே ஏற்படுகிறது"
சரீரத் தண்டனை பெறும் மாணவனுக்கு அதன் மூலம்
நிபந்தனை அவமானம், சமூக விரக்தி, உளச்சோர்வு
பதகளிப்பு, கோபம் என்பன ஏற்படுகின்றன. அந்த
வேதனையான அனுபவம் அவனை உளவியல் ரீதியான
பாதிப்புக்குள்ளாகுதல் அதன் மூலம் நன்மை ஏற்படும்
என்று எதிர்பார்ப்பதற்கில்லை. தண்டனை மூலம் பிள்ளைகளின்
சுயகட்டுப்பாட்டு முயற்சி பாதிக்கப்படுகிறது என்றும் உளவியலாளர்கள்
கூறுகின்றனர். சரீர தண்டனை வழங்கும் ஆசிரியர்கள் பற்றியும் ஓர்
விடயம் குறிப்பிட்டாக வேண்டும்.

வகுப்புக் கட்டுப்பாட்டுக்காக மாணவர்களை இழிவுபடுத்தல், சரீரத்தண்டனை வழங்குதல் உளவியல் ரீதியான அசௌகரியங்களுக்கு உட்படுத்தல் போன்றவற்றைத் தான் செய்ய வேண்டுமென்பதில்லை. வகுப்புக்கட்டுப்பாடு ஆசிரியர்களின் தலைமைத்துவப் பண்புகளிலேயே தங்கியுள்ளது. பாடத்திற்கு ஆயத்தமாக, செயலை மையமாக வைத்துக்கருமமாற்ற பாட அறிவும் பின்னணி அறிவும் உடையவராக, பிரச்சினை ஏற்படக் கூடிய இடங்கள் சந்தர்ப்பங்களை குறித்து முன்கூட்டியே அறிந்திருப்பவராக, மாணவர்கள் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு விதமாக நடத்தப்பட வேண்டியது ஏன் என்பதை மாணவர்களுக்கு விளக்கக்கூடியவராக, மலர்ச்சியான, விரும்பத்தக்க நடத்தையுடன் கூடியவராக, நிலையான ஆளுமைப் பண்புகளைக் கொண்டவராக இருப்பாராயின் வகுப்புக்கட்டுப்பாடு என்பது ஒரு பிரச்சினையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு உடல் ரீதியான தண்டனை வழங்காமல் பிள்ளைகளைத் திருத்தலாம்? இதற்கென்றும் பல உபாயங்கள் உண்டு. பொருட்களை உடைத்தால் நட்ட ஈடு பெறல், உடைத்ததைப் பழுதுபார்க்கச் செய்தல், தவறை உணர்த்துதல், அதற்காக மன்னிப்புக் கோரச் செய்தல், மீண்டும் அவ்வாறு செய்வதில்லை என்று அவர்களாகவே உறுதிமொழி கூறல், அத்தகைய உறுதி மொழிகளைப் பகிரங்கமாகப் பெறல், செய்த ஒரு தவறுக்குப் பரிகாரமாக வேறு ஒரு காரியத்தைச் செய்யப் பணித்தல், தடையுத்தரவு பிறப்பித்தல், சலுகைகளைத் தாமதித்தல் அல்லது தற்காலிகமாக நிறுத்தல், பெற்றோருக்கு அல்லது பாதுகாவலருக்கு அறிவித்தல் போன்ற இயற்கை விளைவு முறைகளைப் பயன்படுத்தலாம் ஒன்றுமே இயலாத பட்சத்தில் தண்டனை தான் வழங்கவேண்டும் என்று முடிவெடுப்பீர்களாயின், அன்பான பெற்றோரே! ஆசிரியர்களே! தண்டனை தனக்குக் கிடைப்பது எதற்காக என்றும் அத்தண்டனை சரிதான் என்றும், தண்டனை பெறுபவருக்கு உணர்த்தி ஏற்றுக்கொண்டதன் பின் வழங்குங்கள்.

சில நேரான நிகழ்வுகள் எதிர் மறை நிகழ்வுகளுக்கூடாகவும் தவறுகளைத் திருத்தலாம். வாய்மொழி மூலம் அல்லது சமிக்ஞைகள் மூலமாகவும், மிருதுவான முறையிலும், உடல் சமிக்ஞைகள் (Body Language) போன்ற நேரான நிகழ்வுகள் மூலமாகவும். வெறுப்பைக்காட்டுதல் அடிக்கடி ஞாபகப்படுத்தல், எச்சரிக்கை செய்தல், புறக்கணித்தல் கண்டுகொள்ளாதிருத்தல் போன்ற எதிர்மறை செயற்பாடுகள் மூலமாகவும், மாணவர்களைத் திருத்தலாம். பிரச்சினைக்கான காரணத்தை கண்டறிந்து அதனைக்களைதலே மிகவும் உறுதியான பரிகார முறையாகும்.

மேலும் நோய்களால் அவதியுறும் பிள்ளைகளுக்கும், உளமுதிர்ச்சிகுன்றிய பிள்ளைகளுக்கும், மனமுறிவுக்குள்ளான பிள்ளைகளுக்கும் கூட சில பெற்றோர்கள், ஆசிரியர்கள் தண்டனைகளை அறியாமலே வழங்கி விடுகின்றார்கள். பெற்றோர்களை தொலைதேசத்திலும், அல்லது இருவரும் பிரிந்த நிலையிலும், வேறு திருமணங்கள் தொடர்புகளை உடைய நிலையிலும், குடிவெறியில் குடும்பத்தைக் கவனிக்காத நிலைகளிலும் உள்ள குடும்பங்களில் இருந்து பாடசாலை வரும் மாணவர்களின் அடிப்படைப்பிரச்சினை பெற்றோரின் அன்பும் அரவணைப்பும் இன்மையாகும். அத்தகைய மாணவர்களில் ஒரு வகையான பிறழ்வு நடத்தைகளை இனங்காணலாம். அவை வகுப்பறைக்கோ, கற்றல் சூழலுக்கோ பொருத்தப்பாடு அற்றவையாகவே காணப்படும். இவர்களை ஆசிரியர்கள் சரியாக இனங்காணாத பட்சத்தில் பல வகையான தண்டனைகளுக்கு உள்ளாகின்றார்கள். இதனால் வீடும், பாடசாலையும் வெறுப்புக்குரிய இடமாக மாற மாணவர்கள் விருப்புக்குரிய வேறு தவறான வழிகளில் இலகுவாக மாற்றப்படுகின்றார்கள். இவர்களுக்கு தனிப்பட்ட கவனிப்பு, பாசம் போன்றவை ஓர் ஆசிரியரிடமிருந்து கிடைக்குமாயின் அவர்களை இவர்கள் பற்றிப்பிடித்துக் கொள்வார்கள். இது ஆசிரியருக்குச் சற்று கஸ்டமான சூழலைக் கொடுத்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ப்பணிப்பு என்பதில் அமைதிகாணமுடியும். ஓர் ஆசிரியர் தனது இத்தகைய பொறுப்புக்களை கடமைக்குச் செய்தால் தோல்வியையே எதிர்நோக்குவார். மாறாக தனது கடமையென பொறுப்புடன் உணர்ந்து செய்வாராயின் வெற்றிகளைப் பெறுவதோடு உளத்தளவில் திருப்தியும் அடையக்கூடிய நல்லாசானாக திகழ்வார்.

மீத்திறன் கூடிய கெட்டித்தனமான பிள்ளைகளின் ஆர்வத்தை, ஆற்றலைப் புரிந்து கொள்ளாத பலரும் குறும்புத்தனம் என்று காரணம் காட்டி திறமைகளை முளையிலேயே முறித்தெறிந்து விடுகிறார்கள். இயல்பூக்கம் கூடிய பிள்ளைகளின் அறிவுப் பசிக்குத் தீனி போட முடியாத ஆசிரியர்கள் அதனை மட்டம் தட்டி மழுங்கடித்துவிடும் போக்கில் கடுமையான தண்டனைகளை வழங்குகின்றனர். அரிதாகச் சில ஆசிரியர்கள் மாணவர் மீது அல்லது அவர்கள் பெற்றோர், குடும்பத்தவர் மீது கொண்ட கோபத்தினாலும் தண்டனை வழங்குவது அறியப்பட்டு வந்த உண்மைகளாகும். இன்றைய மாணவச் சமுதாயம் தேடிக்கற்கும் ஆர்வம் கொண்ட சமுதாயமாகும். எனவே அவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர் குழாமாகிய நாமும் அவர்களிலும் மேலாகத் தேடிக்கற்கும் ஆர்வமுடையவர்களாகவும் மேலதிக அறிவைப் பெற்றவர்களாகவும் இருப்போமாயின் இவ்வாறான மீத்திறன் மாணவர்களை அழகாக முன்னெடுத்துச் செல்லும் தகுதியுடையவர்களாகத்திகழலாம்.

ஆகவே பிள்ளைகளுக்குத் தண்டனை வழங்கும் போது ஒருமுறைக்கு இருமுறை சிந்திப்போம். அவர்களுக்கும் பரிசளித்துப் பாராட்டி மகிழ்விக்கலாமா.. என்பதையும் யோசிப்போம் !!!

## தீப்பெட்டி / நெருப்பே!

நெருப்புப் பெட்டிக்குள்ளே அழகாயிருக்கும் நெருப்பே
உன்னைத் தொட்ட போதே அழகாயெரியும் நெருப்பே
உன்னுடனும் கூட விளையாட மாட்டோம்
உன்னைக் கண்ட போதே ஒதுங்கிடுவோம் நாம்!

அடுப்பில் வைத்த நீரை கொதிக்க வைக்கும் நெருப்பே
அம்மா ஊதும் போதே அழகாயெரியும் நெருப்பே
உன்னுடனும் கூட விளையாட மாட்டோம்
உன்னைக் கண்ட போதே ஒதுங்கிடுவோம் நாம்!

செல்வி. த. கீர்த்தனா
தரம் - 8B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பேசு!

கல் தோன்றி மண் தோன்றாக்
காலத்தே முன் தோன்றிய
மூத்த தமிழே! செந்தமிழே!
பொதிகைத் தென்றலில்
வளர்ந்த தமிழ் அணங்கே!
தென் மதுரையிலே
சங்கம் வளர்த்தாய்!
தரணியெல்லாம் போற்றும்
தமிழ்த் தாயெனவே வந்தாய்
காப்பியங்கள் பல கண்டாய்
காதலும் வீரமும் அறமும் கலந்த
நூல்கள் பல தந்தாய்!
இன்பத்தமிழ் வண்ணத் தமிழ்
எனப் பல பெயர் கண்டாய்!
உலகோர் போற்றும்
திருக்குறளைத் தந்தாய்
சிலப்பதிகாரம் முதல் பற்பல
இலக்கியங்கள் யாத்ததனாலோ
செந்தமிழ் நாடெனத்
தென் நாட்டுக்குப் பெயர் கொடுத்தாய்
இவ்வளவு பெருமையும்
உனக்கு ஏனோ? இன்று
தமிழ் பேச இன்னல்படுகிறார் பலர்
செந்தமிழ் வண்டமிழ்
இன்பத்தமிழ் என்று கொண்டபேர்
கொச்சைத் தமிழில்
ஒலி மாறிப் போகிறதோ
என்று தீரும் இந்த அவலம்
பாரதி, கம்பன், இளங்கோ என்று
பற்பல முன்னோர் வளர்த்த
நற்றமிழைத் தமிழினமே
தன்னிறைவோடு தமிழ்பேசு
நற்றமிழ் பேசு வாழ்க செந்தமிழ்!

செல்வன். ல. சிவசாந்
தரம் - 11A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனை மனிதனாக வாழவைக்கும் இந்துமதம்

வேதங்கள் எப்போது தோன்றியதோ அப்போதே இந்துமதம் தோற்றம் பெற்றது. இதிலிருந்து உபநிடதம், சித்தாந்தங்கள், ஆகமங்கள், திருமுறைகள் என விரிவடைந்த மனித வாழ்விற்குத் தேவையான வாழ்க்கைமுறை, ஒழுக்கங்கள், ஆசாரமுறைகள், நாளாந்த வழிபாடு, ஆன்மீகம், வீட்டு கிரியைகள், திருமணக் கிரியைகள், விரதங்கள், பண்டிகைகள், அபரகிரியைகள், சிரார்த்த கிரியைகள், மறுவாழ்வு, நல்லவை தீயவை, அதன் பலன்கள், முத்திபெறும் வழிகள், பஞ்சாங்கம், முன்மாதிரியானவர்கள் என்பவற்றின் ஊடாக மனிதனை மனிதனாக வாழவைக்கும் சமயமாக பிறப்புமுதல் இறப்பு வரை சரியான பாதையில் சமூகத்திற்கு பொருத்தமானவனாக ஆக்கும் வகையில் இந்துமதம் எடுத்துரைக்கும் விடயங்கள் எண்ணில் அடங்காதவை.

மனிதன் தனது மனையில் சந்தோசமாக வாழ கல்வி பெறல், தானம் செய்தல் உணவுமுறை, வழிபாடு, தியானம், பொருத்தமான பழக்கவழக்கங்கள், விருந்தோம்பல், மனஅமைதி, முகம்மலர்தல் எனப் பல விடயங்கள் கூறப்பட்டுள்ளன.

ஒழுக்கமுறைகள் தொடர்பாக, களவு, புலால் உண்ணாமை, பிறர்மனை கவராமை, புறம்கூறாமை, பொறாமை, விட்டுக்கொடுப்பு இன்மை என்பவற்றை இல்லாது ஒழிக்கவும் வழி கூறப்பட்டுள்ளது.

ஆகார முறைகள் முழுமையாக பின்பற்ற வழி கூறப்பட்டுள்ளது. தூய்மையாக இருத்தல், தியானம், மனச்சுத்தம் என்பவற்றை பின்பற்றவும் வழி கூறப்பட்டுள்ளது.

நாளாந்த வழிபாடு இன்றியமையாதது எனக் கூறப்பட்டுள்ளது. மனத்தூய்மை பெறவும் அமைதி நிலைபெறவும் இந்துமதம் அவசியமாகும்.

ஆன்மீக வழி நின்று கடவுளுடன் உலக இன்பங்களை விட்டுக்கொடுத்து நிலையாமை பற்றி இந்துமதத்தில் கூறவும் இது எடுத்தியம்பப்பட்டுள்ளது.

வீட்டுக்கிரியைகள் இந்துக்களின் வாழ்க்கையில் முக்கியமானதாகும். ஆன்மாவையும் உடலையும் பரிசுத்தப்படுத்தி இறைவன்பால் சேர்க்க கிரியைகளும் சம்பிரதாயங்களும் முக்கியமானதாகும். குழந்தை பிறந்து 10,12 நாட்களில் பெயர் வைக்க வேண்டு மென "மனுஸ்மிருதி" கூறுகிறது. பெயரிடல் 31ம் நாள், பிறந்தநாள் எனதம் சிறப்பு விரதங்கள் விசேட நாட்களிலும், பூப்படைதல், திருணம், இறப்பு என்பவற்றின் போதும் இவை நடைபெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரதங்களின் போது மனமும் சுத்தமடைகின்றது. நோய் எதிர்ப்பு, கெட்ட நோய்கள் வருவதையும் தடுக்கின்றது. பண்டிகைக்காலங்களில் மனம் மகிழ்தல், புதுக்கோலமும், புத்தாடையும், உற்றார், உறவினர் சேர்கையும், உணவு உருவாக்கமும் பரிமாற்றலும் என பல ஒழுங்குகள் நடந்தேறுகின்றன.

மறுவாழ்வு எமது வாழ்வில் நாம் செய்யும் நல்ல தீய செயற்பாடுகள், எமக்கு நன்மையா, தீமையா கிடைக்கும் என்று கூறுவதன் ஊடாக எமது வாழ்வில் நல்லவற்றையே செய்ய தூண்டப்படுகின்றோம்.

மனிதன் தனது உயர் நிலை இன்பத்தை பெற சரியை, கிரியை, யோகம், ஞானம் நான்கு மார்க்கங்களை கூறி அதனூடாக ஒருவனை ஒவ்வா செயற்பாடுகளில் இருந்து விடுவித்து சமூகத்திற்கு ஏற்றவனாக மாற்றுவதற்கு வழிகாட்டப்பட்டுள்ளது. நாற் குரவர்கள் வாழ்ந்து காட்டிய வழி இதற்கு சிறந்த உதாரணமாகும்.

முத்திபேறு அடுத்த முக்கிய விடயமாகக் கூறப்பட்டுள்ளது. மனிதன் ஆசாபாசங்கள் நீங்கப்பெற்று இறைவனைச் சேரும் நிலை இதுவாகும். இந் நிலையில் அவனிடம் எதுவும் சொத்தாக இருக்காது, சுகம், பொருட்தேடல், அளவுக்கு அதிகமாக சேமித்தல் இவைகள் இதன் மூலம் தவிர்க்கப்படுகின்றன. வாழ்வு நிலையாமை என்பது உணர்த்தப்படுகின்றது.

எமது சமய குரவர்கள், முனிவர்கள், சித்தர்கள், அடியார்கள் என முன் மாதிரியாக செயற்பட்டு, வாழ்வியல் முறைபற்றி வெளிப்படுத்தி வாழ்வின் இரகசியங்களை வெளிப்படுத்தி முன்மாதிரியாக செயற்பட்டு சமூகத்திற்கு விட்டுச்சென்றுள்ளனர். அதனை பயன்படுத்த எமக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஆலய மணி ஓசை அதிகாலையில் ஒலிக்கும் போது நாம் நமது கடமைகளை ஆரம்பிக்க வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது. நித்தியகால பூசை என்பது இதற்கு உந்து சக்தியாகும்.

நவீன விஞ்ஞானம் தோன்ற முன்பே கோள்கள் பற்றியும் இராசிகள் பற்றியும் நாற்று நடல், அறுவடை செய்தல் வீடுகுடிபுகுதல், வீடு கட்டுதல் தொடர்பாக நல்ல நேரம் சோதிடம் என்ற வகையில் மனிதனுக்கு வழிகாட்டியுள்ளது.

இன்னும் சொல்லப்போனால் மருத்துவம், நோய்களிலிருந்து விடுபடல் என்பவையும் இந்துமதத்தின் வழி வந்தவைகளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழல் பாதுகாப்பு என இப்போது நாம் கூறினாலும் அப்போதைய காலங்களில் சாதாரணமாக பூப்பறிக்கும் போது கூட பூவை மட்டும் பறிக்கவேண்டும். மொட்டுகளையோ, கொத்துகளையோ பறிக்கக் கூடாது எனக் கூறப்பட்டுள்ளது. அட்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரங்கள் ஊடாக உடற்பயிற்சி பற்றி கூறப்பட்டுள்ளது.

அத்துடன் ஆலயத்துள் எச்சில் துப்புதல், முடிவாருதல், சுத்தமின்றி செல்லல், மதுஅருந்துதல், சேட்டைகள் புரிதல் என்பன தவிர்க்கப்பட்டுள்ளன.

எனவே மேற்கூறியவாறு வாழ்க்கை முறை, ஒழுக்கம், ஆசாரங்கள், வழிபாடு, கிரியை, பண்டிகைகள், மறுவாழ்வு, முத்திநிலை, சோதிடம், வணக்கமுறை, சூழல் பாதுகாப்பு, சைவ நாற்பாதங்கள், கடமைகளை ஆரம்பித்தல், மருத்துவமுறை, உடற்பயிற்சி, உணவு முறை, வீண்விரயம் செய்யாமை, தூய்மை, சிரமதானம், முன்மாதிரிசெயற்பாடுகள், நல்லவை தீயவை அதன் பலன்கள் என பல்வேறு விடயங்கள் ஊடாக மனிதனை மனிதனாக வாழவைக்கும் மதமாக இந்துமதம் காணப்படுகிறது என திடமாக குறிப்பிடலாம்.

செல்வி. கவியரசி
தரம் - 12

# பூக்கள்

வண்ண வண்ணப் பூக்கள்
வடிவான பூக்கள்
என் வீட்டுத் தோட்டத்தில்
நான் விரும்பும் பூக்கள்!

வெள்ளை சிவப்பு ரோஜா
மஞ்சள் சிவப்பு செவ்வரத்தை
நிதமும் பூக்கும் நித்தியகல்யாணி
பொன்னிறத்தில் பொன்னொச்சி!



பார்க்கக் கொள்ளை ஆசை
பாரீர் எனது தோட்டம்
காற்றில் வருமே வாசம்
கூடி நாமும் மகிழ்வோம்!

காலை நேரம் நாமே
பறிப்போம் நல்ல பூவை
சூடி மகிழ்வோம் இறைவனுக்கு
தருவார் அவரும் நற்பலனே!

சி. ஷர்மிலன்
தரம் - 8A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசளிப்புப் பனுவற் புதுமையே!

திருமதி. ஜோதிசித்திரா நித்தியகுமார்
ஆசிரியர் (Dip.in.Ed)

அழகிய அன்புவழிபுர கிராமத்தில்
ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்தோராம்
ஆண்டதனில் சிறு குடிலாய்த் தோன்றி
நாமகள் நாமமதைச் சூடிக் கொண்ட
ஞானச் சுடராம் எம் கலைக் கூடமே!
உன் கலைப் பணிகளோ இந் நாளதனில்
நாற்பத்து ஐந்து அகவைகளைச் சுமந்திட்டே
வெற்றிநடை போடுதல் - கண்டிட்டோம்!

சால வித்தைகள் அனைத்தையும்
சற்றேனும் தளர்ந்திட விடா வண்ணம்
தன்னகத்தே தக்க வைத்துள்ள
எம் அருமைத் தலைவியாம்
"திருமதி.இ. சரோசா" அவர்தம் தலைமையில்
இரண்டாயிரத்து எட்டில் மலர்ந்து மிளிர்ந்த
கலையமுதமெனும் பரிசளிப்புவிழா இதழது
கலைத்தாய்க்கு மகுடமானதும் - கண்டோம்!

ஆலங்கேணிதனில் கருக் கொண்டெழுந்து
இரண்டாயிரத்துப் பத்தினில்
இச்சாலை அதிபதியாய் வந்துதித்து
"(இ) ரவிக்குல" வழித் தோன்றலாய் - மிளிரும்
திரு. க. ரவிதாஸ் அவர்களின் அரும்பணியால்
மன்மத வருடத்தில் ஐயமுடனே — மீண்டும்
இங்கோர் கலையமுதமது வாகை சூடியே
முகிழ்ந் தெழுந்திடக் - காணுகின்றோம்

பனுவலுக்கே கட்டியங் கூறிடவல்ல
கலையமுத பரிசளிப்பு மலரே - நீ
பல்வேறு தகவல்கள் பொதிந்தெழுந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ்சரியுமாகிப் போனாயே!
உன் நல் வரவு கண்டிங்கே
"நலன் விரும்பிகளும் நல்லதிகாரங்களும்
ஆதவனைக் கண்டிட்ட அம்புயமாய்
ஆகிப் போவதையும் - காணுகின்றோம்!

பாலர் முதலாய் பள்ளியிற்
பயிலுவோர் தம் சாதனைகள்
அனைத்தையுமே மெச்சிடவே
உருவெடுத்த கலைய முதமெனும்
பரிசளிப்பு விழா மலரே - உன்
வழித் தோன்றல்கள் எம் சாலைக்கு
மீண்டும் மீண்டும் வேண்டுதலின்
அவசியமும் நாமிங்கு - கண்டிட்டோம்!

---

# விடுகதைகள்

01. முதுகிலே அரிதாரம் பூசுபவன் முகத்தைப் பளிச்சென்று காட்டுவான். அவன் யார்?
**கண்ணாடி**

02. வில்லாய் வளைபவன் ஒருபோதும் ஒடிந்து போக மாட்டான். அவன் யார்?
**நாணல்**

03. அமாவாசைக்கு வயதானால் பௌர்ணமி ஆகும். அது எது?
**தலைமுடி**

04. சின்ன வாயில் ஊட்டி விடும். உணவை ஜீரணம் செய்யாமல் வைத்திருக்கும். அது எது?
**உண்டியல்**

05. குண்டு செம்பில் தண்ணீர் இருந்தும். குருவி குடிக்க வழியில்லை அது என்ன?
**இளநீர்**

செல்வி. A. சுபேக்கா
தரம் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது விசேட கல்வி அலகின் வளர்ச்சிப் போக்கு

திருமதி. சகாயமலர் யோகராஜா
விசேட கல்வி டிப்ளோமா

இன்றைய காலகட்டத்தில் எமது நாட்டின் வடக்கு, கிழக்கு பிரதேசத்தில் நடைபெற்ற போர்ச்சூழல், வன் செயல்கள், இடப்பெயர்வுகள் மட்டுமல்லாமல், இயற்கை அனர்த்தங்கள் காரணமாகவும் இன்று எத்தனை, எத்தனையோ, சிறார்கள், அங்கவீனர்களாகவும், விசேட தேவைக்குட்பட்டவர்களாகவும் மாறி வரும் அவல நிலை தோன்றியுள்ளமை அனைவரும் அறிந்த விடயமாகும்.

குறிப்பாக வடக்கு, கிழக்கில் அதிக எண்ணிக்கையானர். மாணவர்கள் விசேட தேவைக்குட்பட்டவர்கள் என ஆய்வுகளின் படி இனங்காணப்பட்டுள்ளன. இக் காலத்தின் தேவைக்கேற்ப L.C.D.R.C (Leonard Cheshire Disability Resource Center) எனும் தனியார் நிறுவனமானது பல பெற்றோர்களின் வேண்டுகோளுக்கமைய வலய மற்றும், மாகாண கல்வித் திணைக்களங்களின் அனுமதி பெற்று விசேட கல்வி அலகிற்கான வகுப்பறை, மலசலகூடவசதி, சாய்தளம் என்பவற்றை தாமே வசதி செய்து மாணவர்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்கள் என்பனவற்றிற்கும் தாமே அனுசரணை செய்து 2008.09.04 அன்று நான்கு மாணவர்களுடனும், இரு ஆசிரியருடனும் திருமதி. ச. இராமநாதன் அதிபர் தலைமையில் எமது பாடசாலையின் விசேட கல்விப் பிரிவானது உருப்பெற்று இன்று 19 மாணவர்களுடனும் ஒரு ஆசிரியருடனும் கிளை பரப்பி இன்னும் பலர் எமது கிளையில் இணைவர் என்ற எதிர்பார்ப்புடனும், நம்பிக்கையுடனும், படிப்படியான வளர்ச்சி கண்டு இன்று வீறு நடை போடுகிறது.

இப்பிரிவில் மன நலிவு நோய் (Down's Syndrome), வலிப்பு (Epilepsy) மூளை முடக்கு வாதம் (Cerebral palsy), கற்றல் இடர்ப்பாடு (Learning Disability), கேட்டல் பேச்சு தாமதம் (Hearing & Speech Delay) அபிவிருத்தி தாமதம் (Global Development Aldelay), பல்தரக் குறைபாடு (Multible disease), ஓட்டிசம் (Autism), மனவளர்ச்சி குன்றியோர் (Mental Retardation) என பல்லின பாதிப்புக்குள்ளான ஆண், பெண் இருபாலாரும் கல்வி பயின்று வருகின்றனர்.

இம் மாணவர்கள் அன்புவழிபுரம், அபயபுரம், செல்வநாயகபுரம், காந்திநகர், பாலையூற்று, இலிங்கநகர், புளியங்குளம், மட்கோ, தம்பலகாமம் என அயற் கிராமங்களிலிருந்தும், தூரப் பிரதேசங்களிலிருந்தும் பெற்றோர்கள் பல சிரமங்கள், போக்குவரத்து பிரச்சனைகள், பொருளாதாரப் பிரச்சனைகள் பலவற்றுக்கும் முகங் கொடுத்தே இங்கு வந்து அம் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறை காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பிரிவு மாணவர்களுக்கு வருடாவருடம் விளையாட்டுப் போட்டி, மகிழ்வூட்டல் சுற்றுலா, மருத்துவ முகாம், சிறுவர் முகாம், சிறுவர் தினம், மாற்று வலுவுடையோர் தினம் என பல நிகழ்வுகளையும் வலயக் கல்வி திணைக்களம் தனது அனுசரணையில் நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அது மட்டுமல்லாமல் எமது பாடசாலை மட்டத்தில் நாம் எழுத்தறிவுப் போட்டி, வாசிப்புப் போட்டி, பொருட்காட்சி, இல்ல விளையாட்டுப் போட்டியின் போது இவர்களுக்கான விசேட விளையாட்டுக்கள் எனப் பலவும் நடைபெறுகின்றன.

மேலும் பாடசாலை மட்டத்தில் நடைபெறும் ஆசிரியர் தின நிகழ்வு, வாணி விழா, ஒளி விழா மற்றும் பரிசளிப்பு வைபவம் போன்ற நிகழ்வுகளிலும் எமது விசேட கல்வி அலகு மாணவர்கள் தனிப்பாடல், குழுப்பாடல், இசையும் அசைவும், குழுநடனம் என பல நிகழ்வுகளையும் நடாத்தி அனைவரது கரகோசங்களையும், பாராட்டுக்களையும் பெற்று வருவது பெருமைக்குரிய விடயமாகும்.

அது மட்டுமல்லாமல் திருகோணமலை நகராட்சி மன்றத்தினால் 12.07.2010-19.07.2010 வரை உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையே பல தரப்பட்ட போட்டி நிகழ்வுகளும் இடம்பெற்றன. அதில் விசேட பிரிவு மாணவர்களுக்கான நிகழ்வுகளும் இடம்பெற்றன. அதில் எமது மாணவர்களும் குழுநடனம், தனிப்பாடல் போட்டியில் பங்கு பற்றியதோடு செல்வி. இ. அபர்ணா எனும் மாணவி தனிப்பாடலுக்காக வெற்றிக் கிண்ணத்தையும் பெற்றுக் கொண்டார்.

மேலும் கடந்த வருடம் 2014ல் நடைபெற்ற சமூக சேவைகள் திணைக்களமும், மாவட்டச் செயலகமும் இணைந்து நடாத்திய அரச கலை விழா - 2014ல் மாற்று வலுவுடையோர்களுக்கான பல போட்டிகளில் செல்வன் அ. கிசாந் எனும் மாணவன் சித்திரப் போட்டியில் பங்கு பற்றி முதலாம் இடத்தினையும் 1500/- பணப் பரிசினையும் பெற்றுக் கொண்டதோடு கொழும்பு கலா பவனத்தில் நடைபெற்ற தேசிய மட்டப் போட்டியில் கலந்து கொண்டமையும் பெருமைக்குரிய விடயமாகும்.

இப் பாடசாலையில் சாதாரண மாணவர்களுக்கு கிடைக்கும் சகல உரிமைகளும் எமது விசேட பிரிவு மாணவர்களுக்கும் ஒரு படி மேலாகவே கிடைக்கின்றது என்பதும், எந்த விடயத்திலும் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவ தலைவர்கள், ஏனைய மாணவர்கள், சிற்றூழியர்கள் ஆயினும் சரி எம் மாணவர்களுடன் அன்பாகவும், நெருங்கிய தோழமையுடனும் முன்னுரிமை கொடுத்துப் பழகுகின்றனர் என்பதில் நாம் பெருமை அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இப் பிரிவில் கல்வி பயின்று நான்கு மாணவர்கள் உட்படுத்தல் கல்விக்குள் உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ச.காவியன், ஜெ. பிரவீன், மே.துஷிகரன், பெ. விஜயதர்சினி எனும் மாணவர்களே அவர்களாவர்.

மேலும் எமது பிரிவிற்கு பல் தரப்பட்ட தேவைகளும் காணப்படுகின்றன. மிகவும் முக்கியமாக இன்னும் இரண்டு விசேட கல்வி ஆசிரியர்கள் தேவை என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மற்றும் மாணவர்களுக்குப் பொருத்தமான தளபாடங்களும், விஸ்தரிக்கப்பட்ட வகுப்பறையைக் கொண்ட ஒரு கட்டிடமும், உடற்பயிற்சி இயந்திரங்களும் எமது அவசியத் தேவைகளாகவும் காணப்படுகின்றன.

எமது விசேட கல்விப் பிரிவில் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களும் எதிர் காலத்தில், சமூகப் பொருத்தப்பாடுடையவர்களாகவும், தமது சுய தேவைகளை பிறர் உதவியின்றி தாமே நிறைவேற்றுபவர்களாகவும், சுய தொழில் செய்து தன்னம்பிக்கையுடன் தரணி போற்ற வாழ்பவர்களாகவும், வாழ்வார்கள் என்ற இறை நம்பிக்கையுடனும், எதிர்பார்ப்புடனும் இப்பிரிவானது வீறுநடை போடுகிறது எனக் கூறின் மிகையாகாது.

---

# சிந்தனைத் துளிகள்

01. சிறந்த தோழமை வேண்டுமானால், தானும் சிறந்தவனாக இருக்க வேண்டும்.
02. நீ உண்மையைத் தேட விரும்பினால், உன் எதிரியின் வார்த்தைக்கு அர்த்தம் தேடு.
03. நீ உன்னை வார்த்தைகளால் அல்ல; ஆற்றலால் இந்த உலகத்திற்கு அறிமுகம் செய்துகொள்.
04. உறவாடும் உதடுகளை விட, பிறருக்கு உதவும் கரங்கள் புனிதமானவை.
05. உன் அன்பின் தன்மைக்கு ஏற்றபடி உன் செயல்கள் இருக்கும்.
06. மனிதனுக்கு சுயபுத்தியும், குருவின் உபதேசமும் மேன்மை தரும்.
07. உணர்ச்சி வேகத்தில் அறிவாளியும் மடையன் ஆகிடுவான்.
08. நல்ல சிந்தனைகள் நல்ல செயல்களுக்கு வழி வகுக்கும்.
09. பகைவனை நண்பனாக்கிக் கொள்பவன் விவேகி.

செல்வி. S. அஸ்வினி
தரம் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் தாயே உன்னை நான் போற்றுகின்றேன்!



தன்னுயிரில் இன்னுயிராய் பத்துமாதம் என்னை
கருவினில் சுமந்து பெற்றாய்
இந்த உலகிற்கு என்னை முதல் முதல்
காட்டியவளும் நீயே
பாரினிலே நான் உயர்ந்திட
பண்புள்ளவளாக்கினாய் அதற்காக
என் தாயே உனை நான் போற்றுகின்றேன்!

என் அன்பிற்கும் அடையாளம் நீ
என் உறவின் ஆதாரமும் நீயே
என் உண்மையின் இலக்கணம் நீயே
என் உயிரின் உத்தரவாதம் நீயே
என் உணர்வுகளின் உணர்ச்சிகளும் நீயே
என்னவென்று சொல்வேன் என்தாயே
உனை நான் போற்றுகின்றேன்!

நிலவைக் காட்டி உணவை ஊட்டினாய்
உறவைக் காட்டி அன்பை ஊட்டினாய்
நூலைக் காட்டி அறிவை ஊட்டினாய்
இரக்கம் காட்டி பண்பை ஊட்டினாய்
உன் உதிரத்தையும் பாலாக்கி என்
உதிரத்திலே சேர்க்கவைத்தாய் - அதற்காக
என் தாயே உனை நான் போற்றுகின்றேன்!


என் ஆயுள் உள்ள காலம் வரை
உன் அன்பு வேண்டுமம்மா!
கெஞ்சிக் கேட்கின்றேன் ஒரு வரப்பிரசாதமாய்
என் உயிர் உள்ளவரை என் இதயக் கலங்களில்
குடிகொண்டவளாய் நீ வாழ்க பல்லாண்டு என்று
என் தாயே உனை நான் போற்றுகின்றேன்.

செல்வி.சௌ. விதுர்ஷிகா
தரம் - 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் ஒரு பறவையானால்...!



என் வீட்டு முற்றத்தில் ஒரு மாமரம் இருக்கின்றது. மாமரத்தில் அனேகமான மாங்கனிகள் காணப்படுவதால் பல வகையான பறவைகள் வந்து அங்குள்ள கனிகளை உண்ணும் போது ஒரு பறவை மட்டும் அந்த மாமரத்தைச் சுற்றிச் சுற்றி அங்கிருக்கும் நல்ல மாங் கனிகளை உண்டு சந்தோசமாகவும், சுதந்திரமாகவும் சிறகடித்து பறக்கும் போது இதை போன்று நானும் சுதந்திரமாக வாழ வேண்டுமென்பது எனது அவா. இப்படி இருக்கின்ற போது ஒரு அழகான தேவதை என்னிடம் வந்து உனது ஆவல் என்னவென்று கேட்டால்? நான் தேவதையிடம் கூறுவேன். நான் ஒரு பறவைபோல் சுதந்திரமாக வாழவேண்டும் என்று சொல்வேன். தேவதையும் எனது உடலை ஒரு சிறிய பறவை போன்று உருமாற்றினாளாயின் இந்த பார் எங்கும் உலாவி காலையில் என் நண்பர்களுடன் ஆடிப்பாடி சந்தோசமாக நீர்வீழ்ச்சிகளில் நீராடி விட்டு மலை, குன்று போன்ற இடங்களில் இருக்கும் போது தென்றல் வீசும். அப்பொழுது எங்களுடைய சிறகுகளை வேகமாக அசைப்போம். ஏனென்றால் எங்களுடைய சிறகுகளில் உள்ள ஈரத் துளிகள் மறைந்து போகும். பின்பு மாலை வீடு திரும்புவோம். இப்படி இருக்கும் போது மழைக்காலம் ஆரம்பமாகும். நான் எனது நண்பர்களுடன் வேகமாகப் பறப்பேன். அப்பொழுது எனக்கு எல்லையற்ற மகிழ்ச்சி வரும். மழை பெய்து முடிந்த பிறகு மர இலை நுனியில் மழைத்துளி காணப்படும். அப்பொழுது நானும் எனது நண்பர்களும் பறந்து மர இலைகளினூடாக செல்லும் போது எனது முழு சரீரமும் குளிர்ச்சியடையும். பின்பு விவசாயியின் வீட்டிலுள்ள பழங்களை உண்ணும் போது விவசாயி எங்களை விரட்டுவான். நாங்கள் பறந்து செல்வது போல் காட்சியளித்து ஓர் மரத்தில் அமருவோம். விவசாயி சென்றதும் மீண்டும் வயல் வெளிக்கு வந்து நெல், தானியம் போன்றவற்றை உண்டு வீடு திரும்புவோம். இப்படி ஒரு நாள் எனக்கு வரவேண்டும் என்பது எனது ஆசை.

செல்வன். N. டிலான்
தரம் - $10^A$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கணித நுட்பங்கள்

திருமதி. M. நிரோஷிதா
ஆசிரியர் B.Sc

ஒன்பதாம் வாய்ப்பாடு உங்கள் கைகளில் (Finger Multiplication of 9 times table) உங்களுடைய இரு கைகளை பாவித்து ஒன்பதாம் வாய்ப்பாட்டினை மிக சுலபமாக காண முடியும்.


* உங்கள் இரு கைகளையும் தெரியுமாறு விரித்துக் கொள்ளுங்கள்.
* இடது கை விரலில் இருந்து 1 முதல் 10 வரை எண்ணத் தொடங்கவேண்டும்
* எந்த எண்ணை ஒன்பதால் பெருக்க வேண்டுமோ அந்த எண் கொண்ட விரலை மடக்கிக் கொள்ளவும்.
* பின்னர், இடது பக்க கைவிரலிலும் வலது பக்க கை விரலிலும் மீதமுள்ள விரல்களின் எண்ணிக்கையை சேர்த்துக் கூறினால் அது விடையாக அமையும்.

உதாரணம் (i) 9 x 3 = ?




9 x 3 = 27

(ii) 9 x 4 = ?




9 x 4 = 36

விளக்கம் :- படத்தில் உள்ளதை போல் உங்கள் இடது கையில் 3வது விரலை மடக்க வேண்டும் (ஏனென்றால் 3 ஆல் பெருக்குவதால்) பின் 3 ஆம் விரலுக்கு முன் மீதமுள்ள விரல்களின் எண்ணிக்கை 2ஐயும் 3ஆம் விரலுக்கு பின் உள்ள விரல்களின் எண்ணிக்கை 7ஐயும் சேர்க்க வேண்டும். எனவே 9 x 3 = 27 ஆகும்.

* ஓர் எண்ணை 11 ஆல் பெருக்கினால் (Any number multiply by 11)
* ஓர் எண்னை 11 ஆல் பெருக்குவதற்கு மிகவும் சுலபமான முறை இதோ...

உதாரணம்
(i) 11 x 67 = ?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* முதலில் 11 ஆல் பெருக்க வேண்டிய எண்ணை கூட்டவேண்டும்

  $6 + 7 = 13$

* 6ற்கும் 7ற்கும் இடையில் அவ்வெண்ணை (அதாவது கூட்டிய எண்ணை - 13ஐ) இட்டு பின்னர் 6 உடன் 1 ஐக் கூட்டி அருகில் மீதமுள்ள எண்களை எழுத வேண்டும்.




அதாவது

$11 \times 67 = 737$

ii. $11 \times 97$

$9\,(9 + 7)\,7$

$9\,(16)\,7$

1067 அதாவது, $11 \times 97 = 1067$

iii. $11 \times 78$

$7\,(7 + 8)\,8$

$7\,(15)\,8$

858

$11 \times 78 = 858$

* 1 இல் முடியும் எந்த ஓர் எண்ணுக்கான வர்க்கத்தை காணுதல்

  (Squaring any number ending with 1)

1 இல் முடிவடையும் எண்களின் வர்க்கத்தை கீழ் உள்ள வழிமுறையைப் பயன்படுத்தி மிக சுலபமாக காணலாம்.

உதாரணம் :-

i. $(31)^2 = ?$

$(31)^2$

$31 - 1 = 30$

$30^2 = 900\ (3 \times 3 \times 10 \times 10 = 900)$

$900 + 30 + 31 = 961$

$\therefore (31)^2 = 961$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிமுறை :-

- 31 இலிருந்து 1 இனை கழித்து அதன் வர்க்கத்தை காணுதல்

  $31 - 1 = 30 \qquad 30^2 = 900$

- முதலில் வர்க்கம் கண்ட எண்ணையும் அதாவது 30 ஐயும் வர்க்கம் காண வேண்டிய எண்ணான 31 ஐயும் கூட்ட வேண்டும்.

  $30 + 31 = 61$

- பின்னர் படி (i) ஐயும் படி (ii) ஐயும் கூட்ட வேண்டும்.

  $900 + 61 = 961$

ii. $(81)^2 = ?$

வழிமுறை :-

- 81 இலிருந்து 1ஐக் கழித்து அதன் வர்க்கத்தை காணுதல்

  $81 - 1 = 80 \qquad 80^2 = 6400$

- 80 ஐயும் 81 ஐயும் கூட்ட வேண்டும்

  $80 + 81 = 161$

- 6400 ஐயும் 161 ஐயும் கூட்ட வேண்டும்

  $6400 + 161 = 6561$

அதாவது $(81)^2 = 6561$

iii. $(141)^2$

$141 - 1 = 140$

$140^2 = 19600 \ (14 \times 14 \times 10 \times 10)$

$140 + 141 = 281$

$19600 + 281 = 19881$

- எந்த ஓர் எண்ணையும் 16 ஆல் பெருக்க

  (Any number multiply by 16)

எந்த ஓர் எண்ணையும் 16 இனால் பெருக்க மிகவும் சுலபமான வழிமுறை

வழிமுறை :- முதலில் 16 ஆல் பெருக்க வேண்டிய எண்ணை 10 ஆல் பெருக்க வேண்டும். பின்னர் பெருக்கி வந்த விடையின் பாதியை காணவும். இவ்விரு விடையுடன் பெருக்க வேண்டிய எண்ணையும் கூட்டினால் கிடைப்பது விடையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம் :-

i. 16 x 24 = ?

24 x 10 = 240 —— ①

240÷2 = 120 —— ②

① + ② + பெருக்கவேண்டிய எண்

= 240 + 120 + 24 = 384

* முதலில் 24ஐ 10 ஆல் பெருக்கவேண்டும் 24 x10 = 240
* பெருக்கி வந்த விடையின் பாதியை காணுதல். 240 இன் பாதி 120
* பின்னர் 240 உடன் 120 மற்றும் பெருக்க வேண்டிய எண்ணை கூட்ட வேண்டும்.

240 + 120 + 24 = 384

ஆகவே, 16 x 24 = 384

(ii) 16 x 98 = ?

98 x 10= 980 —— ①

980 ÷ 2 = 490 —— ②

① + ② + பெருக்க வேண்டிய எண்

அதாவது, 980 + 490 + 98

= 1568

ஆகவே 16 x 98 = 1568

iii) 16 x 281

281 x 10 = 2810 —— ①

2810÷2 = 1405 —— ②

① + ②+ 281

= 2810 + 1405 + 281

= 4496

ஆகவே, 16 x 281 = 4496

* இரு இலக்க எண்ணை 9 ஆல் வகுக்க

(Any two digit number divided by 9)

எந்த ஒரு இரண்டு இலக்க எண்ணையும் 9 ஆல் வகுக்க கீழ் கண்ட முறையை பின்பற்றி சுலபமாக விடை காண முடியும்.

வழிமுறை :-

* வகுபடும் எண்ணின் முதல் இலக்கமானது ஈவு (Quotient) ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❋ பின்னர் வகுபடும் எண்ணின் முதல் இலக்கத்துடன் இரண்டாவது இலக்கத்தைக் கூட்ட வரும் விடையானது மீதி ஆகும் (Reminder)

குறிப்பு :- மீதி ஆனது 9ஐ விட பெரிதாக அல்லது சமனாக இருந்தால் அதிலிருந்து 9 ஐ கழிக்க கிடைப்பது மீதியாகும். அவ்வாறே ஈவுடன் 1 ஐக் கூட்ட வேண்டும்.

உதாரணம் :-

(i) $51 \div 9 = ?$

❋ முதலில் வகுபடும் எண்ணின் முதல் இலக்கமாக 5 ஈவு ஆகும்.

❋ பின்னர் முதல் இலக்கத்துடன் இரண்டாவது இலக்கத்தை கூட்ட வேண்டும்.

$5+1 = 6$ மீதி ஆகும்

$51/9 = 5$ ஈவு 6 மீதியாகும்.

(ii) $34 \div 9 = ?$

❋ 3 ஈவு ஆகும்

❋ $3 + 4 = 7$ மீதி ஆகும்

$\frac{34}{9} = 3$ ஈவு 7 மீதி

(iii) $68 \div 9 = ?$

❋ 6 ஈவு

❋ $6 + 8 = 14$, எனவே கூட்டி வரும் விடை 9ஐ விட பெரிதாக இருப்பதனால், 9ஐக் கழித்து வரும் விடை மீதி $14-9=5$, ஆகவே, 5 மீதியாகும். பின்னர் ஈவு 6 உடன் 1 ஐக் கூட்ட வேண்டும் $(6 + 1 = 7)$

$\frac{68}{9} = 7$ ஈவு 5 மீதி

(iv) $98 \div 9 = ?$

❋ 9 ஈவு

❋ $9 + 8 = 17$ (9 ஐ விட பெரிதாக இருப்பதால்)

$17 - 9 = 8 \longrightarrow$ மீதி

❋ ஈவு 9 உடன் 1ஐக் கூட்டினால் 10 ஈவு ஆகும்

$98/9 = 10$ ஈவு 8 மீதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(V) $38 \div 9 = ?$

- 3 ஈவு
- $3 + 8 = 11$
- $11 - 9 = 2 \longrightarrow$ மீதி
- ஈவு $3+1 = 4 \longrightarrow$ ஈவு

$\frac{98}{9}$ = 4 ஈவு 2 மீதி

vi. $71 \div 9 = ?$

- 7 ஈவு
- $7 + 1 = 8$ மீதி
- $71/9 = 7$ ஈவு 8 மீதி

✷ நடுவில் பூஜ்ஜியத்தைக் கொண்டுள்ள எந்த ஒரு மூன்றிலக்க எண்ணுக்கான வர்க்கத்தை காணுதல்

304, 205,908,709 போன்ற நடுவில் பூஜ்ஜியத்தை கொண்டுள்ள மூன்றிலக்க எண்ணுக்காக வர்க்கத்தை கீழ்காணும் எளிய முறை மூலம் மனதாலேயே சொல்லிவிட முடியும்.

உதாரணம்

(i) $(304)^2 = ?$

- முதலில் வர்க்கம் காணவேண்டிய எண்ணின் வர்க்கத்தை காணுதல்

$$3^2 = 9 \text{ —— } ①$$

பின்னர் முதல் மற்றும் இறுதி இலக்கத்தை பெருக்கி வரும் விடையின் இரண்டு மடங்கை காணுதல்

$3 \times 4 = 12$

$12 \times 2 = 24$ —— ②

இறுதி இலக்கத்தின் வர்க்கத்தை காணுதல்

$4^2 = 16$ —— ③

பின்னர் 3 விடைகளையும் ஒன்று சேர்க்க வேண்டும்?

= ① | ② | ③ |
= 09 24 16

$(304)^2 = 92416$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. $(809)^2 = ?$

- $8^2 = 64$ ——— ①
- $8 \times 9 = 72$
- $72 \times 2 = 144$ ——— ②
- $9^2 = 81$ ——— ③

$(809)^2 = 64 \mid 144 \mid 81$

4 + 1 = 5

$\therefore 654481$

குறிப்பு :- எந்தவொரு படியிலும் 3 இலக்க எண்கள் வந்தால் விடையின் முதல் எண்ணை அடுத்த படியுடன் சேர்க்க வேண்டும்.

உதாரணம் (ii) இல் நடு இலக்கம் 144 ஆகையால் அதன் முதல் இலக்கம் 1 ஐ 64 இன் இறுதி இலக்கத்துடன் (4 உடன்) கூட்டி எழுத வேண்டும்.

iii. $(909)^2 = ?$

- 92 = 81
- 9 x 9 =81
  81 x 2=161
- 92 = 81

$(909)^2 = 8 \mid 61 \mid 81$

1 + 1 = 2

= 826181

iv. $(508)^2 = ?$

- $5^2 = 25$
- 5x8= 40
  40x2= 80
- $8^2 = 64$

$(508)^2 = \mid 25 \mid 80 \mid 64 \mid$

= 258064

V. $(102)^2 = ?$

- முதலில் வர்க்கம் காண வேண்டிய எண்ணின் முதல் இலக்கத்தின் வர்க்கம் காணவேண்டும்.

$1^2 = 1x1=1=01$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* முதல் இலக்கத்துடன் இறுதி இலக்கத்தை பெருக்கி வரும் விடையை 2 ஆல் பெருக்க வேண்டும்

 1x2 =2

 2x2 = 4 =04

* இறுதி இலக்கத்தின் வர்க்கத்தை காணுதல்

 $2^2 = 2 \times 2 = 4 = 04$

 $(102)^2$ = | 01 | 04 | 04 |

* = 10404

குறிப்பு :- இங்கு பெருக்கி வரும் விடை ஓர் இலக்கமாக இருப்பதனால் 1ற்கு பதிலாக 01 எனவும் 4ற்கு பதிலாக 04 எனவும் இடவேண்டும்.

# பகவத் கீதை சொல்லும் வாழ்க்கை

- ⇨ வாழ்க்கை ஒரு சவால் - அதனை சந்தியுங்கள்
- ⇨ வாழ்க்கை ஒரு பரிசு - அதனை ஏற்றுக்கொள்ளுங்கள்
- ⇨ வாழ்க்கை ஒரு சாகச பயணம் - அதனை மேற்கொள்ளுங்கள்
- ⇨ வாழ்க்கை ஒரு சோகம் - அதனை கடந்து வாருங்கள்
- ⇨ வாழ்க்கை ஒரு இலக்கு - அதனை எட்டிப் பிடியுங்கள்
- ⇨ வாழ்க்கை ஒரு துயரம் - அதனை தாங்கிக் கொள்ளுங்கள்
- ⇨ வாழ்க்கை ஒரு கடமை - அதனை நிறைவேற்றுங்கள்
- ⇨ வாழ்க்கை ஒரு விளையாட்டு - அதனை விளையாடுங்கள்
- ⇨ வாழ்க்கை ஒரு விநோதம் - அதனை கண்டறியுங்கள்
- ⇨ வாழ்க்கை ஒரு பாடல் - அதனை பாடுங்கள்
- ⇨ வாழ்க்கை ஒரு குழப்பம் - அதற்கு விடை காணுங்கள்
- ⇨ வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் - அதனை பயன்படுத்திக் கொள்ளுங்கள்
- ⇨ வாழ்க்கை ஒரு பயணம் - அதனை புகழுடன் முடித்து விடுங்கள்
- ⇨ வாழ்க்கை ஒரு உறுதிமொழி - அதனை நிறைவேற்றுங்கள்
- ⇨ வாழ்க்கை ஒரு காதல் - அதனை அனுபவியுங்கள்
- ⇨ வாழ்க்கை ஒரு அழகு - அதனை ஆராதியுங்கள்
- ⇨ வாழ்க்கை ஒரு போராட்டம் - அதனை எதிர்கொள்ளுங்கள்

செல்வி. பு. டிலானி

தரம் - 11B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாப்பா பாப்பா கதை கேளு!

காட்டில் மான் ஒன்று மேய்ந்து கொண்டிருந்தது. அந்தப் பக்கமாக வந்த இரண்டு வேடர்கள் அந்த மானைப் பார்த்துவிட்டார்கள். அதைப் பிடிப்பதற்காக விரட்டினார்கள். அவர்களிடமிருந்து தப்புவதற்காக மான் வேகமாக ஓடியது. வேடர்க் அதைத் துரத்திக் கொண்டு பின் தொடர்ந்தார்கள். ஓடிக் கொண்டிருந்த மான் அருகில் தென்பட்ட ஒரு திராட்சைத் தோட்டத்திற்குள் புகுந்து விட்டது. வேடர்கள் அதைத் துரத்திக் கொண்டே திராட்சைத் தோட்டத்திற்குள் புகுந்தார்கள்.

மான் அடர்ந்து வளர்ந்திருந்த ஒரு பெரிய திராட்சைக் கொடியின் பின்னால் சென்று மறைந்து கொண்டது. மானைத் துரத்திக் கொண்டு வந்த வேடர்கள் மானை அங்குமிங்கும் தேடினார்கள். ஆனால் அவர்கள் கண்களில் மான் தென்படவில்லை. வேடர்கள் மானைத் தேடிக் கொண்டு தோட்டத்தின் உள்ளே சுற்றிச் சுற்றி வந்தார்கள்.

வேடர்கள் போய்விட்டார்கள் என்று கருதிய மான் நிம்மதியடைந்தது. அதன் கண்களிலே பசுமையான திராட்சை இலைகள் தென்பட்டன. தான் மறைந்திருக்க உதவிய அந்த இலைகளைப் பற்றி அது எண்ணிப் பார்க்கவில்லை. தனக்கும் பாதுகாப்பு அளித்த அந்த திராட்சை இலைகளின் மீது அதற்குக் கொஞ்சமும் நன்றி உணர்ச்சி ஏற்படவில்லை. அது அந்த இலைகளைத் தின்னத் தொடங்கியது.

கொஞ்ச நேரத்திற்குள் இலைகள் அனைத்தையும் மான் தின்று விட்டது. இப்பொழுது அந்த இடத்தில் இலையில்லாமல் கொடி தான் மிஞ்சியது.

அந்தத் தோட்டத்தின் உள்ளே மானைத் தேடி அலைந்து கொண்டிருந்த வேடர்கள் மான் இனிக் கிடைக்காது என்று எண்ணிக் கொண்டு தோட்டத்தை விட்டு வெளியே செல்ல எண்ணி நடந்து வந்தார்கள். மான் நின்றிருந்த இடத்தில் இப்போது இலைகளின் மறைப்பு இல்லாததால் அது நிற்பது வேடர்களின் பார்வையில் பட்டது. வேடர்கள் மானைப் பிடித்துக் கொண்டு சென்றார்கள்.



செல்வன். R. சதீஸ்வரன்
தரம் - 10A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் இடைவிலகலில் ஆசிரியரின் பங்களிப்பு

திருமதி. ல. திருக்குமார்
பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர்

இன்றைய உலகம் மாணவனை நோக்கி உருண்டு கொண்டிருக்கின்றது. உயர் அமைச்சுக்களும், பொது நிறுவனங்களும், சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்து கல்வி உரிமையை வழங்குங்கள் என்கிறது ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம். இவற்றிற்கு மத்தியிலும் மாணவர்கள் இடைவிலகுகின்றார்கள் என்றால் இதன் அடித்தளம் எங்கேயோ சற்றுச் சறுக்கி இருக்கிறதாக உணர்கின்றேன்.

மாணவர் இடைவிலகல் தொடர்பாக பல காரணங்கள் சமூகம் காட்டலாம். மாணவர் தனிப்பட்ட ரீதியில் கருத்துக்கள் வெளியிடலாம். ஆசிரியர் ஆயிரம் ஆதாரம் காட்டலாம். ஆனால் இதில் பெரும் பங்கேற்பவர்கள் ஆசிரியர்களே; இது நீண்ட காலமாக எனது அனுபவத்தின் வெளிப்பாடாகவே நான் கருதுகின்றேன்.

இன்று வெளிநாடுகளின் உதவிகள் குவிக்கப்பட்டுள்ள காலம் குறிப்பாக எமது பாடசாலையை எடுத்துக் கொண்டால் கல்வி அமைச்சு, சர்வதேச சிறுவர் அமைப்புக்கள், சமய நிறுவனங்கள், சமூக அபிவிருத்தி நிறுவனங்கள் என்பன முடிந்தவரை உணவு, உடை, பாடசாலை உபகரணங்கள், பாடநூல்கள் அத்தனையும் இலவசமாக கொடுத்து மாணவர் இன்பமாக கற்க வழிகாட்டுகிறது. இதற்கு மத்தியிலும் மாணவர் இடைவிலகல் ஏற்படவே செய்கின்றன. பல மாணவர்கள் 14 வயது வந்து விட்டாலே நாம் இனிப் பெரியவர்கள் என பெற்றோரின் கணிப்புக்கு உள்ளாகி தாமும் உழைத்தால் தான் குடும்பத்தைத் தரமுயர்த்த முடியும் என எண்ணுவது ஒருபுறம். மறுபுறம் நோய்கள், துன்பங்கள், மகிழ்வாக வீட்டில் இருக்க, பக்கத்து வீட்டு தொலைக்காட்சியில் படம் பார்க்க, கடலுக்குச் செல்ல, மண் ஏற்ற என்று நாள் தோறும் பல்லாயிரம் காரணம் காட்டி தமக்குத் தேவையான போதெல்லாம் பாடசாலையிலிருந்து இடைவிலகி பருவகாலப் பறவைகள் போல் இடைக்கிடை வந்து இருப்பிடங்கள் நிரப்பிச் செல்கின்றனர்.

இது இச் சமூகத்தின் சூழ்நிலையாக இருக்கலாம். ஆனால் இதனை வழிப்படுத்தும் தொழில்வாண்மை ஒரு நல்லாசிரியனுக்கு தேவையானதொன்றாகும். நாளைய விருட்சங்களின் வித்துக்கள் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதை நீங்கள் விதைப்பதையும், பராமரிப்பதையும் பொறுத்துத்தான் நாளை அதன் வளர்ச்சியும், பயனும் அமையும். இது தொடர்பாக ஆசிரியர் எப்போதும் விழிப்பாக இருக்க வேண்டும். சூழலுக்கு ஏற்ப மாணவரைக் கற்பிக்கவும் கற்கவும் வழிகாட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். மாணவர் குறைகளையே மனனம் செய்து அவர்கள் மீது அழுத்தக் கூடாது. அவர்களை எம்மால் முடிந்தவரை வழிப்படுத்த வேண்டும். மாணவர் விரும்பும் பாடங்களை முதலில் கற்பித்து இலகுவில் இருந்து கடினப் பகுதிக்குச் செல்லுதல் வேண்டும்.

மாணவருக்கு விளங்கவில்லை என்றால் ஆசிரியராகிய எனக்கு விளங்கப்படுத்தத் தெரியாது என்பதுதான் உண்மை. மாற்று வழி தேடி அவனை வழிப்படுத்த வேண்டும். ஆசிரியர்களில் எத்தனையோ பேர் அதனைச் செய்கிறார்கள். இது ஒவ்வொரு ஆசிரியரும் சிந்திக்க வேண்டிய விடயமாகும்.

மாணவரின் குடும்பச் சூழல் பின்னணியை அறிந்து வைத்திருக்க வேண்டும். அத்துடன் மாணவர்களுக்கு கடுமையான தண்டனை கொடுப்பதும், தவறாக மாணவனின் மனதை வேதனைப்படும்படி பேசுவதும் ஓர் நல் ஆசிரியனுக்கு அழகல்ல. சில மாணவர்கள் நீங்கள் அடித்தால் தான் எனக்கு படிப்பு வருகிறது என்கிறார்கள். அதனை ஊக்குவிப்பு பானமாக கருதுகிறார்கள். இது எப்போது? ஆசிரியர் கணிப்பு இல்லாத போது ஒரு நல்லாசிரியர் சமூகக் கணிப்புகளுக்கும் இடங்கொடுத்தே பணியாற்ற வேண்டும். ஒரு சமூக அங்கத்தவரோ, கல்வி அதிகாரியோ, அதிபரோ அடிக்க வேண்டாம் என்பதற்காக ஒரு ஆசிரியர் தான் செய்த விசுவாசமான கடமையை வேண்டா வெறுப்பாக ஆற்றக் கூடாது. ஆசிரியர் ஒவ்வொருவரும் தன்னைத் தானே சுயமதிப்பீடு செய்ய வேண்டும். நான் இன்று என் கடமைகளை சரியாக செய்கின்றேனா? என்பதை மௌனமாக இருந்து கண்களை மூடி அடிமனதில் ஆழமாகச் சென்று தியானிக்க வேண்டும்.

இவை ஒருபுறமிருக்க புதுவகுப்புக்கு வந்த ஒரு சில தினங்களிலேயோ அல்லது ஒரு வாரத்திலேயோ மாணவனைப் பார்த்து உன்னை இந்த வருடம் இதே வகுப்பில் இறக்கி விடுவேன் என்ற வாசகத்தை பின்தங்கிய பாடசாலை ஆசிரியர்கள் மட்டுமல்ல வளர்ச்சியடைந்த நகர்ப்புற பாடசாலை ஆசிரியர்களும் கூறுகின்றனர்.

இது மாணவனைப் பொறுத்தவரையில் ஏற்படுத்தும் மனத்தாக்கம் அளவிட முடியாது. இந்த வசனங்களை தினமும் கேட்டுக் கேட்டு மன அழுத்தம் ஏற்பட்டு தானாகவே இடைவிலகல் செய்து விடுகின்றான்.

மாணவர், பெற்றோர்கள் அறிவாளிகளாக இருந்தால் மாணவன் துணிந்து பாடசாலை போவான். ஆனால் கிராமங்களில் இதனை எதிர் போடும் சக்தி மாணவரிடம் அற்றுப் போகத் தானே அந்த இடத்தில் இருந்து ஒதுங்கி விடுகின்றான் மாணவன். ஆசிரியர் தவறுகளை அதிபர்கள் ஏற்கனவே தட்டித் திருத்தி விட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். இல்லாவிட்டால் மாணவன் வேறு வழிகளால் அல்லது தானோ அன்றி சமூகத்தின் மூலமோ கேட்க முற்படுவான்.

மாணவர்களின் உரிமைகள் உதாசீனம் செய்யப்படாமல் கல்வி ஊட்டப்பட வேண்டும். சாதாரணமாக வகுப்பறை ஒன்றில் மாணவர்களை எழுமாறாக தெரிந்து எதிர்காலத்தில் என்ன தொழில் பார்க்க விருப்பம் என்று கேட்ட போது ஒருவர் கூட ஆணித்தரமாக "ஆசிரியராக" வருவேன் என்று கூறவில்லை. காரணம் அது ஒரு பொறுப்பு வாய்ந்த தொழில். ஆசிரியர்கள் பலர் சரியாகச் செய்யாததினால் ஏற்பட்ட பொறுப்பு என்று கூறலாம்.

இத்தனையும் ஆராய்ந்த போதும் இதற்கு தீர்வு யாது? ஆசிரியர் எப்போதும் தனது கடமையில் விசுவாசியாக இருக்க வேண்டும். பாடசாலை நேரம் முழுவதையும் கற்றல், கற்பித்தல், மாணவர் ஒழுக்கம், கருத்து வெளியிடல் போன்றவற்றில் உற்சாகத்துடன் பாடுபட வேண்டும். அத்துடன் விடுமுறைகளை பயனுள்ள திட்டமிடல் செயற்பாடாக பயன்படுத்த வேண்டும். லீவுகள் எடுக்கும் போது பிறர் அறிவுறுத்தாமலே பதில் ஒழுங்குகள் மேலதிக கற்பித்தல் மூலம் உங்கள் தொழிலை நேசியுங்கள். பிறருக்கு வகை கூறுவது முக்கியம் இல்லை. உங்களுக்கு நீங்களே வகை கூறப் பழகுங்கள்.

மாணவர்களை அன்பாக அரவணைப்பதும் கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றுவதும் அடிக்கடி மாணவர் குடும்ப நிலைகளையும், மாணவனது தனி மனதை வினாக்கள் தொடுத்தும் உண்மை நிலைகளை உணர்ந்து வழிகாட்டி பின் கற்பியுங்கள் 'இடைவிலகல்' என்ற சொல் இல்லாமலேயே போய்விடும்.

"ஏழை ஒருவனுக்கு அளிக்கும் கல்வியே
உலகில் சிறந்த கொடையாகும்"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tips for protecting your computer from viruses

Mrs. S.J.R. Emiltaine (Teacher)
Science Trained SLTS II

Protecting your computer from viruses and other threats isn't difficult, but you have to be diligent. Here are some actions you can take:

- **Install an antivirus program:** Installing an antivirus program and keeping it up to date can help defend your computer against viruses. Antivirus programs scan for viruses trying to get into your email, operating system, or files. New viruses appear daily, so set your antivirus software to install updates automatically.

- **Don't open email attachments unless you're expecting them:** Many viruses are attached to email messages and will spread as soon as you open the email attachment. It's best not to open any attachment unless it's something you're expecting. for more information, see **When to trust an email message**.

- **Keep your computer updated:** Microsoft releases security updates that can help protect your computer. Make sure that windows receives these updates by turning on windows automatic updating. For more information, See **Turn automatic updating on**.

- **Use a firewall:** Windows firewall (or any other firewall) can help alert you to suspicious activity if a virus or worm attempts to connect to your computer. It can also block viruses worms, and hackers from attempting to download potentially harmful programs to your computer.

- **Use your browser's privacy settings:** Being aware of how websites might use your private information is important to help prevent fraud and identity theft. If you're using Internet Explorer, you can adjust your privacy settings or restore the default settings or restore the default settings whenever you want. For details, see **Change Internet Explorer 9 privacy settings**.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

⇨ **Use a pop - up blocker with your browser:** Pop - up windows are small browser windows that appear on top of the website you're viewing. Although most are created by advertisers, they can also contain malicious or unsafe code. A pop - up blocker can prevent some or all of these windows from appearing.


⇨ The Pop - up blocker feature in Internet Explore is turened on by default. To learn more about changing its settings or turning it on and off, see **Change Internet Explorer 9 privacy settings**.

⇨ **Turn on user Account control (UAC)**: When changes are going to be made to your computer that require administrator - level permission, UAC notifies you and gives you the opportunity to approve the change. UAC can help keep viruses from making unwanted changes. To learn more about turning on UAC and adjusting the settings, see **Turn User Account control in off.**

## எங்கள் வீட்டுப் பூனை

எங்கள் வீட்டுப் பூனை
என் தொப்பியுடன் ஓடியது
தங்கை அதனைக் கண்டாள்
கூவி என்னை அழைத்தாள்!

அண்ணர் ஓடி வந்தார்
அம்மா ஓடி வந்தார்
வீட்டிலிருந்து நாயும்
விரைந்து ஓடி வந்தது!



பூனை இதனைக் கண்டது
தொப்பியைக் கை விட்டது
பயந்து மேசை மேலே
பாய்ந்து ஏறிக் கொண்டது!

செல்வி. ச. லக்ஷிகா
தரம் - 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த மூன்று நாட்கள்...!
# (சிறுகதை)

திரு. K. ரவிதாஸ்

அன்று காலை பத்துமணியிருக்கும். அலுவலகத்திலிருந்து வெளியே வந்த ரமேஸ் மெதுவாக ஒலித்த மணியோசையைக் கேட்டு திரும்பிப்பார்த்த போது “ஐயா, தபால் வந்திருக்கு” எனக் கூறியபடி தபாற்காரன் நீண்ட உறை ஒன்றை நீட்டினான். மத்தியகல்வி அமைச்சிலிருந்து வந்த அந்தகடிதத்தை பரபரப்புடன் பிரித்துப்பார்த்த போது நீண்ட ஏக்கம்!

இருப்பினும் தனது இருப்பிடத்துக்கு அண்மையிலுள்ள பாடசாலை ஒன்றிற்கான, பதவி உயர்வுடனான இடமாற்றக்கடிதம் என்பதனால் அவனது மனது குளிரத்தொடங்கியது.

எட்டுவருடங்களாக பள்ளம், குழி நிறைந்த இருபது கிலோமீற்றர் வீதியைக் கடந்து காலை ஆறு மணிக்குமுன்பே பாடசாலையைச் சென்றடைவதையும் வலயத்தில் சகல வசதிகளையும் கொண்ட முதற்தரபாடசாலை ஒன்றை உருவாக்கிய பெருமையையும் உடையவன், அப்படிப்பட்டவன் என்பதனாலோ என்னவோ தொடர்ந்து நண்பர்களின் தொலைபேசி அழைப்புக்கள் வந்து கொண்டிருந்தன.

அவை வாழ்த்து கூறுபவையாகவும் புதிய பாடசாலைக்கான அழைப்பாகவும் இருந்தது. இவை ஒருபுறமிருக்க.. மறுபுறம் அவனது அன்பு மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றார்கள், பழைய மணவர்கள் புடைசூழ்ந்து “போக வேண்டாம் சேர்” என கண்கலங்கி அழுதுகொண்டிருந்தனர்.

ஒருவாறு சமாளித்து வீட்டுக்குச் சென்ற ரமேஸ் மனைவி பிள்ளைகளுடன் கலந்துரையாடிவிட்டு மறுநாள் காலை அம்மன் கோயிலுக்கு சென்றுவிட்டு புதிய பாடசாலை நோக்கிப் புறப்பட்டான்.

சிறிது நேரத்தில் பாடசாலை வளவினுள் நுழைந்ததும் யாரை முதலில் சந்திக்ககூடாது என நினைத்தானோ? அவரே தென்பட்டு முகத்தை மறுபக்கம் திருப்பிச்செல்வதை அவதானித்தான். வேதனையுடன் அலுவலக வாயிலில் சப்பாத்தை கழற்றிவிட்டு உள்ளே நுழைந்தான்.

“வாங்கோ” ....... “இருங்கோ”..... என கூறிவிட்டு அதிபர் ஏதோ செய்து கொண்டிருந்தார். “என்ன விடயம்” என தெரிந்தும் தெரியாதவர் போல் கேட்க ரமேஸ் தனக்கு வந்த கடிதத்தை நீட்டினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இங்கு இடமில்லையே..." என பதில்கூறியபடி உபதேசம் செய்யத் தொடங்கினார். "இங்கு இப்போதைக்கு ஒருகாடரும் இல்லை. ஆனால் 6-11 க்காக ஒரு காடரை தயார் பண்ணி அதற்காக ஒரு அதிபரையும் சிபார்சு செய்து அனுப்பிட்டம்" என்று தொடர்ந்து அவர் "நீங்களே வேறு ஒரு பாடசாலையை எடுத்துக்கொண்டு போகலாம் தானே..." எனக்கூறிவிட்டு மேலும் தொடர்ந்தார்.

"இங்கு உள்ள பழையமாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச்சங்கம் என்பவற்றில் உள்ளவர்கள் பெரும் சக்தி வாய்ந்தவர்கள் அவர்கள் விரும்பமாட்டார்கள்" என்றார். மௌனம் கலைந்த ரமேஸ் "நான் நிர்வாகத்துடன் இணைந்து நடப்பேன்" எனக்கூற "இங்கு யாரும் ஒத்துழைக்காமல் இருக்கமுடியாது" அதுவும் பதவியை எதிர்பார்த்து யாரும் இங்குவருவதில்லை" என இறுமாப்புடன் கூறியபடி அலுவலக உதவியாளரை அழைத்து பிரதி அதிபருக்கான அழைப்பை விடுத்தார். சிறிது நேரத்தில் வருகைதந்தவர் சாடிக்கு ஏற்ற மூடிபோல் "நாங்கள் வேறு ஒருவரை சிபார்சு செய்து அனுப்பிவிட்டோமே" என்று கூறியபடி அமர்ந்து கொண்டார். அவன் சந்தித்த மூன்று பேருக்கும் அவன் தேவையற்றவனாக இருப்பதை உணர்ந்து கொண்டான்.

சிறந்த ஒரு பழைமை வாய்ந்த மிஷனரியால் நடாத்தப்பட்டு உண்மை, நேர்மை, சத்தியம், திறமை என்பவற்றுக்கு முன்னுரிமை வழங்கி பாதுகாக்கப்பட்ட அப்பாடசாலையில் திறமை அடிப்படையில் மத்திய கல்வி அமைச்சால் நியமிக்கப்பட்ட ஒருவரை ஏற்கமறுத்த தன்மையானது.

- பக்கச் சார்பானதா?
- வரட்டுக் கௌரவமுடையதா?
- அல்லது உள் விடயங்கள் வெளிக்கொண்டு வரப்பட்டுவிடுமே என்ற பயமா?
- சுகபோகமும் இலாபங்களும் இல்லாமல் போய்விடும் என்ற சந்தேகமா?
- பிரதேச, கிராம, நகர, மாவட்ட, வேறுபாடா?

சற்று நேரத்தில் முன்னாள் அதிபருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட பாடசாலை அதிபரின் முகம் மாற்றமடைவதை உணர்ந்து அவன் பதிலுக்காக காத்திருக்க, அவருக்கும் விருப்பமில்லை, என்ற எதிர்பாரத்த பதிலை செவிமடுத்தான். இப்போது நான்காவது நபருக்கும் வேண்டாதவனாகிவிட்டான்.

அன்றைய மிகுதிநேரம் நூலகத்தில் கழிந்தது. அப்போது நூலகப்பொறுப்பாளர் வாங்கிக்கொடுத்த சோடாவை அவனால் மறுக்கமுடியாது. தப்பித்தவறி அதனைக்கண்டு கொண்ட ஆசிரியர் ஒருவர் "இவ்வளவு நாளும் நாங்கள் இருக்கிறோம் எங்களுக்கு ஒரு நாளாவது வாங்கித்தந்தீர்களா?" என கேட்கவும் மறக்கவில்லை. இரண்டாம் நாள் வழமை போன்று பாடசாலைக்குச் சென்று ஒன்று கூடல் வேளையில் ஒரு ஓரமாக நின்று கொண்டிருந்தான் ரமேஸ். அங்கு வந்த உதவிக் கல்விப்பணிப்பாளர் ஒருவர் "நீங்கள் யார்?" என்றார். அவர் எப்போதுமே ரமேசைப்பார்த்து சிரிப்பவர் இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டபோது அவனுக்கு சங்கடமாக இருந்தது. அப்படியானால் ......... இவ்வளவு நாளும் சிரித்தது.....? அவனுக்குப் புரியவில்லை.

ஒன்று கூடல் முடிந்தது. யாரும் அவனைக்கவனிக்கவில்லை. இருக்க இடமில்லை. தாழ்வாரத்தில் நின்று விட்டு நூலகத்திற்குச் சென்றான். காலை 10.00 மணியளவில் தொலைபேசியில் அதிபர் அழைத்தார். " வாங்கோ வெளியே போவோம்".. என்றார். இருவரும் சந்தித்து கட்டிடங்களை பார்வையிட்டுச் செல்லும்போது சிலவாக்கியங்களை அடிக்கடி கூறிக்கொண்டிருந்தார்.

"இது வழமைக்கு மாறானது. நாங்க ஒருவரையும் இடம் காட்டி பதவியில் இருத்துவதில்லை இது தான் முதற்தடவையாக இடம் காட்டுகிறேன்" என்று கூறிக்கொண்டு ஒரு இடத்திற்கு அண்மித்தபோது "இந்த இரண்டு மூன்று வாரங்களில் ஒழுங்குபடுத்தி ஒப்படைக்க வேண்டும்" எனக் கூறினார். அந்த இடம் பிரதான அலுவலகத்திலிருந்து நீண்ட தூரத்தில் இருந்தது. பிரதான அலுவலகத்தைப் பார்க்க முடியாத ஒதுக்கு புறமான இடம் கறையான்களினதும், வெளவாலினதும் எச்சங்கள் நிறைந்து காணப்பட்டன.

அப்போதே ரமேஸ் உணர்ந்தான். தான் ஓரங்கட்டப்பட்டு விட்டதாக. சகிக்க முடியாமல். "பிரதி அதிபர், அல்லது உதவி அதிபர் இருக்குமிடத்தில் இடம் தரமுடியாதா? எனக்கேட்டான். "அது சரிபட்டு வராது" எனக் கூறியபடியே சிறிது தூரம் சென்று தரம் 9-11 பகுதித்தலைவர் இருந்த இடத்தைகாட்டி "இது பொருத்தமா?" எனக்கேட்டார், "எனக்கு முழுமையாக பிடிக்கவில்லை" என்றான்.

மரத்தாலான பழைய உடைந்த கதிரை. முன்னுக்கும் பின்னுக்கும் ஆடியபடி இருந்தது. பிரம்புகள் உடைந்து உள்ளே போயிருந்தது.

முன்னைய தனது பாடசாலையில் எக்ஸிகியூட்டிவ் சுழல் கதிரையில் சுழன்று கொண்டு தொலைபேசி, கணினி, மின்னஞ்சல், பெக்ஸ் இணையத்தளம், பேஸ்புக் போன்ற வசதிகளை ஏற்படுத்திக்கொண்டு 8 வருடகாலம் மகாவித்தியாலயம் ஒன்றில் அதிபராக கடமையாற்றிய ரமேசை பகுதித்தலைவர் பதவியைக்கொடுத்து உடைந்த கதிரையில் அமரச் செய்வதை அவனால் பொறுக்கமுடியுமா? இவ்விடத்திலும் ஓரங்கட்டுதலின் அடுத்தபடி அரங்கேறுவதை உணர்ந்தான்.

சிறிது நேரத்தில் உயர்வகுப்பிற்கான பகுதித் தலைவர் ஒருவர் அதிபரின் தூதுவராக அவனுக்கு மூளைச்சலவை செய்ய அனுப்பிவைக்கப்பட்டார். அவர் கதைத்து சில நிமிடங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன செய்யப்போகிறீர்கள்" எனக்கேட்க அவனே "காலம் பதில் சொல்லும்" என்றான் அவருடைய உரையாடலில் தனக்கு சாதகமான எந்த சமிக்ஞையும் இல்லாது இருந்தமை அவனுக்கு தெரிந்தது. அப்படியானால் .......

திரும்பவும் சிறிது நேரத்தில் அலுவலகத்திலிருந்து அழைப்பு வந்தது. அங்கு சென்றபோது முன்னாள் அதிபருடன் தொடர்புகொண்டு கதைத்து விட்டு கல்வி அமைச்சிற்கு சென்று பார்வையிடுமாறு அனுப்பிவைத்தார். அங்கு சென்ற அவன் வெளியேற்றும் செய்தியை உணர்ந்தான். அப்போதுதான் தொலைபேசியில் கதைத்த கதையை சில நாட்களுக்கு முன்னர் கதைத்ததாக கூறிக்கொண்டு.

இதனை முடித்துக்கொண்டு வலயக்கல்வி அலுவலகத்திற்கு சென்ற அவனை அவனது சித்தப்பா ஆரத்தழுவி கைகொடுத்து பெரும் சிரிப்புடன் கதையைத் தொடர்ந்தார். அப்போது அவனது இடத்திற்கு சிபாரிசு செய்த அந்த அதிபர் வந்து கொண்டிருந்தார். உடனே அவனை விட்டுவிட்டு ஓடி ஒளித்துக்கொண்டார். ஏன் அப்படிச்செய்தார் என்று தெரியவில்லை.

அன்றைய தினம் மாலை கட்டிட திறப்பு விழாவுக்கு அழைப்பின் பேரில் அப்பாடசாலைக்கு சென்றிருந்தான். பெரும் வரவேற்புடன் விருந்தினர்கள் வந்து கொண்டிருந்தனர். ரமேசை யாருமே கவனிக்கவில்லை.

"அருகிலிருந்த பூவரச மரநிழலில் தன்னந்தனியாக அரை மணித்தியாலம் கழிந்தது"

அதிபராக உட்புகுந்தவனை பண்புடன் அழைப்பதற்கு யாருமே தயாராக இருக்கவில்லை. "சரிபார்ப்போம்" என விழா மண்டபத்துக்கு அருகே சென்றான். அங்குகூட ஊரவர்கள் நிறையப்பேர் ஆசிரியர்களாக நின்று கொண்டிருந்தனர். அவர்கள் கூட கதைக்கவோ, சிரிக்கவோ, வரவேற்கவோ இல்லை. அவ்வேளை உதவிக்கல்விப்பணிப்பாளர் ஒருவரின் மனைவி ஒருவர் அன்புடன் வரவேற்று உள்ளே அமரச்செய்தார். ஆடல், பாடல், நூல்வெளியீடு நிகழ்வுகள் என நிறைவேற இரவாகிவிட்டது. உணவு வழங்க ஆயத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அதிபர் கூறிய "பலம் வாய்ந்த சக்திகள்" எனப்பட்டவர்கள் அவனை தழுவி வரவேற்றுக்கொண்டிருந்தனர். அனைவருமே பல்கலைக்கழக நண்பர்கள். இது பற்றி அதிபருக்கும் தெரிந்திருக்கவில்லை. அது மட்டுமன்றி அவர்கூறியவர்களில் சிலருக்கும் அவனுக்கும் இடையில் இன்னும் நீணடகாலமாக வெளிவராத ரகசியங்கள் கூட பொதிந்துகிடப்பது அவருக்கு தெரியுமா?

இந்த நிகழ்வில் கல்வி பணிப்பாளர் பலர் அவனை வாழ்த்தியதுடன் ஆலோசனைகளையும் கூறிச்சென்று கொண்டிருந்தனர். மறுபுறத்தில் ஆசிரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்கள் அரவணைத்து உணவளித்ததுடன் "இஞ்சபாரடா சேர் பிளக் அன்வைற் (Black and white) தொலைபேசி வைத்திருக்கிறார்" என்று கேலி செய்ததுடன் இரவு விருந்து ஏற்பாடு செய்யுமாறு கூறவும் தவறவில்லை. ஈற்றில் நிகழ்ச்சி நிறைவு பெற்றபின் வீட்டிற்குவந்து மூன்று நாட்களும் நடந்த அருவருக்கத்தக்க, மனிதாபிமானமற்ற, பாகுபாடான, சம்பவங்களை கூறியபோது அவனது அன்புமகள் "அப்பா நீங்கள் அந்தப் பாடசாலையிலிருந்து வெளியேறுங்கள்" என்றாள். ரமேஸ்சுக்கு பால் வார்த்தமாதிரி இருந்தது.

மூன்றாவது நாள் பாடசாலை சென்று ஓரமாக நின்று கொண்டிருந்தான் ரமேஸ். அன்றைய தினம் காலைக்கூட்டத்தில் அதிபர் தரத்தில் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்ற செய்தி சொல்லப்பட்டது. ரமேசை வெளியேற்ற முயன்றாலும் அவன் நினைத்தால் ஒழிய வெளியேற்றமுடியாது என்று அறிந்த தலைமை 6-11ற்கான அதிபராக அறிவிக்கவேண்டியதாயிற்று.

இருப்பினும் ஒன்று கூடல் முடிய தாமாகவே பாடசாலையை விட்டு வெளியேறப்போவதாக அதிபரிடம் கூறினான் ரமேஸ். அப்போது இன்முகத்துடன் பெரிய பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்துவிட்டதைப்போல் தேநீர் வாங்க சகல பொக்கற்றுகளையும் தேடி எதுவுமில்லை. நிமிர்ந்து அலுவலக பணியாளரை தேடிக்கொண்டிருந்தார் அதிபர்.

"அப்பா எழும்புங்கோ நேரமாகிவிட்டது என்று அழைக்கும் குரல் கேட்க கண் விழித்த ரமேஸ் காலைத்தேனீருடன் மனைவி அருகில் நிற்பதை உணர்ந்தான்"

"சிங்கத்தின் வாலாக இருப்பதைவிட
கழுதைக்கு தலையாக இருக்கலாம்"

"மதியாதார் வாசல் மிதியாதே"

முற்றும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளமையிற் கல்வி

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பது முதுமொழி. நாம் கற்க வேண்டியவற்றை இளமைப் பருவத்திலேயே கற்க வேண்டும். கற்பதற்குரிய பருவம் இளமைப் பருவமே. இந்த உண்மையை சகலரும் ஏற்றுக் கொள்வர். இளமைப் பருவம் கவலையற்ற பருவம். இப்பருவத்தே நாம் பெற்றுக் கொள்ளும் அறிவும் திறனும் அனுபவமும் நமது எதிர்கால வாழ்வுக்கு அடிக்கற்களாக அமையவல்லன. எனவே தான் பெரியோர்கள் இளமையில் கல் என்று வலியுறுத்துகிறார்கள்.

இளமைப் பருவத்தில் நாம் பெறும் கல்வி கல்லிற் பொறித்த எழுத்துப் போன்று என்றும் அழியாது இருக்கும். முதுமையிற் பெறும் கல்வி பல்வேறு காரணங்களினால் நிலைத்து நிற்காது. இதனையே "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்ற பழமொழியும் நமக்கு நினைவூட்டுகின்றது.

நாம் இளமைப் பருவத்திலேயே கல்வி அறிவினைத் தேடிக்கொள்ள வேண்டும் என்பதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. முக்கியமாக இளமைப் பருவமே கல்வியை மனதில் பதித்துக் கொள்வதற்கு ஏற்ற பருவம் என்று உளவியல் அறிஞர்கள் உரைக்கின்றனர். இப்பருவத்தில் மாணவர்களுக்குத் தொல்லை மிக்க உலக நடையில் சேரும் துன்பங்கள் துயரங்களினால் பாதிப்பு ஏற்படாது.

எல்லையற்ற ஆர்வம் தலைதூக்கி நிற்கும் காலம் இது. இக்காலத்தை நல்ல முறையில் மாணவர்களாகிய நாம் பயன்படுத்திக் கொள்ள முன்வரவேண்டும். இக்கருத்துக்களை நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்பிள்ளை அவர்கள் பசுமரத்தாணி போல் நம் மனதிற் பதியும் வண்ணம் அழகிய பாடலாகத் தந்துள்ளார்.

"கல்வி பெறும் மாணவனாம் பருவம் கண்டீர்
கவலையற்ற களி திறந்த காலமாகும்
தொல்லை மிக்க உலக நடைச் சூழலில் நேரும்
துன்பங்கள் துயரங்கள் தோன்றாக் காலம்
எல்லையற்ற ஆர்வமுள்ள இக்காலந் தான்
எக்கலையும் பயில்வதற்கு ஏற்ற காலம்
நல்வழியில் பயன்படுத்தும் மாணவர்க்கே
நாமகளின் திருவருளின் நலங்கள் கூடும்"

இளமையில் பெறும் கல்வி நம் உள்ளத்தைப் பண்படுத்தவல்லது. நல்லது எது? கெட்டது எது? என்பதை அறிந்து கொள்ள உதவுகிறது. நமது வருங்கால வாழ்வினை வளம் நிறைந்ததாக அமைத்துக் கொள்ளப் பயன்படுகிறது.

செல்வி. வே. வபிஷா
தரம் - 10B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதியதோர் சமுதாயம் உருவாக வித்திடும் ஆசான்கள்

சமுதாயத்தை உருவாக்குவதற்கு வித்திடும் ஆசான்கள் அன்னை திரேசா, விபுலானந்த அடிகள், விவேகானந்தர், திருவள்ளுவர், மகாத்மா காந்தி என்போரைக் குறிப்பிடலாம். இவர்கள் எம் நாட்டை செம்மைப்படுத்துவதற்கு சிறந்த வழிகாட்டியாய் இருந்தனர். இவர்களில் நாம் மகாத்மா காந்தியைக் குறிப்பிடலாம். அவர் ஆங்கிலேயர் கொடுமையில் இருந்து இந்தியரை மீட்டெடுக்க பெரும்பாடுபட்டார். அகிம்சை வழியில் இருந்து நமக்காக நாட்டிற்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்தார். இதனால் அவரை அனைத்து சமுதாயமும் கடவுள் எனப் போற்றினர். இவரை மட்டுமல்ல. அன்னை திரேசாவைக் கூடத் தான் கடவுள் எனப் போற்றினர். 'குழந்தைகளுக்கு தமக்கு ஆதரிக்கப் பெற்றோர்கள் இல்லை' என்ற கவலையை அவர் நிவர்த்தி செய்தார். இவர் உலகின் மாதா எனப் போற்றப்பட்டார். இவர் நாட்டின் நற்பிரஜையாகவும் விளங்கினார். வானவில் வானிற்கு அழகை சேர்க்கின்றது. அது போன்று இவர்கள் அனைவரும் சமுதாயத்திற்கு விடி வெள்ளியாய் விளங்கினர். இவ்வாறான ஆசான்கள் அனைவரும் புதிய சமுதாயத்தை வித்திடச் செய்கின்றனர். இப்பொழுது நாம் திருவள்ளுவரைப் பார்த்தால் இவர் திருக்குறள் எனும் நூலை இயற்றி நாட்டை, மனிதனை, ஏனைய உயிரினங்களை கூட சிந்திக்க வைத்து விட்டார். இவர் எழுதிய குறட்பாக்கள் அனைத்தும் வெவ்வேறு விதமான கருத்துகளையே உணர்த்துகின்றன. இதில் நாட்டை ஆண்ட அரசர்கள் பற்றிக் கூறும் குறளையும் கருத்தையும் பார்த்துச் சிந்திப்போம்.

காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்.

அதாவது காண்பதற்கு எளிமையாய் கடுஞ்சொல் கூறாதவனாய் மன்னன் இருந்தால் அந்த மன்னனுடைய ஆட்சிக்கு உட்பட்ட நாட்டை உலகம் புகழும். அவர் கூறிய தத்துவத்தை விளக்கும் குறளையும் கருத்தையும் செவிமடுப்போம்.

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.

அதாவது குறை கூறுவோரின் சொற்களை செவிகைக்கு நிலையிலும் பொறுக்கின்ற பண்பு உடைய அரசனைக் குடை நிழலில் உலகம் தாங்கும்.

இவர் எழுதிய ஒவ்வொரு குறளும் நல்ல அர்த்தத்தைக் குறிக்கின்றது. இவர் மட்டுமல்ல. விபுலானந்த அடிகளார் கூட பல மொழிகளில் புலமையும் அறிவும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றிருந்தார். தமிழ் பண்டிதராக விளங்கினார். இவர் தமிழில் பாடசாலையில் ஆசிரியராக இருந்து மாணவர்களை நாட்டின் நற்பிரஜையாகவும் மாற்றினார். தமிழை மேன்மைப்படுத்தி எம் நாட்டையும் மேம்படுத்தியுள்ளார். இவர்கள் அனைவரும் புதியதோர் ஆசான்களே ஆகும். "தன் கையே தனக்கு உதவி "அதன் கருத்து எந்த காரியத்திலும் எவருடைய உதவியையும் எதிர்பார்க்கக் கூடாது என்பதை உணர்த்துகின்றது. இதை போன்று வாழ்ந்த எமது சமுதாயத்தை வித்திட்ட ஆசான்களை மதித்து வாழ்வோம். இவர்களைப் போன்று இக்கால கட்டத்தில் வாழ்ந்து புதியதோர் சமுதாயத்தை உருவாக்க வித்திடும் ஆசான்களோடு நாமும் நமது நாட்டை உருவாக்குவோம்.

செல்வி. ஜெயரட்ணம் மோனிஷா
தரம் - 11

# யானை பழிவாங்கியது
# (குட்டிக்கதை)

யானை ஒன்று தினமும் ஆற்றில் குளிப்பதற்காக தையற்கடை ஒன்றின் அருகால் செல்வது வழக்கம். தையற் கடைக்காரனும் யானைக்கு தினமும் சாப்பிடுவதற்கு சுவையான உணவு ஏதாவது கொடுப்பது வழக்கம். ஒரு நாள் தையற் கடைக்காரன் யானையுடன் சேட்டை செய்து விளையாட விரும்பினான். யானைக்கு உணவு கொடுப்பதற்குப் பதிலாக தன்னிடமிருந்த ஊசியால்



யானையின் தோளில் குத்தினான். யானையோ பேசாமல் சென்றது. அது திரும்பி வரும் போது தனது துதிக்கையில் நிறைய அசுத்த சேற்று நீரை சேகரித்துக் கொண்டு வந்தது. தையல் கடையருகே வந்ததும் சேற்று நீரை தையற்காரன் மேல் வாரி அடித்தது. தையற்காரன் நல்ல பாடம் கற்றுக் கொண்டான்.

(வினை விதைத்தவன் வினை அறுப்பான்).

செல்வன். T.பதுஷன்
தரம் - 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைத் துளிகள்...!

திரு. K. றொபேர்ட்தவநேசகுமார்
ஆசிரியர் - கலைப்பட்டதாரி

## விலைவாசி

பார்த்த வேகத்தில் உயர்வதும்
பாமரமக்களைத் திண்டாடச் செய்வதும்
கவலையே!
மக்கள் பாவம் என்பதா
அதிகாரிகளுக்கு இலாபமென்பதா
மறுக்க முடியா உண்மை
மறுப்போர் கூறுவது
பொய்மை!

## பணம்

பணம் பாதாளம் வரையும்
பாயும் அது அன்று!
வேதாளம் கூட
வேண்டிய மட்டும் சேர்க்கும்
இது இன்று!
கையில் இருப்பதை பொறுத்தே
நண்பர் தொகை அமையும்!
நாட்டை ஆக்கத்திற்கும்
அழிவுக்கும் கொண்டு செல்லும்!

## கிறடிட் கார்ட்

பணத்தைப் பெற
இலகுவழி இதனைவிட
இரகசியவழி
ஆனால் நம்பிக்கை இல்லாத
இரகசியவழி
நம்பிக்கெட்டார் என்பதில்
இதுவும் அடக்கமோ?

## பேஸ் புக்

தொலைசாதனம்
உண்மையில் தொல்லை சாதனம்
சோம்பலை உருவாக்கும்
சோம்பல் சாதனம்
நேரத்தை விரயமாக்கும்
வீண் சாதனம்
வெட்டியாய் அமர
வெறும் சாதனம்
நவீன உலகில் மூளையை முடக்கும்!

## ஆயுளுறுதி

காப்புறுதி செய்தவர்
உயிர்போன பின் கிடைக்கும்
உடலுக்குதவாத பணம்
தொகையைப் பெற
உறவென வருவோர் பலர்
உயிருள்ள போது கிடைக்காதது.
உயிர் துறந்த பின் கிடைக்கின்றது.
யாருக்கு இலாபம்?
வெறும் பரிதாபமே!

## வர்த்தகம்

அன்றும் இன்றும்
நாட்டின் முன்னேற்றப் பாதையின்
மைல்கல் வர்த்தகம்
ஏற்ற இறக்கமிருப்பினும்
எக்காலமும் தொடர்வது
இது இல்லையாயின்
நாடு பாடு திண்டாட்டம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன் மாற வேண்டும்

திருமதி. Y. நாகேந்திரன்
ஆசிரியர்

உயிர் என்று ஒன்று உருவாகி
உருமாறி பலவாகி
பூமித் தரைமீது நிலையாகி
மானிடனாய் பெயராகி
இன்னமும் மாற்றம் காண்கின்றான்!

பஞ்ச பூதங்களும் - இவர்
கடவுளாய் இன்று
அவை அனைத்தும் - இவன்
ஆளுகையின் கீழ் இன்று
மாற்றம் நிலையற்றது தான்!

பாதங்கள் தேய பயணித்தவன்
பவனி வருகின்றான்
பால் வண்ண நிலவின் அருகில்
நிலவிலும் இனி பாட்டி
நிஜத்தில் வடை சுடுவார்.

பட்சிகளின் இறக்கைகள்
வாங்கிச் சென்ற செய்திகள்
மணல் துணிக்கைகளின் தயாரிப்பாய்
உள்ளங்கை கணினிகளின் திரைகளில்
வேகமாய் சிறுத்து விட்டது!

தும்பிகளின் பறப்பில்
விமானம் படைத்தவன்
கடல் தாண்டிக் கண்டங்கள் தாவி
விண்ணில் எல்லை தேடுகின்றான்
இவன் கனவுகள் எங்கு முடியுமோ?

வில், அம்பு கடைசிப் பொருளாக்கி
விண்ணைப் பிளக்கும் விசித்திர
விளைவுகளை விளைவித்தான் - இனி
புதிதாய் உலகம் படைத்தது தான்
இவன் மிச்சம்!

பெரிதாய் பயிர் விளைவித்து
சிறிதாய் சில படைத்து
சிந்தனை அத்தனையும் செயலாக்குகின்றான்
நிகழ்காலம் இனிக்கிறது
நிச்சயம் கசக்கும் எதிர்காலம்!

நினைப்பதை நடத்திடும் மானிடன்
இயற்கையில் மாற்றத்தை மறக்கின்றான்
இடை இடையே ஞாபகப்படுத்தியும்
பிடிவாதமாய் மறுக்கிறான் - இவன்
மாறவேண்டும் இயற்கையில் அணைப்போடு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றே நீ மெல்ல வீசு!

மழைக்காலம்
மாலை நேரம்!
குளிர்ந்த காற்று வருகிறது
நோயாளி உடம்பை மூடிக்கொள்கின்றான்
பயனில்லை.
காற்றுக்கு அஞ்சி உலகத்திலே இன்பத்துடன் வாழ முடியாது.
காற்று நம்மீது வீசுக!
அது நம்மை நோயின்றிக் காத்திடுக!
மலைக்காற்று நல்லது.
கடல்காற்று நன்று.
வான்காற்று நன்று
காற்றுத் தேவனை வணங்குவோம்
எவ்விதமான அசுத்தமும் கூடாது
காற்று வருகின்றான்.
காற்றை வழிபடுகின்றோம்.
காற்றே வா மெதுவாக வா
காற்று பெரிய தீயை அழித்துவிடுவான்
வலிய தீயை வளர்ப்பான்
அவன் தோழமை நன்று
அவனை நித்தமும் வாழ்த்துகிறோம்!

செல்வி. து. பதுஷா
தரம் - 9B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரங்களைக் காப்போம்!

ஒரு மரத்தை உண்டாக்க பல நாட்கள் எடுக்கின்றன. ஆனால் அதை ஒருசில நிமிடங்களில் வெட்டிச் சாய்த்து விடமுடியும். நாம் எதையும் உருவாக்க நினைக்க வேண்டுமேயன்றி மரங்களை அழிக்கக் கூடாது. ஆகவே பலருக்கும் பல வகையில் அனைத்து மரங்களும் நன்மைகள் தருகின்றன.

இதை நாம் மனதில் வைத்து மரங்களை அழிக்கக் கூடாது. மரங்கள் உயிருடன் இருக்கும்போது இவை காய், பழம் என்பவற்றை தந்து பலன் தருகின்றன. இலை உணவுக்கும் மருந்துக்குமான பல வழிகளில் பயன்தருகின்றன. இறந்ததும் விறகாக பயன்படுத்தப்படுகின்றன.

மற்றும் இவற்றின் இலைகள், சருகுகள் மண்ணை வளமாக்குகின்றன. மழை பெய்தால் மண்ணரிப்பைத் தடுக்கின்றன. மண்சரிவுகளையும் தடுக்கின்றன. தம்மை அண்டியவர்களுக்கு நிழலையும் கொடுக்கின்றது.

அது மட்டுமன்றி நீர் சூடேறுவதை தடுத்து ஆவியாதலை குறைக்கின்றது. அசுத்த காற்றை உட்கொண்டு தூய்மையாக ஒட்சிசன் வாயுவை வெளிவிடுகின்றது. இந்த மனிதர்கள் மரங்களை வெட்டுகின்றார்கள். இதனால் சூழலில் வரட்சி ஏற்படுகின்றது. வரட்சியின் காரணமாக மழை கிடைக்காமல் விடுகின்றது. விலங்குகள், பறவைகள் என பல்வேறு விலங்குகள் உயிரிழக்கின்றன. ஆகவே நாம் எமது சூழலில் உள்ள பிராணிகளை அழிக்கக்கூடாது. அதே போல் மரங்களையும் அழிக்காது எமது நாட்டை பாதுகாப்போம்.

செல்வி. சு. கிருஷாந்தினி
தரம் - 11B





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பௌதீக அபிவிருத்திச் செயற்பாடுகள் (2010ற்கு பின்னர்...)













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பௌதீக அபிவிருத்திச் செயற்பாடுகள் (2010ற்கு பின்னர்...)

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌதீக அபிவிருத்திச் செயற்பாடுகள் (2010ற்கு பின்னர்...)


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துண்டுப் பிரசுரம்

## டெங்கு நோயைப் பூண்டோடு ஒழிப்போம்!

அன்பார்ந்த பொது மக்களே!

டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்படுவோரின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது. இந்த நிலை மாற வேண்டும். இந்நோயை பூண்டோடு ஒழித்துக்கட்ட பொதுமக்களாகிய உங்களிடம் ஒத்துழைப்பு மிகமிக அவசியமாகும். பின்வரும் விடயங்களில் உங்கள் கவனம் திரும்ப வேண்டும்.

### நீங்கள் செய்ய வேண்டியது என்ன?

☞ கண்ட கண்ட இடங்களில் குப்பை கூழங்களைப் போடுவதைத் தவிர்த்திடுங்கள்!

☞ உங்கள் வீட்டின் சுற்றுப் புறங்களில் சிரட்டைகள், தகரப் பேணிகள், பிளாஸ்டிக் போத்தல்கள், இளநீர்க் கோம்பைகள் போன்றவற்றைக் கண்டால் அவற்றை உடனே அகற்றி விடுங்கள்!

☞ சுற்றுப்புறங்களில் அழுக்குநீர் தேங்கி நிற்பதற்கு இடமளிக்காதீர்கள்!

☞ வடிகால்களில் அழுக்குப் பொருட்கள் சேரவிடாது பார்த்துக் கொள்ளுங்கள்!

☞ சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருந்தால் டெங்குக் காய்ச்சலை உருவாக்கும் நுளம்புகள் உருவாக வழியேற்படாது. நுளம்புகளை முற்றாக ஒழித்திடச் சூழல் சுத்தம் பேணிட உறுதி பூணுங்கள்!

**சுத்தம் சுகம் தரும் என்பதை மறவாதீர்கள்!**

**வருமுன் காப்போம்! நோய்க்கு இடம் கொடேல்.**

செல்வி. ஜெ. லக்ஷிதா

தரம் - 8B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைக்காரனும் பொக்கிஷமும்

ஒரு ஊரில் இரண்டு முதிய நண்பர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒருவனுக்கு இளம் மனைவியும் ஒரு குழந்தையும் இருந்தார்கள். "நீ அதிஷ்டசாலி. உனக்கு வாரிசாக மகன் இருப்பதால் சொத்தை அவனது பெயரில் எழுதிவை." "ஆமாம் நான் அதிஷ்டசாலி தான். நானோ முதியவன். மகனோ சிறியவன். இதனால் பணத்தை அவனால் பாதுகாக்க முடியாது. எனது பணம் முழுவதையும் காட்டில் மறைத்து வைக்க விரும்புகின்றேன்." நல்ல யோசனை அப்படியே செய்". வேலைக்காரன் ராமுவை அழைத்து பொக்கிஷத்தை ஒருவருக்கும் தெரியாமல் ஒரு மரத்தடியில் புதைத்து வைத்தான்.

பின்னர் பொக்கிஷத்தை காட்டுக்கு எடுத்துச் சென்று புதைத்து வைத்தான். "மகன் பெரியவன் ஆனதுடன் புதையல் இருக்கும் இடத்தைக் காட்டு. இதைப்பற்றி வேறு ஒருவரிடமும் சொல்லாதே!" என்றார்.

சிறிது காலத்தின் பின்னர் முதியவர் இறந்து விட்டார். இன்னும் சிறிது காலத்தில் மகனும் வளர்ந்து பெரியவனாகி விட்டான். ஒரு நாள் தகப்பனின் நண்பனைச் சந்தித்தான். "அப்பா பணக்காரனாக இருந்தும் அவரது சொத்து விபரம் ஒன்றும் தெரியவில்லையே! அவர் உனக்காக அதிக பணத்தை வைத்திருந்தார். அதுபற்றி உனக்கு தெரியாதா?" என்றார். "எனக்கு ஒன்றுமே தெரியாது. எங்கேயோ காட்டில் புதைத்து வைத்துள்ளார். உங்கள் வேலைக்காரனிடம் கேட்டுப்பார்" என்றார்.

வேலைக்காரனுக்குத் தெரிந்த விடயங்கள் எனக்குத் தெரியவில்லை என்று மகன் வருத்தப்பட்டான்.

செல்வி. து. பதுஷா
தரம் - 9B





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்திகட்கு ஒரு விழா!


முப்பெரும் தேவிகட்கு முதுபெரும் கலைவிழா
இப்புவியில் எமையாளும் சக்திகட்கு ஒரு விழா
செப்புடைய மாந்தராய் எமை மாற்றிச் சீர்திருத்தும்
ஒப்பரிய பெருவிழா நவராத்திரித் திருவிழா!

உலகாளும் சிவனுக்கு ஓர் சக்தி துர்க்கை
உலகளந்த விஷ்ணுவுக்கும் ஓர் பத்னி லக்குமி
உலகத்து விதியெழுதும் பிரம்மனுக்கோர் கலைவாணி
உடலுக்குள் உயிராக உறைந்திருக்கும் சக்திகளாம்!

கல்விதனில் நாமுயர்ந்து கவின்கலைகள் கற்றிடவும்
செல்வத்தை நாம் சேர்த்து சீர்வழியில் செலவிடவும்
பலவித்தை தமைப் பயின்று பலம் பொருந்தி வாழ்ந்திடவும்
நல்லருளை ஈந்திடுவரிச் சக்திகளை நாம் துதித்தால்!

பண்பாட்டின் சிதறல்களைப் பல்லாண்டுகளாய்ப் பேணும்
பாலர் நாம் பயிலவந்த பாடசாலைகள் தோறும்
புதியது பல புனைவதற்கும் புகழ்பூத்து வாழ்வதற்கும்
புரட்டாதி மாதமதில் பூத்தூவி வாழ்த்துரைப்போம்.

செல்வன். ப. டிஷாத்
தரம் - 5B





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச சிறுவர் தினம்



சிறுவர்கள் சிறப்புக்குரியவர்கள், நாளைய சமுதாயத்தின் ஆணிவேர்கள். மலர்ந்தும் மலராத பாதி மலர்கள். உள்ளத்தால், உடலால், அறிவால், அனுபவங்களால் இன்னும் பக்குவப்படாத மெல்லியர்கள். நாளைய உலகைக் கட்டி எழுப்பவேண்டிய கடமைகளும் கனவுகளும் கொண்ட சின்னச்சின்னச் சிருஷ்டிகர்த்தாக்கள்.

இதனைச் சர்வதேசமும் சரியாகப் புரிந்து கொண்டதன் விளைவு உலகெங்கிலும் இன்று சிறுவர்கள் சிறப்பிக்கப்படுகிறார்கள். சிறுவர் ஒன்றியங்களும் சிறுவர் நிதியங்களும் இன்று நாடளாவிய ரீதியில் இவர்களின் உரிமைகள் பற்றியும், பாதுகாப்புக்கள் பற்றியும், தேவைகள் பற்றியும் பார்த்துப் பார்த்துப் பணியாற்றி வருகின்றன.

"முந்தநாள் பெய்த மழைக்கு நேற்று முளைத்த காளான் நீ" என்றோ "ஏழையாய்ப் பிறந்து விட்டாய் எழுத்தறிவு உனக்கெதற்கு?" என்றோ இனியாரும் இவர்களை ஒதுக்கிவைக்கவோ எடுத்தெறியவோ இயலாது. அனாதைகளேயானாலும் அத்துமீறல்களையும் அசிங்கங்களையும் அடக்குமுறைகளையும் அடிமை வாழ்வையும் தாங்கிக் கொள்ள வேண்டிய தேவை இனிமேல் இவர்களுக்கு இல்லை.

சட்டமும் சர்வதேசமும் இவர்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கின்றன. எட்டாது கல்வி என்று எடுபிடி வேலைக்கு அனுப்ப நினைக்கும் பெற்றோர்களே! கட்டாயக்கல்விமுறை இன்று சட்டமாய் வந்துள்ளது. தெரிந்து கொள்ளுங்கள். சிற்றின்பச் சேஷ்டைகள் சீமையில் இருந்து வருபவர்களால் அல்ல! வேலியே பயிரை மேயும் அபாயமும் அசிங்கமும் இங்கேயே நிகழ்கின்றன! சம்பந்தப்பட்டவர்களே சற்றே சிந்தியுங்கள்.

அன்பான ஆசிரியர்களுக்கும் ஒரு பணிவான வேண்டுகோள். அன்னை மடியில் அரவணைப்பைப் பெறமுடியாத பிஞ்சு உள்ளங்கள் உங்கள் நிழல் நாடி ஏங்கும் வேளைகளில் அவர்களின் உள்ளத்தின் தேவைகளை உற்று நோக்கி உணர்ந்து கொள்ளுங்கள். நட்புடன் அவர்களை நன்றாக வழிநடத்துங்கள். கண்டிப்பு அவசியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். ஆனால் கடும் தண்டனைகள் தவிர்க்கப்படலாமே. உளமுரண்பாடுகளுக்கும் பிறழ்வான நடத்தைகளுக்கும் நீங்களும் ஒரு காரணமாக இருந்துவிடாதீர்கள். கற்றுத் தரும் கடவுளே சற்று நேரம் சிந்தியுங்கள்.

அன்பு நிறை நெஞ்சங்களே! அக்டோபர் முதல் நாள் மட்டுமல்ல. ஆயுள் முழுவதும் சிறுவர்களை ஆதரியுங்கள். அவர்களது ஆற்றல்களை வளர்த்தெடுங்கள். அவர்கள் ஒவ்வொருவருக்குள்ளும் இறைவனைக் காணுங்கள். வையகத்தில் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுங்கள்.

செல்வி. த. கீர்த்தனா
தரம் - 8B

---

## பெருமை!

இயற்கை அன்னை படைப்பில் பெருமை
அன்னைக்கு பிள்ளை புகழை
ஈட்டிக் கொடுப்பதில் பெருமை
ஈன்றோர் மத்தியில் பேச்சுத்
திறமையில் பெருமை
பெற்ற மண்ணிற்கு
கல்வி கற்று உயர்ந்த
விருதை பெறுவதில் பெருமை
கற்ற கல்விச் செல்வத்தை
எல்லோர் மத்தியிலும் கல்வி அறிவை
பரப்புவதில் பெருமை
ஒழுக்கத்திலும் பண்பிலும்
உயர்விருதை பெறுவதில் பெருமை
மொத்தத்தில் பிள்ளை தனை பெற்றதில்
இம் மண்ணிற்கும் நாட்டிற்கும் பெருமை!



செல்வி. சு. கிருஷாந்தினி
தரம் - 11B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வனப்பாதுகாப்பு

உலக உயிரினங்களுள் உன்னதம் நிறைந்தவை காடுகள். அவை ஒவ்வொரு நாட்டினதும் சிறப்பான சூழற்தொகுதிக்கு வனப்பும் வலிமையும் சேர்க்கின்றன. நாமின்று சுமந்து கொண்டிருக்கின்ற புத்தகங்கள் எங்களைச் சுமந்துகொண்டிருக்கும் கதிரைகள் வரைந்து கொண்டிருக்கும் பென்சில்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் கொட்டில்கள் உண்ணும் உணவுகள் அணியும் ஆடைகள் அருந்தும் மருந்துக்கள் எனப் பார்க்குமிடம் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருளைப் போல மரப் பொருட்கள் அனைத்தும் மனித வாழ்வுடன் தொட்டில் முதல் சுடுகாடு வரை பிரிக்கமுடியாத வகையில் பின்னிப்பிணைந்து காணப்படுகின்றன.

இந்த மரங்கள் மனிதனுக்கு மட்டுமா நன்மை செய்கின்றன? வேலியாக இருந்து தம் இனத்தையும் மண் வளத்தையும் பாதுகாக்கின்றன. வாயில்லாப் பிராணிக்கு வாழ்விடமாகவும் வாயுறையாகவும் தம்மை வடிவமைத்துக் கொள்கின்றன. அமுதத்தைத் தேவர்களிடமிருந்து ஆலகாலவிடத்தைத் தாமுண்ட நீலகண்டனைப் போல நச்சுவாயுவான காபனீரொட்சைட்டை உள்ளெடுத்து சுத்த காற்றாம் ஒட்சிசனை எமக்கு சுவாசிக்கத் தருகின்றன.

இத்தனை நன்மைகளையும் தம்மகத்தே கொண்ட மரங்களை நாம் இன்று அபிவிருத்தி என்ற பெயரில் அநியாயமாக அழித்து வருகிறோம். எத்தனை நன்றி மறந்தவர்கள் நாம்?

மரங்கள் இல்லையெனில் மழையில்லை - மண்ணில் நீரில்லை. சுத்தமான காற்றில்லை, சுவாசமில்லை. உண்ண உணவில்லை, உடையில்லை, உறைவிடமுமில்லை. உயிர் வாழ்வு தானும் இல்லை. எத்தனை இழப்புக்கள்! எத்தனை இன்னல்கள்! இத்தனை எமக்கு நிச்சயம் வேண்டுமா?

இல்லை ஒரு போதும் இல்லை. நாம் வாழ வேண்டும். இந்த மண் வளம் மீள வேண்டும். உயிர்ச் சமநிலையும் உணவுச் சமநிலையும் தடுமாறிப் போய் விடாமல் தக்கவைக்கப்பட வேண்டும். விலங்கினங்கள் வீணாகிப் போய்விட்டால் புல்லினங்கள் கூட பொலிவிழந்து போய்விடலாம். மண்சரிவு, மழையின்மை, மலிவாகி மீளாமல் ஓசோன் படலத்தில் ஓட்டை தான் விழாமல் மண் உயிர்கள் அத்தனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியோடு வாழ வேண்டும். இத்தனை வேண்டுகோள்களுக்கும் தலைசாய்த்துத் தலையாட்டும் மரங்களை இனிமேலும் அழித்துவிடாமல் அவற்றைப் பேணிப் பாதுகாப்போம். நமது வாழ்க்கை எது வரைக்கும் தொடர்கிறதோ அதுவரைக்கும் முடித்த பொழுதிலெல்லாம் மரக்கன்றுகளை நாட்டிப் பேணி வளர்ப்போம். நாம் பல உயிர்களை வாழவைப்போம்.

வனங்களைப் பாதுகாப்போம்!

பயன் பலப் பல நாம் பெறுவோம்!

செல்வி. ஞா. நிதர்சனா

தரம் - 8B

## விடுகதைகள்

01. சீருடை இல்லாத காவலாளி, சம்பளம் கேட்காத காவலாளி, அவன் யார்?
    - நாய்

02. நிற்காமல் ஓடுபவனை துரத்திப்பிடிக்க ஆளில்லை. அவன் யார்?
    - ஆறு

03. திறந்தால் முத்துக்கள். மூடினால் பவளங்கள். அவைகள் யாவை?
    - பற்கள்
    - உதடுகள்

04. தன்னிடம் சேருபவனை தன்னைப்போலவே மாற்றுவான். அவன் யார்?
    - பால்

05. தீக்குளித்துச் சாகிறவன் காற்று குளித்தும் சாவான். அவன் யார்?
    - கற்பூரம்

06. சுண்டி விட்டால் இரத்தம் வராது. ஆனால் வெற்றி தோல்வி வரும். அது எது?
    - நாணயம்

செல்வன். க. பிரகாஷ்ராஜ்

தரம் - 10A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சி

முயன்றால் முடியாதது எதுவும் இல்லை
"முயற்சி" என்ற விதையால்
எத்தனை எத்தனையோ சாதனையாளர்கள்!

முயற்சி என்ற ஒன்று இல்லாதிருந்தால்
ஆதிகால மனித வாழ்வே நீடித்திருக்கும்
முயற்சியின் பலனே அறிவியல் வளர்ச்சி
முயற்சியே இன்று விண்வெளிப்பயணம்!

முயன்றால் வானம் கூடி வசப்படும்
முயற்சியே வெற்றியின் முதற் பயிற்சி
முயன்றதினால் உயர்ந்தவர் பூமியில் உண்டு
முயற்சி பற்றி ஐயன் வள்ளுவனும்
ஆன்றோர் பலரும் எடுத்து இயம்பியுள்ளனரே!

நண்பா! உனது விடாமுயற்சியே
உன்னை உயரத்திற்கு இட்டுச்செல்லும்
மறவாதே முயற்சி செய்வதற்கு
முயன்றால் முடியாதது எதுவும் இல்லை.....

**முதலில் சிலவற்றில் வெற்றி காண முயன்று பார்**
**பின்னர் பலவற்றில் வெற்றி காண முயலலாம்.....**

செல்வி. வி. கிருத்திகா
தரம் - $11^{B}$





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுப்பற்று

எம்மைப் பெற்ற தாய்மாரை நாம் நேசிக்கின்றோம். எம்மைப் பெற்றெடுத்து வளர்த்து ஆளாக்குபவர்கள் அவர்களே. ஆனால் நாம் யாவரும் உரிமை பாராட்டி எமக்கெல்லாம் தாய் என்று நேசிக்க ஒரு தாயுள்ளாள். அவள் தாம் நம் அன்னை பூமி "அன்னை மொழியை பொன் எனப்போற்று" என்பது ஓர் அருமந்த பழமொழி. "அன்னை பூமியை பொன்னெனப் போற்று" என்பது நாம் ஆக்கவேண்டிய புதுமொழி. எங்கள் முன்னோர் வாழ்ந்ததும் நாம்வாழ்ந்து கொண்டிருப்பதும் எமது எதிர்கால பரம்பரையினர் வாழப்போவதும் எமது தாய் நாட்டிலே தான். எனவே நம் நாட்டிலே பற்றும் பாசமும் கொள்வது எமக்கு இன்றி அமையாத கடன். நாட்டுப் பற்று, தேசபக்தி என்பதெல்லாம் இதுதான்.

எம் நாட்டின் நலமே எம் நலம். நாடு வளர நாம் வளர்வோம். நாடு நலிய நாமும் நலிவோம். இதனை உணர்ந்து தேசிய உணர்வுடன் நாம் வாழுதல் அவசியம் ஆகும். இனம், மதம், மொழி என்பவற்றால் வேறான பலரும் ஒரு நாட்டில் வாழலாம். ஆனால் நாம் ஒரு தாய் பெற்ற மக்கள் என்ற உணர்வோடு ஒற்றுமையாய் வாழ்வதே நாம் நம் தாய் நாட்டின் மீது பற்றுடையோம் என்பதற்கு சான்று.

"ஊர் இரண்டுப்பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்" என்பர். ஒரு நாட்டில் வாழ்வோர் இரண்டுபட்டு ஒருசாராரோடு மறுசாரார் சண்டை பிடித்துக் குழப்பம் விளைவித்தால் அது நாட்டின் வீழ்ச்சிக்கே வித்திடுவதாகும். உண்மையான நாட்டுப்பற்றுடையவர்கள் எதிர் காலத்திலும் அவ்வாறு நடக்கமாட்டார்கள். தனிப்பட்ட வெறுப்புக்கள், குரோதங்களுக்கான சூழ்நிலைகள் நாடு என்ற வயலில் வளரும் களைகள். அவற்றை அழித்தால் மட்டுமே நாட்டுப்பற்று செழித்து வளரும். நாட்டுப்பற்று உடையவர்கள் இவ்வளர்ச்சிக்கு அயராது பாடுபடல் வேண்டும்.

நாட்டுப்பற்றுக்கு அடிப்படையாய் வேண்டுவது நாட்டில் உள்ள ஒவ்வொருவரும் சுதந்திர உணர்வோடு வாழ்வதாகும். ஒரு சாரார் ஆள்வோராகவும் மறு சாரார் ஆளப்படுவோராகவும் இருந்தால் நாட்டுப்பற்று வளர்வதற்கு வழியில்லாது போய்விடும். நாட்டின் பிரகாசமான எதிர்காலத்தை விரும்பும் தேச பக்தர்கள் இந்நிலை ஏற்படாது விழிப்பாக இருந்து அயராது உழைப்பதும் அவசியமாகும்.

அந்நியராட்சி நிலவும் ஒரு நாட்டில் தேசபக்தர்கள் எத்தகைய தியாகமும் செய்து அடிமைத்தனத்தினை ஒழிக்க முற்படுவர். மகாத்மாகாந்தி, ஜவகர்லால் நேரு முதலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியாகிகள் இந்திய விடுதலை போராட்டத்தின் போது செய்த மாபெரும் தியாகங்கள் நாம் அறிந்தவையே. தைபர் நதியைக் கடந்து இத்தாலியினுள் நுழைய முற்பட்ட பகைவரை நண்பர் சிலரின் துணையோடு எதிர்த்து நின்று பாலத்தை உடைத்துத் தன் நாட்டைக் காத்தான் ஹெரோஷியஸ் என்ற தேசபக்தன். இத்தகைய தியாக சீலரின் வழியே நாமும் பின்பற்றுவோம்

செல்வன். ந. சனுசன்
தரம் - 12



## சிந்திக்க சில வரிகளும் சில நிமிடமும்

- பிறப்பின் கருவறை தாயின் மடி
  சிந்தித்துப்பார்
- ஏழ்மையின் கருவறை ஏழையின் வீடு
  சிந்தித்துப்பார்
- கல்வியின் கருவறை பாடசாலை முற்றம்
  சிந்தித்துப்பார்
- வழிகாட்டலின் கருவறை ஆசிரியரின் அன்பு
  சிந்தித்துப்பார்

செல்வி. ஜெ. டென்ஷிலேற்றா
தரம் - 10B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையும் விவசாயத்துறையும்

திரு. க. ரவீந்திரன் (ஆசிரியர்)
பயிற்றப்பட்ட விவசாயம், BA

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல் பவர்"

மண்ணிலே மலர்ந்த அத்தனை ஜீவராசிகளுக்கும் உணவு அத்தியாவசியத் தேவையானதாகும். இதனடிப்படையில் மனிதராய்ப் பிறந்த அனைவருக்கும் உணவு வழங்கும் செயலை விவசாயியான மனிதனாலே செய்ய முடிகின்றது. அரசனில் இருந்து ஆண்டிவரை உணவு உட்கொண்டு தான் ஆக வேண்டும். உழவன் சேற்றில் கால் வைக்கா விட்டால் ஒருவரும் சோற்றில் கைவைக்கமுடியாது. எனவே தான் உழவன் எமது நாட்டின் முதுகெலும்பாக போற்றப்படுகின்றான்.

நாடோடியாக வாழ்ந்த அன்றைய மனிதன் நதிக்கரையோரங்களிலும் நீர்நிலைக்கருகாமையிலும் தற்காலிகமாக தாம் வாழ் இடத்தை அமைத்து கால் நடை வளர்ப்பிலும் வேட்டையாடுவதிலும். பயிர்செய்வதன் மூலமும் தன் அன்றாடத் தேவையை நிறைவு செய்து கொண்டான். எனவே தான் விவசாயம் என்பதில் கால்நடை வளர்ப்பும், பயிர்ச் செய்கையும் இணைந்தே காணப்படுகின்றது.

நாகரீக வளர்ச்சிகாரணமாக நிலையாக வாழத்தொடங்கிய மனிதன் தனக்கென ஓர் இல்லம், தொழில், என்பவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்தான். தொடர்ந்து மன்னராட்சிக்காலம். மன்னர்கள் மக்களுக்காகவும், மக்கள் மன்னர்க்காகவும் நெறி தவறாது வாழ்ந்தனர். மன்னர் ஆட்சிசிறப்பாகவும் மக்கள் வாழ்க்கை மகிழ்ச்சியாகவும் அமையவேண்டும் என்பதற்காக மன்னர் கள் பல குளங்களையும் கோயில்களையும் கட்டி, கோயிலின் சுற்றாடலில் மக்களை குடியமர்த்தி குளங்களில் இருந்து நீரைப்பெற்று நெற் செய்கைக்கு பயன்படுத்தி, அதன் விளைச்சலில் தமது தேவைகளை நிறைவு செய்ததுடன் கோயிலையும் சிறப்புற பராமரித்துவந்தனர். மன்னர்கள் மக்களுக்கு தேவையான சகல வசதிகளையும் செய்து கொடுத்து நாட்டைச் செழிப்புறச் செய்தனர்.

காலப்போக்கில் மன்னரின் ஆதிக்கத்தில் இருந்து விடுபட்டு சுதந்திர நாடாக மாறிய தாயகம், விவசாயிகளுக்கு மேலும் வசதிகளை ஏற்படுத்தியதுடன் வெளிநாட்டில் இருந்து உணவுப்பொருட்கள் இறக்குமதிக்குத் தடை விதித்து, எமது நாட்டு உற்பத்தியை பெருக்கி, மக்களின் நுகர்வுக்கு பயன்படுத்த வேண்டும் என்பதைக் கட்டாயப்படுத்தியதில் விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் மேலும் சிறப்புற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் விவசாய வளர்ச்சிக்கென தொடர்ந்து வந்த அரசாங்கம் நாட்டின் சகல பாகங்களுக்கும் விவசாய விஸ்தரிப்புக்காக நீர் வழங்கவேண்டும் என்பதற்காக மகாவலி திசை திரும்பும் திட்டங்கள் படிப்படியாக வலயங்களாக அபிவிருத்தி செய்யப்பட்டு பாரிய நீர் வழங்கும் திட்டத்தின் ஊடாக பல குடியிருப்புக்கள், மாதிரிக்கிராமங்கள், எழுச்சிக்கிராமங்கள் போன்ற பல விடயங்களிலும் என்றுமில்லாதவாறு முன்னேற்றம் கண்டுள்ளதை நாம் காண முடிகின்றது.

உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட விஞ்ஞான வளர்ச்சியும், ஆராய்ச்சியும் காரணமாக கைத்தொழில் துறை மேலோங்கிக் காணப்படுவதுடன் பெரும்பாலான மக்கள் கைத்தொழில் துறையில் ஈடுபட்டதுடன், விவசாயத்துறையில் நாட்டம் காட்டாமையால் பெருகி வரும் சனத்தொகைக்கு ஏற்ப விவசாய உற்பத்தியின் அளவு மிகவும் போதாமையால் வெளிநாட்டில் இருந்து உணவுப் பொருட்களுக்கு கை ஏந்தும் நிலை எமது நாட்டிற்கு ஏற்பட்டுள்ளது. பெருக்கல் வேகத்தில் சனத்தொகை அதிகரிப்பும், கூட்டல் வேகத்தில் விவசாய உற்பத்தியளவும் செல்வதால் பட்டினிச்சாவை எதிர் கொள்ள வேண்டிவரும் என்ற "மல்தாஸ்" என்ற பொருளியல் அறிஞரின் வாக்கிற்கமைய அரசு ஏக்கருக்கான விளைச்சலை பெருக்கவேண்டும் என்ற நோக்குடன் நவீன இரசாயன பசளைகள், மருந்துகள், புதிய இனங்கள், குறுகியகாலத்தில் அதிக விளைச்சல் பெறும் வகையில் விவசாய மறுமலர்ச்சியின் மூலம் ஓரளவு உணவு உற்பத்தியில் விவசாயத்துறை முன்னேற்றம் கண்டுள்ளது. அத்துடன் மிக விரைவான செயல் திறன் உள்ள இயந்திர சாதனங்களும் விவசாய வளர்ச்சியில் பெரும் பங்களிப்புச் செய்வதைக் காணமுடிகின்றது.

இது மட்டுமன்றி எமது நாட்டில் விவசாயம் பற்றிய கருத்தையும் நாட்டத்தையும் அதன் தார்ப்பரியத்தையும் விளங்கிக்கொள்ளும் வகையிலும், எதிர் கால சிந்தனையோடும் எமது அரசு பாடசாலைக் கல்வியில் மாணவர்களுக்கு தொழில் சார்கல்வியினூடாக விவசாய பாடத்தைக் கற்பதற்கும் மற்றும் விவசாய பாடசாலைகள், பயிற்சி நிலையங்கள் போன்ற பல்வேறு வழிகளிலும் விவசாயம் பற்றிய அறிவையும் விளக்கத்தையும் எதிர்கால சமுதாயத்தின் மத்தியில் பரப்பி வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

எனவே எமது நாட்டு விவசாயத்துறையில் பெருந்தோட்ட விவசாயமும், கிராமிய விவசாயமும், மக்களின் தொழில் வாய்ப்பும், போசணை மட்ட அதிகரிப்புக்கும் உணவு வழங்கவும் இலங்கையின் கணிசமான வருமானத்தில் பங்களிப்பு செய்தும் பெரும் பங்காற்றி வருவதை நாம் வரலாற்று ரீதியாக கண்டு கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய நாடுகள் சபையும் அதன் செயற்பாடுகளும்

திரு. அ. அதிஸ்டலிங்கம்
ஆசிரியர் - கலைமாணி பட்டதாரி

உலக நாடுகளிடையே ஒற்றுமையும் நட்புறவினையும் ஏற்படுத்தவும் மக்களை யுத்த அபாயத்திலிருந்தும் பயப்பீதியில் இருந்தும் பாதுகாக்கவும் ஓர் சர்வதேச அமைப்பு தேவை என்று கருதி சர்வதேச சங்கம் முதலாம் உலக யுத்தத்தை தொடர்ந்து 1920ல் தோற்றுவிக்கப்பட்டது. உலக சமாதானத்தைப் பேணவும் சமாதானத்தைப் பேணுவதற்காக ஏற்படுத்தப்பட்ட சர்வதேச சங்கம் இரண்டாம் உலக யுத்தம் ஏற்படுவதைத் தடுக்க தவறி விட்டது. இரண்டாம் உலக யுத்தம் உலகில் பெரும் பேரழிவுகளை ஏற்படுத்தியது. இத்தகைய பேரழிவுகள் மீண்டும் ஒருமுறை ஏற்படாது தடுப்பதற்கு சர்வதேச சங்கத்தை விட சக்தியுள்ள ஒரு அமைப்பு தேவையென்று கருதி சர்வதேச சமூகம் செயற்பட்டதன் விளைவாக ஸ்தாபிக்கப்பட்டதே ஐக்கிய நாடுகள் சபை ஆகும்.

இவ்வாறு தோற்றவிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபை தன் பொறுப்புக்களையும் கடமைகளையும் திறம்பட செய்வதற்குப் பின்வரும் அமைப்புக்களை உருவாக்கியுள்ளன.

- பொதுச் சபை
- பாதுகாப்புச் சபை
- பொருளாதார சமூக சபை
- பொறுப்பாண்மைச் சபை
- சர்வதேச நீதிமன்றம்
- செயலகம்

**பொதுச்சபை:-**

ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் வகிக்கும் உறுப்பு நாடுகள் எல்லாம் ஒன்றுகூடும் சபையாகும். இச்சபையானது புதிய பிரச்சினைகள் உருவாகும் காலத்து அதனை தீர்த்து வைக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்து வைக்கும். அபிவிருத்தித் திட்டங்கள், இன ஒதுக்கலுக்கு எதிரான இயக்கங்கள், கடல்கள், விண்வெளி போன்ற உலகளாவிய விடயங்கள் மீதான ஒப்பந்தங்களும் மற்றும் உடன்பாடுகளும், பேச்சு வார்த்தைகள் என்பனவும் இதனுள் உள்ளடங்கும். இச்சபை வருடத்திற்கு ஒரு முறை கூடுகின்றது. அங்கத்துவ நாடுகள் சபைக்கு ஐந்து பிரதிநிதிகள் வரை அனுப்பலாம். ஆனால் ஒரு நாட்டுக்கு ஒரு வாக்கு மட்டுமே உண்டு. முக்கிய தீர்மானங்களை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குத் தேவை. உலக அமைதி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானம், படைக்குறைப்பு பற்றி விவாதிக்க அறிவுரை கூற இச்சபைக்கு உரிமை உண்டு. ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக்காரியதரிசியை இச்சபை நியமிக்கிறது. இச்சபைக்கு விவாதம் செய்யும் உரிமையுண்டு. ஆனால் சட்டமியற்றும் அதிகாரம் கிடையாது.

**பாதுகாப்புச் சபை:-**

பதினொரு உறுப்பினரைக் கொண்டது. இதில் அமெரிக்கா, ரஷ்யா, பிரித்தானியா, பிரான்ஸ், சீனா ஆகிய ஐந்து நாடுகளுக்கு நிரந்தர அங்கத்துவம் உண்டு. இந்த நாடுகளில் ஒன்று மறுத்தாலும் எந்த நடவடிக்கையும் நடைமுறைப்படுத்த முடியாது. இது மறுப்பாணை (Veto) எனப்படும். இதை விட ஆறு நிரந்தரமற்ற அங்கத்துவ நாடுகளை இரண்டு வருடத்திற்கு ஒரு முறை பொதுச்சபை தெரிவு செய்கிறது.

**பொருளாதார சமூக சபை:-**

பொருளாதார சமூக சபையானது பொதுச்சபையால் தேர்ந்தெடுக்கப்படும் 18 உறுப்பு நாடுகளைக் கொண்டது. இச்சபையின் ஒவ்வொரு உறுப்பு நாட்டிற்கும் ஒரு வாக்கு உண்டு.

இச்சபை பல துணை அமைப்புக்களை கொண்டுள்ளது.

- சர்வதேச அணுசக்தி நிறுவனம் (IAEA)
- சர்வதேச தொழில் நிறுவனம் (ILO)
- உணவு விவசாய நிறுவனம் (FAO)
- ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான கலாசார நிறுவனம் (UNESCO)
- உலக சுகாதார நிறுவனம் (WHO)
- புனரமைப்புக்கும் அபிவிருத்திக்குமான அனைத்துலக வங்கி (உலக வங்கி)
- சர்வதேச குடியியல் விமானம் போக்குவரத்து நிறுவனம் (ICAO)
- சர்வதேச அஞ்சல் நிறுவனம் (IPO)
- சர்வதேச தொலைத்தொடர்பு நிறுவனம் (ITO)
- உலக வளிமண்டல நிறுவனம் (WMO)
- அரசாங்கங்களுக்கிடையிலான கடலோர கலந்துரையாடல் நிறுவனம் (IMCO)
- ஐக்கிய நாடுகள் கைத்தொழில் நிறுவனம் (UNIDO)
- வர்த்தகம் அபிவிருத்தி மீதான ஐக்கிய நாடுகள் மாநாடு (UNCTAD)
- அமெரிக்காவுக்கிடையிலான அபிவிருத்தி வங்கி (AIDB)
- ஆபிரிக்க அபிவிருத்தி வங்கி (ASDB)
- சர்வதேச நிதி நிறுவனம் (IMF)
- சர்வதேச அகதிகள் நிறுவனம் (IRO)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொறுப்பாண்மைச் சபை:-**

இச்சபையின் முக்கிய பணி இரண்டாம் உலகமகா யுத்தத்தில் தோல்வியடைந்த நாடுகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட பிரதேசங்களினதும், ஐக்கிய நாடுகள் சபையின் பொறுப்பில் விடப்பட்ட சுயாட்சி பெறாத நாடுகளில் வாழும் மக்களினதும் சமூக பொருளாதார நலன்களை கவனிப்பதாகும். பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்துவம் வகிக்கும் ஐந்து வல்லரசுகளும் இப்பொறுப்பாண்மைச் சபையில் அங்கத்துவம் வகிக்கின்றன.

**சர்வதேச நீதிமன்றம்:-**

பதினைந்து நீதிபதிகளைக் கொண்டது. ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளால் கொண்டுவரப்படும் எந்த வழக்கையும் விசாரித்து தீர்ப்புக் கூறும் அதிகாரமுடையது. இந்த நீதிமன்றத்தின் தீர்ப்புக்களையும் அதிகாரத்தையும் அங்கத்துவ நாடுகள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கட்டுப்பாடு கிடையாது. ஐக்கிய நாடுகளின் அங்கத்துவ நாடுகள் அனைத்தும் தாமாகவே நியதிச் சட்டத்திற்கு உட்படுகின்றமையால் எல்லா நாடுகளும் இந்நீதிமன்றத்தினை பயன்படுத்திக் கொள்ளலாம்.

**செயலகம்:-**

சகல நிர்வாக விடயங்களையும் பொதுச் செயலாளரின் மேற்பார்வையின் கீழ் செயற்படும் செயலகம் செய்து வருகிறது. பாதுகாப்புச் சபையின் சம்மதத்துடன் பொதுச் சபை பொதுச் செயலாளரை நியமிக்கிறது. இவர் முக்கிய நிர்வாக உத்தியோகத்தர் ஆவார். மூன்று ஆண்டுகளுக்கு பதவி வகிப்பார். ஐக்கிய நாடுகளின் பணிகள் பற்றிய ஆண்டறிக்கையை ஒவ்வொரு வருடமும் இவர் பொதுச்சபையில் சமர்ப்பிப்பார்.

இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபை பல அமைப்புக்களை உருவாக்கி அதன் செயற்பாடுகளை திறம்பட செயற்படுத்தி வருகிறது. இவ்வமைப்புக்கள் உருவாக்கப்பட்டதற்கு அடிப்படையான நோக்கங்கள் அதன் அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ளது.

- ☞ உலக நாடுகளிடையே ஏற்படும் சச்சரவுகளையும் சண்டைகளையும் சமாதான முறையிலும் கூட்டு முயற்சியாலும் தீர்த்து உலகில் சமாதானமும் பாதுகாப்பும் நிலவச் செய்தல்.
- ☞ உலக நாடுகளின் பொருளாதார, சமூக, பண்பாட்டு மனிதத்துவ பிரச்சினைகள் தொடர்பாக ஏற்படும் சச்சரவுகளை தீர்த்தும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தும் நாடுகளுக்கிடையில் ஒத்துழைப்பை வளர்த்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நோக்கங்களுக்காக ஐக்கிய நாடுகள் சபை செயற்படும் போது அது சில விதிகளை பின்பற்றுதல் வேண்டும். அதனுடைய உறுப்பு நாடுகள் யாவரும் இறைமையும் சமத்துவமும் உடையவர்கள். சபை பட்டயத்தின் படி தாம் ஏற்றுக் கொண்ட கடமைகளை முழு மனதுடன் நிறைவேற்றுதல் வேண்டும். அவர்கள் சர்வதேச தகராறுகளை அமைதியான முறையில் தீர்த்தல் வேண்டும். உறுப்பு நாடுகளின் ஐக்கிய நாடுகள் சபை பட்டயத்தின் படி எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் எல்லாவித உதவியும் அளித்தலும் சபை எந்த நாட்டிற்கு எதிராக தடுப்பு நடவடிக்கை எடுக்கிறதோ அந்த நாட்டுக்கு எந்த விதமான உதவியும் அளிக்காமலிருத்தலும் வேண்டும். ஐக்கிய நாடுகள் சபை எந்த நாட்டினுடைய உயர் அதிகார எல்லைக்குட்பட்ட துறைகளிலும் தலையிடுதலாகாது. இவ்வகையான அடிப்படைக் கருத்துக்களை மையமாகக் கொண்டு நோக்கங்கள் நிறைவேற்றப்பட வேண்டும்.

இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபையானது பல பொறுப்புக்களை கொண்டு காணப்படுகின்ற தற்காலத்தில் வலுவிழந்து வருகிறது என்று கூறப்படுகின்றது. ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்ட பின் உலகில் 150 யுத்த நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளன. இதில் 43 பெரும் அழிவுகளை ஏற்படுத்தி உள்ளன. இந்த அடிப்படையில் நோக்கின் 1945ம் ஆண்டிலிருந்து மூன்றாம் உலகப் போர் நடந்து கொண்டிருப்பதாக பேராசிரியர் அந்ரே குந்தர் பிராங் "மூன்றாம் உலகப் போர்" என்ற தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வமைப்பு மனித குலத்தின் நம்பிக்கை நட்சத்திரம், அமைதி ஆயுதக்குறைப்பு, சூழல் பாதுகாப்பு, அபிவிருத்தி, நிதி, மனித உரிமைகள், ஏழ்மைக்கு எதிராக செயற்படல், இனசமத்துவம், பெண்களின் சுதந்திரம், குழந்தைகள், வலது குறைந்தோருக்கான பாதுகாப்பு போன்ற விடயங்களில் காத்திரமான பங்களிப்பை செய்து வருகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் நிகழ்ச்சித் திட்டம் மூலம் பல நாடுகளும் பலவிதமான உதவிகளை பெற்றுக் கொள்கின்றன. புனர்நிர்மாண நடவடிக்கைகள், பட்டினிப் பிரச்சினை, கொள்ளை நோய்களை கட்டுப்படுத்தல், இயற்கை அனர்த்தங்களின் போது மேற்கொள்ளப்படும் நிறுவனப் பணிகள், போரினால் பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாத்தல் என்பன இதன் முக்கிய பணிகளாகும். இன்று ஆபிரிக்காவில் உலக சுகாதார நிறுவனமும், உலக உணவு விவசாய தாபனமும் வகிக்கும் பங்கு குறிப்பிடத்தக்கது ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பல்வேறு பணிகளை ஆற்றிவரும் ஐக்கிய நாடுகள் சபை உலக நாடுகளுக்கு எல்லாம் சமத்துவமுடைய அமைப்பு என்று முற்று முழுதாக கூற முடியாத அளவுக்கு தனது நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. உலக வல்லரசான அமெரிக்க ஐக்கிய நாடுகள் சபையை தனது செல்லப் பிள்ளையாக பயன்படுத்துகிறது. ஐக்கிய நாடுகள் சபை ஐக்கிய அமெரிக்காவைக் கட்டுப்படுத்த முடியாது அதன் ஆணையின் கீழ் செயற்பட்டு வருகிறது. இதற்கு சிறந்த உதாரணம் அமெரிக்கா, ஈராக், லிபியா போன்ற நாடுகள் மீது மேற்கொண்ட யுத்தத்தினைக் கூறலாம். தற்போதைய புதிய சர்வதேச ஒழுங்கிற்கு ஏற்ற வகையில் பாதுகாப்பு சபை என்ற அமைப்பு சீர்திருத்தப்பட வேண்டியஒன்றாக காணப்படுகிறது.

---

# விடுகதைகளும் விடைகளும்

01. மஞ்சள் உடை போர்த்தவன் குஞ்சர் கடையில் தூக்கினான். அவன் யார்?
   - வாழைப்பழம்

02. என்னைப் போன்றவன் என்னைத் தொடர்வான். காலையில் நீண்டவன் மதியம் சுருங்குவான். அவன் யார்?
   - நிழல்

03. ஊதினேன். வயிறு வீங்கினான். வெடித்தான். அவன் யார்?
   - பலூன்

04. காலையில் எழுவான். மாலையில் விழுவான். ஒளி வீசி உலகை ஒளிர்விப்பான். அவன் யார்?
   - சூரியன்

05. பற்கள் இருக்கும் கடிக்காது. அது என்ன?
   - சீப்பு

06. தலையைச் சீவினால் தாகம் தீர்ப்பான். அவன் யார்?
   - இளநீர்

செல்வி. S. சஞ்ஜீவினி
தரம் - 4A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Grade - 5 Scholarship Results
# 2008 - 2015





| | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|---|---|---|
| ■ Sat for the exam | 49 | 64 | 61 | 58 | 37 | 54 | 56 | 51 |
| ▨ pass percentage (Over 70 Marks) | 36.73469388 | 62.5 | 73.7704918 | 72.4137931 | 83.78378378 | 72.22222222 | 76.78571429 | 74.50980392 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# O/L Results Analyais
# 2009 - 2014





| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|---|
| SAT FOR THE EXAM | 62 | 63 | 52 | 55 | 43 | 31 |
| PASS PERCENTAGE | 22.5806451 | 57.142857 | 46.1538461 | 25.454545 | 62.790697 | 670.9677419 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A/L Results Analysis
# 2012 - 2015




| | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|
| ■ Sat for the exam | 16 | 22 | 12 | 7 |
| ▒ Pass Percentage | 56.25 | 68.18181818 | 75 | 100 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறைரீதியாக வலயமட்டத்தில் பரிசு பெறுவோர் விபரம்- 2014, 2015

| இல | பெயர் | ஆண்டு | நிலை | தரம் | தரம் | விபரம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | ர. முகேஷ் | 2015 | 3 | 1 | திருக்குறள் | மனனம் |
| 02 | உ. சேனுஜன் | 2015 | 3 | 2 | தமிழ்த்தினம் | வாசிப்பு |
| 03 | சு.லிந்துஜன் | 2015 | 4 | 1<br><br>3 | தமிழ்த்தினம்<br>துரித கணிதச் செய்கை<br>திருக்குறள் | உறுப்பெழுத்து<br>கணிதச்செய்கை<br>மனனம் |
| 04 | ஜெ.யதுசன் | 2015 | 4 | 3 | சித்திரப்போட்டி | வரைதல் |
| 05 | உ. புவனப்பிரியா | 2014<br>2015<br>2015 | 5 | 3 | தமிழ்த்தினம்<br><br>ஆங்கில தினம் | வாசிப்பு<br>உறுப்பெழுத்து<br>உறுப்பெழுத்து |
| 06 | சு. சாய்மிருதிகா | 2014<br>2015 | 5 | 2 | தமிழ்த்தினம் | பேச்சு<br>வாசிப்பு |
| 07 | வி. நிதுர்ஷிகா | 2014<br><br>2015 | 6 | 3<br><br>2 | துரித கணிதச் செய்கை<br>தமிழ்த்தினம்<br>ஆங்கில தினம் | கணிதச்செய்கை<br>கட்டுரை<br>Creative writing |
| 08 | இ. கிறிஸ்டினா | 2015 | 6 | | சமூகவிஞ்ஞானம் | வினா விடை |
| 09 | ஞா.நிதர்சனா | 2015<br>2015 | 7 | 2<br>3 | ஆங்கில தினம்<br>சமூகவிஞ்ஞானம் | dictation<br>வினா விடை |
| 10 | வே. தனுஷா | 2015 | 7 | 2 | தமிழ்மொழித்தினம் | பேச்சு |
| 11 | ச.காவிந்தபிரசன்னா | 2014<br>2015 | 8 | 3 | ஆங்கில தினம் | Dictation<br>Creative writing |
| 12 | ச. திவ்வியா | 2015 | 8 | 2<br>3 | விளையாட்டுப்போட்டி<br>ஆங்கிலதினம்<br>dictation | குண்டு போடுதல்<br>Recitation. |
| 13 | யோ. ஜஸ்ரிலா மேரி | 2015 | 8 | 2 | ஆங்கிலதினம் | Recitation |
| 14 | செ. ஹெய்மகாந் | 2015 | 9 | 4 | அனர்த்த முகாமைத்துவம் | கட்டுரை |
| 15 | பா. டிசாந்தினி | 2015 | 9 | 3 | விளையாட்டுப் போட்டி | 400 M |
| 16 | இ. லக்ஷனா | 2015 | | 1 | தமிழ்த்தினப்போட்டி | இலக்கணம் |
| 17 | பு. கீர்த்திகா | 2015 | | 1 | தமிழ்த்தினப்போட்டி | கட்டுரை |
| 18 | மோ. பிரதீபா | 2015 | 9 | 1 | ஆங்கிலதினம் | Recitation |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | பெயர் | ஆண்டு | நிலை | தரம் | தரம் | விபரம் |
|---|---|---|---|---|---|---|
| 19 | செள. சேலக்ஷிகா | 2014<br>2015<br>2015 | 10 | 1 | சமூகவிஞ்ஞானம்,<br>அனர்த்தமுகாமைத்துவம்<br>ஆங்கிலதினம் | வினா விடை<br>கட்டுரை<br>Recitation |
| 20 | க.ரீத்திக்கா | 2015 | 10 | 3 | சமூகவிஞ்ஞானம் | வினா விடை |
| 21 | யோ. கிறிஸ்டிலா | 2015 | 10 | 3 | தமிழ்மொழி தினம் | தனிநடனம் |
| 22 | அ.யோனிசா | 2014 | 10 | 3 | ஆங்கிலதினம் | copywriting |
| 23 | செள. கனேசிகா | 2014<br>2015<br><br>2014 | 11<br>11 | 2<br><br><br>3 | பொதுஅறிவு<br>அனர்த்த முகாமைத்துவம்<br>ஆங்கிலதினம்<br>சமூக விஞ்ஞானம் | வினா விடை<br>கட்டுரை<br>Recitation<br>வினா விடை |
| 24 | பே. வினோஜன் | 2014<br>2015 | 11 | 1 | ஆங்கிலதினம்<br>ஆங்கிலதினம் | Recitation<br>Recitation |
| 25 | செள. விதுர்ஷிகா | 2014 | 11 | 1 | பிரதேசசபை போட்டி | கவிதை |
| 26 | உ.சாம்கிவிஷன் | 2014 | 11 | 1 | புத்தாக்கப் போட்டி | விஞ்ஞான<br>கண்டுபிடிப்பு (குழு) |
| 27 | செ.மேவின்ஜுட் | 2014 | 11 | 1 | | விஞ்ஞான<br>கண்டுபிடிப்பு (குழு) |
| 28 | ரெ.அஜித்குமார் | 2014 | 11 | 1 | | விஞ்ஞான<br>கண்டுபிடிப்பு (குழு) |
| 29 | வி.சிவஜதுர்சனா | 2014 | 11 | 1 | | விஞ்ஞான<br>கண்டுபிடிப்பு (குழு) |
| 30 | வி. டினுஷா | 2014 | A/L | 2 | விளையாட்டுப் போட்டி | உயரம் பாய்தல் |
| 32 | ம. நிஷாந்தினி | 2014 | A/L | 1<br>3 | விளையாட்டுப் போட்டி | குண்டு போடுதல்<br>ஈட்டி எறிதல் |
| 33 | க. நாகேஸ்வரி | 2014 | A/L | 2<br>3 | விளையாட்டுப் போட்டி | பரிதி வட்டம்<br>குண்டு போடுதல் |
| 34 | அ. கிஷாந் | 2014 | SP.UN | 1 | அரசகலைவிழா | சித்திரம் |
| 35 | சி. தனுஷா | 2014 | | 2 | தமிழ்தினப்போட்டி | சிறுகதையாக்கம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட மட்டத்தில் பரிசு பெறுவோர் விபரம் - 2014, 2015

| இல | பெயர் | ஆண்டு | நிலை | தரம் | தரம் | விபரம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | செள. சேலக்ஷிகா | 2014 | 10 | 1 | சமூகவிஞ்ஞானம், | வினா விடை |
| 02 | செள. கனேசிகா | 2014 | 11 | 1<br>2 | சமூகவிஞ்ஞானம்,<br>சமூகவிஞ்ஞானம், | (5001 - 1000)<br>வினா விடை |
| 03 | செள. விதுர்ஷிகா | 2015 | 12 | 1 | பிதேச சபை போட்டிகள்- | கவிதை, பேச்சு |
| 04 | அ. கிஷாந் | 2014 | SP.UN | 1 | அரசகலைவிழா | சித்திரம் |
| 05 | இ.அபர்ணா | 2010 | SP.UN | 1 | உள்ளூராட்சிமன்றம் | பாட்டு |

# மாகாணம் மட்டத்தில் பரிசு பெறுவோர் விபரம் - 2014, 2015

| இல | பெயர் | ஆண்டு | நிலை | தரம் | தரம் | விபரம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | அ. கிஷாந் | 2014 | SP.UN | 1 | அரசகலைவிழா | சித்திரம் |
| 02 | அ. கிகாஷன் | 2015 | 2 | 2 | அறநெறி | பேச்சு |
| 03 | செள. சேலக்ஷிகா | 2014 | 10 | 2 | சமூகவிஞ்ஞானம் | (5001 - 1000) |
| 04 | செள. கனேசிகா | 2014 | 11 | 1<br>2 | சமூக விஞ்ஞானம்<br>சமூக விஞ்ஞானம் | (5001 - 1000)<br>வினா விடை |
| 05 | செள. விதுர்ஷிகா | 2014 | 12 | 2 | அறநெறி | பொது அறிவு |
| 06 | ம. நிஷாந்தினி | 2014 | 13 | 3 | விளையாட்டுப் போட்டி | குண்டு போடுதல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மட்டத்தில் பரிசு பெறுவோர் விபரம்
# 2014, 2015

| இல | பெயர் | ஆண்டு | நிலை | தரம் | தரம் | விபரம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | அ. கிஹாஷன் | 2015 | 2 | 2 | அறநெறி | பேச்சு |
| 02 | செள. சேலக்ஷிகா | 2014 | 10 | 2 | சமூகவிஞ்ஞானம், | (5001 - 1000) |
| 03 | செள. கனேசிகா | 2014 | 11 | 1<br>2 | சமூக விஞ்ஞானம்<br>சமூக விஞ்ஞானம் | (5001 - 1000)<br>வினா விடை |
| 04 | அ. கிஷாந் | 2014 | SP.UN | 2 | அரச கலைவிழா | சித்திரம் |
| 05 | செள. விதுர்ஷிகா | 2014 | 12 | 2 | அறநெறி<br>சுவாமி விவேகானந்தர் விழா | பொது அறிவு<br>பொன்மொழிகள்<br>மனனம் |
| 06 | ம. நாமிகா | 2014 | 7 | 1 | சுவாமி விவேகானந்தர் விழா | பொன்மொழிகள்<br>மனனம் |
| 07 | ச. விசாலினி | 2014 | 7 | 2 | சுவாமி விவேகானந்தர் விழா | பொன்மொழிகள்<br>மனனம் |
| 08 | வி. நிதுர்சிகா | 2014 | 6 | 3 | சுவாமி விவேகானந்தர் விழா | பொன்மொழிகள்<br>மனனம் |
| 09 | வ. சிவசாந் | 2014 | 11 | 1 | சுவாமி விவேகானந்தர் விழா | பொன்மொழிகள்<br>மனனம் |
| 10 | ச. மதிவதனி | 2014 | 8 | 2 | சுவாமி விவேகானந்தர் விழா | பொன்மொழிகள்<br>மனனம் |
| 11 | க. ரீத்திகா | 2014 | 10 | 3 | சுவாமி விவேகானந்தர் விழா | பொன்மொழிகள்<br>மனனம் |
| 12 | இ. லக்ஷனா | 2014 | 13 | 2 | சுவாமி விவேகானந்தர் விழா | பொன்மொழிகள்<br>மனனம் |
| 13 | செ. டினோஜினி | 2014 | 13 | 3 | சுவாமி விவேகானந்தர் விழா | பொன்மொழிகள்<br>மனனம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப் பரிசில் - 2014 / 2015

| இல | பெயர் | தரம் | புள்ளி |
|---|---|---|---|
| 01 | ஜெ.டெமிஸ்ரன் | 5 | 175 |
| 02 | சு. டில்ஷாந் | 5 | 167 |
| 03 | ச. டர்சன் | 5 | 166 |
| 04 | வி.நிதுர்ஷிகா | 5 | 164 |
| 05 | யே. அருண்தாஸ் | 5 | 160 |
| 06 | கா. சஜித்தன் | 5 | 159 |
| 07 | ச. ருவேதிகா | 5 | 156 |
| 08 | சு. டக்ஷிகா | 5 | 155 |
| 09 | வி.விஷாலி | 5 | 154 |
| 10 | சு. கிருசிலக்சானி | 5 | 153 |
| 11 | சி. ஆகாஷ் | 5 | 150 |
| 12 | உ. புவனப்பிரியா | 5 | 171 |
| 13 | ச. டிலக்ஷான் | 5 | 153 |

# க.பொ.த.(சா/த) - 2015

| இல | பெயர் | தரம் | பெறுபேறு |
|---|---|---|---|
| 1 | பே. வினோஜன் | 11 | 9 -A |
| 2 | சௌ. கனேஷிகா | 11 | 8 -A,1-B |

# பல்கலைக்கழக அனுமதி

01. செல்வி. S. லேவண்யா

02. செல்வி. J. டுபாசினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதீபா பிரபா விருது – 2014

01 திரு.க. ரவிதாஸ் அதிபர்

02 திருமதி.ச. இராமநாதன் ஆசிரியர்

03 திரு.அ. அதிஸ்டலிங்கம் ஆசிரியர்

| இல | போட்டி | நிலை | ஆண்டு | விடயம் |
|---|---|---|---|---|
| 01 | வாசிப்பு மாதம் | 1 | 2015 | நுலகச் செயற்பாடு |
| 02 | உற்பத்தித்திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (1C SCHOOL) வலயம் | 1<br>1 | 2012 | சிறந்த ஆரம்பப்பிரிவு<br>சிறந்த முகாமைத்துவம் |
| 03 | சிறந்த ஆய்வுகூடச் செயற்பாடு | 4 | 2014 | சிறந்த ஆய்வுகூடச் செயற்பாடு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி/கலைமகள் மகா வித்தியாலயம் பரிசளிப்பு விழா 2016 பாடரீதியாக பரிசுபெறுவோர் விபரம்

| இல | பெயர் | வகுப்பு | நிலை | பாடரீதியாக |
|---|---|---|---|---|
| 01 | ச. ருவேதிக்கா | 6 | 1<br>2 | தமிழ், குடியியல்<br>விஞ்ஞானம் |
| 02 | சு. டில்ஷாந் | 6 | 1<br>2<br>3 | தமிழ்<br>புவியியல், P.T.S<br>வரலாறு, சுகா |
| 03 | ச. டர்சன் | 6 | 1<br>2<br>3 | கணிதம், விஞ்ஞானம், சைவம், புவியியல், சுகா., P.T.S<br>தமிழ், வரலாறு, சங்கீதம்<br>ஆங்கிலம் |
| 04 | வி. நிதுர்ஷிகா | 6 | 1<br>2<br>3 | ஆங்கிலம், சங்கீதம்<br>சைவம், குடியியல்<br>தமிழ், வரலாறு |
| 05 | ஜெ.டெமிஸ்ரன் | 6 | 1<br>2<br>3 | கிறிஸ்தவம், வரலாறு<br>கணிதம், ஆங்கிலம், சுகா.<br>புவியியல் ,P.T.S |
| 06 | வி. விஷாலி | 6 | 3 | விஞ்ஞானம், கணிதம், நடனம் |
| 07 | சு. டக்ஷிகா | 6 | 1<br>3 | நடனம்<br>சைவம் |
| 08 | இ. இந்துஜா | 6 | 1 | கத்தோலிக்கம் |
| 09 | யோ. விதுர்ஷிலா | 6 | 2 | கத்தோலிக்கம் |
| 10 | றொ. போல்றினோசன் | 6 | 3 | கத்தோலிக்கம், P.T.S |
| 11 | இ. கிறிஸ்டினா | 6 | 2<br>3 | கிறிஸ்தவம்<br>குடியியல் |
| 12 | நா. சுாமினி | 6 | 3 | கிறிஸ்தவம் |
| 13 | ஜெ.அருண்தாஸ் | 6 | 3 | சங்கீதம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | பெயர் | வகுப்பு | நிலை | பாடரீதியாக |
|---|---|---|---|---|
| 14 | சு. கிறிஷிலக்ஷானி | 6 | 2 | நடனம் |
| 15 | ஞா. நிதர்சனா | 7 | 1<br>2<br>3 | தமிழ், கணிதம், விஞ்ஞான்னம், ஆங்கிலம், வரலாறு, புவியியல், சங்கீதம்<br>சுகா., P.T.S,.L.C.<br>சைவம் |
| 16 | ஜெ. கிருஷாந்தன் | 7 | 2 | தமிழ் |
| 17 | த. கீர்த்தனா | 7 | 1<br>2<br>3 | L.C.<br>கணிதம், சைவம்<br>தமிழ், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், P.T.S. |
| 18 | வே. தனுஷா | 7 | 1<br>3 | சைவம், நடனம்,சுகா<br>தமிழ், L.C. |
| 19 | வே. லக்ஷியா | 7 | 2<br>3 | ஆங்கிலம், நடனம்<br>கணிதம் |
| 20 | பு. சுஜித்தன் | 7 | 2 | விஞ்ஞானம், சங்கீதம் |
| 21 | ஞா.செசோமி | 7 | 1<br>3 | கத்தோலிக்கம்,P.T.S.<br>ஆங்கிலம் |
| 22 | அ. அல்பின்சிபி | 7 | 2 | கத்தோலிக்கம் |
| 23 | க. பிலிப்பெசில் | 7 | 3 | கத்தோலிக்கம் |
| 24 | ஜெ.செரினாகிறேஸ் | 7 | 1 | கிறிஸ்தவம் |
| 25 | எஸ்.சிந்துஜன் | 7 | 2 | கிறிஸ்தவம் |
| 26 | டே. அம்சநாத் | 7 | 2 | வரலாறு, புவியியல் |
| 27 | ம. நாமிக்கா | 7 | 3 | சங்கீதம், சுகா. |
| 28 | சூ. மீரா | 7 | 3 | நடனம் |
| 29 | ச.காவிந்தபிரசன்னா | 8 | 1 | திமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், கிறிஸ்தவம், வரலாறு, புவியியல், சங்கீதம், சுகாதாரம், L.C ,P.T.S |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | பெயர் | வகுப்பு | நிலை | பாடரீதியாக |
|---|---|---|---|---|
| 30 | ச. திவ்வியா | 8 | 2<br>3 | தமிழ், ஆங்கிலம்<br>சங்கீதம், சுகா. ,P.T.S |
| 31 | உ. சலோமி | 8 | 3 | தமிழ் |
| 32 | ர. நிஷேவித் | 8 | 2<br><br>3 | கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், L.C<br>ஆங்கிலம், கிறிஸ்தவம் |
| 33 | யோ. ஜஸ்ரிலா மேரி | 8 | 1<br>2<br>3 | கத்தோலிக்கம்<br>சங்கீதம், சுகா., P.T.S<br>கணிதம், ஆங்கிலம், வரலாறு |
| 34 | த. ராகுல் | 8 | 1<br>3 | சைவம்<br>விஞ்ஞானம் |
| 35 | தி.திவ்வியன் | 8 | 2 | சைவம , L.C |
| 36 | சி.சஞ்சிதா | 8 | 3 | சைவம் |
| 37 | அ.ஜனித் | 8 | 2 | கத்தோலிக்கம் |
| 38 | றொ.ரிஷாந்தினி | 8 | 3 | கத்தோலிக்கம் |
| 39 | வி.மனோவா | 8 | 2 | கிறிஸ்தவம் |
| 40 | சி.சுதேஸ்வரன் | 8 | 3 | புவியியல் |
| 41 | ச. மதிவதனி | 8 | 3 | L.C |
| 42 | வே.வபிஷா | 9 | 1<br>2<br>3 | தமிழ்,<br>சைவம்,<br>நடனம், P,T.S., சுகா |
| 43 | சா. அஸ்வினி | 9 | 1<br>2<br>3 | புவியியல்<br>தமிழ்,சங்கீதம் , L.C<br>விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு |
| 44 | செ. ய்ெமகாந் | 9 | 1<br>2<br>3 | கணிதம், சைவம், வரலாறு, சங்கீதம், சுகா<br>ஆங்கிலம், P.T.S.<br>தமிழ், புவியியல் |
| 45 | இ. லதுசனன் | 9 | 2 | கணிதம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | பெயர் | வகுப்பு | நிலை | பாடரீதியாக |
|---|---|---|---|---|
| 46 | ச. லுக்ஷிகா | 9 | 1<br>3 | விஞ்ஞானம், நடனம்<br>கணிதம் |
| 47 | செ. மேபிள்ரூத் | 9 | 1<br>2<br>3 | கத்தோலிக்கம், P.T.S. , L.C<br>விஞ்ஞானம், நடனம், சுகா<br>வரலாறு |
| 48 | மோ. பிரதீபா | 9 | 1 | ஆங்கிலம் |
| 49 | லி.யுசிதா | 9 | 2<br>3 | வரலாறு,புவியியல்<br>சைவம் |
| 50 | பி.கிசோதினி | 9 | 2 | கத்தோலிக்கம் |
| 51 | ஜெ. டென்சிலேற்றா | 9 | 1 | கிறிஸ்தவம், L.C |
| 52 | க.வில்லியம் ஜோன் | 9 | 2 | கிறிஸ்தவம் |
| 53 | கு. சலோமி | 9 | 3 | கிறிஸ்தவம் |
| 54 | மு. லக்ஷிகா | 9 | 3 | சங்கீதம் |
| 55 | சௌ. சேலக்ஷிகா | 10 | 1<br><br>2 | தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சைவம், வரலாறு, வர்த்தகம், ICT<br>இலக்கியநயம், |
| 56 | க. ரீத்திக்கா | 10 | 2<br><br>3 | தமிழ், கணிதம், ஆங்கிலம், சைவம், வரலாறு, வர்த்தகம், இலக்கியநயம், ICT<br>விஞ்ஞானம் |
| 57 | சு. கிருஷாந்தினி | 10 | 2<br>3 | நடனம்<br>தமிழ், சைவம், சுகாதாரம், |
| 58 | தி.பிரவீன் | 10 | 2<br>3 | கணிதம், விஞ்ஞர்னம்<br>ஆங்கிலம், வரலாறு, ICT |
| 59 | யோ. கிறிஸ்டிலா | 10 | 1 | கத்தோலிக்கம், நடனம் |
| 60 | அ. ஜோய்பிரவீன் | 10 | 2 | கத்தோலிக்கம் |
| 61 | ரொ. கிஷாலினி | 10 | 3 | கத்தோலிக்கம் |
| 62 | வி.ஹெப்சிபா | 10 | 1 | கிறிஸ்தவம், மனையியல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | பெயர் | வகுப்பு | நிலை | பாடரீதியாக |
|---|---|---|---|---|
| 63 | ர. அலோசன் | 10 | 2<br>3 | கிறிஸ்தவம்<br>சங்கீதம், ICT |
| 64 | வி. ஜெரோன் | 10 | 3 | கிறிஸ்தவம் |
| 65 | கு. நிதுர்சன் | 10 | 1<br>3 | சுகாதாரம்<br>வர்த்தகம் |
| 66 | அ. யோனிசா | 10 | 1<br>2 | புவியியல், இலக்கியநயம்<br>சுகாதாரம் |
| 67 | பு. டிலானி | 10 | 1<br>2 | சங்கீதம்,<br>புவியியல், மனையியல் |
| 68 | கா.ஹரிசாந் | 10 | 3 | புவியியல், இலக்கியநயம் |
| 69 | சி.பபிஜான் | 10 | 2 | சங்கீதம் |
| 70 | ர.கனிஸ்டன் | 10 | 1 | விவசாயம் |
| 71 | ஜெ.யுபிசன் | 10 | 2 | விவசாயம் |
| 72 | ம. தோகீசன் | 10 | 3 | விவசாயம் |
| 73 | ஜெ.ரெயுமாகிறேஸ் | 10 | 3 | மனையியல் |
| 74 | சௌ. கனேசிகா | 11 | 1 | தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சைவம், வரலாறு, வர்த்தம், இலக்கியநயம், I.T |
| 75 | பே. வினோஜன் | 11 | 1<br>2<br><br>3 | சுகாதாரம்<br>தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு, வர்த்தம், இலக்கியநயம், I.T<br>சைவம் |
| 76 | ல. சிவசாந் | 11 | 1<br>2<br>3 | சங்கீதம்<br>சைவம் ,சுகாதாரம்<br>தமிழ், வர்த்தகம், |
| 77 | ஜெ. கிருபா | 11 | 3 | கணிதம், இலக்கியநயம்,சுகா. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | பெயர் | வகுப்பு | நிலை | பாடரீதியாக |
|---|---|---|---|---|
| 78 | ஜெ. ஜெசின்ருவ் | 11 | 1<br>2<br>3 | கத்தோலிக்கம்<br>சங்கீதம்<br>விஞ்ஞானம், ஆங்கிலம், சுகா. |
| 79 | இ. சஞ்சீவி | 11 | 2<br>3 | கத்தோலிக்கம்<br>புவியியல் |
| 80 | றொ. சாலினி | 11 | 3 | கத்தோலிக்கம் |
| 81 | ப. ரொஷான்மிஷேல் | 11 | 1 | கிறிஸ்தவம் |
| 82 | க. ரெபேக்கா | 11 | 2 | கிறிஸ்தவம் |
| 83 | தா. பமிலா | 11 | 3 | கிறிஸ்தவம் |
| 84 | சி. மதுசாலினி | 11 | 1<br>3 | புவியியல்<br>வரலாறு |
| 85 | சி. சிவகரிசன் | 11 | 2 | புவியியல் |
| 86 | ச. தனுஜா | 11 | 2<br>3 | விவசாயம்<br>சங்கீதம் |
| 87 | கெ.ஹேனுகா | 11 | 1 | நடனம் |
| 88 | வி.நிவேக்கா | 11 | 2 | நடனம் |
| 89 | சு.டிலானி | 11 | 3 | நடனம் |
| 90 | சே.கிதியோன் | 11 | 1 | விவசாயம் |
| 91 | பி. பரேம்லக்ஷ்மன் | 11 | 3 | விவசாயம் |
| 92 | ர.ராஜினி | 11 | 1 | மனையியல் |
| 93 | ஆ.திவ்வியா | 11 | 2 | மனையியல் |
| 94 | ச.சுஜிகலா | 11 | 3 | மனையியல் |
| 95 | இ. ஜசிந்தன் | 11 | 2 | I.T. |
| 96 | ஜீ. கெவிசியான் | 11 | 3 | I.T. |
| 97 | சௌ. விதுர்ஷிகா | 12 | 1<br>2<br>3 | தமிழ், ஆங்கிலம், புவியியல், ICT<br>இந்து நாகரிகம்<br>பொது அறிவு |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | பெயர் | வகுப்பு | நிலை | பாடரீதியாக |
|---|---|---|---|---|
| 98 | ம. சகீர்த்தனா | 12 | 1<br>2 | இந்து நாகரிகம்<br>பொதுஅறிவு, புவியியல் |
| 99 | ர. கவியரசி | 12 | 3 | தமிழ் |
| 100 | போ. பிரவீனா | 12 | 1<br>2<br>3 | கிறிஸ்தவ நாகரிகம்<br>ICT, ஆங்கிலம்<br>புவியியல் |
| 101 | வி.லுதர்ஷனா | 12 | 1<br>3 | பொதுஅறிவு<br>ICT |
| 102 | உ. ஆகாஷ்குமார் | 12 | 3 | இந்துநாகரிகம் |
| 103 | லி.ரெவோல்டன் | 12 | 2 | கிறிஸ்தவநாகரிகம் |
| 104 | க. கஜந்தினி | 13 | 1<br>2 | புவியியல்<br>தமிழ், இந்துநாகரிகம் |
| 105 | இ.ரம்மியா | 13 | 1<br>2<br>3 | தமிழ், பொதுஅறிவ்<br>புவியியல்<br>இந்துநாகரிகம் |
| 106 | ச. சர்மிளா | 13 | 1<br>3 | கிறிஸ்தவநாகரிகம், ஆங்கிலம்<br>புவியியல், பொதுஆறிவு |
| 107 | பு. கீர்த்திகா | 13 | 1<br>3 | இந்துநாகரிகம்<br>தமிழ் |
| 108 | ஜெ. ஸ்ரீபன் | 13 | 2 | பொதுஅற்வு |
| 109 | மு.கிறிஸ்டிலா | 13 | 2 | கிறிஸ்தவநாகரிகம், |
| 110 | இ.லக்ஷனா | 13 | 1 | தமிழ், புவியியல், இந்துநாகரிகம் |
| 111 | ச.லுக்ஷிகா | 13 | 2<br>3 | தமிழ், புவியியல்<br>இந்துநாகரிகம் |
| 112 | செ.டிநோஜினி | 13 | 2<br>3 | இந்துநாகரிகம்<br>தமிழ், புவியியல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















Print by: SS Digital's - 0777 695 635

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org